

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லா & புதுக்கோட்டை சமஸ்தானம் :

ராயல் டாக்கி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ், மதுரை

மலபார் உரிமைகள் : வர்மா பிக்சர்ஸ், திருப்பணித்துறை

புக்கிங்குகளுக்கு : சந்துரு பிலிம்ஸ், எர்ணாகுளம்

ஆந்திராவுக்கு : பூர்ணா பிக்சர்ஸ், பெஜவாடா


பேனா
உலகில்
ஒரு அதிசயம்!
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பேனா இதுதான். ஐந்தே ரூபாய்க்கு மிகவும் அழகாய் செய்யப்பட்ட கோல்டன் பிளாட்டினம் பௌண்டன் பேனா என்றால் மிகவும் மலிவல்லவா? கவர்ச்சிகரமான ஐந்து நிறங்களில் வருகிறது. அடைவதைத் தடுத்து சரளமாக எழுதச் செய்வதில் பெயர் பெற்ற "தங்கம் போன்ற" முனையுடன் கூடியது. மிகவும் பொருத்தமாகவும் அழகாகவும் இயந்திரத்தினால் வார்க்கப்பட்ட நிக்கல் ஸில்வர் மூடியுடன் கூடியது. உங்களுக்கேற்ற பேனா இதுதான்!
நிக்கல் ஸில்வர் மூடி
ஐந்து நிறங்கள்
ரூ. 5/-
இங்கிலாந்தில் செய்யப்பட்டது
புதிய கோல்டன்
Platignum
REGD
"தங்கத்தைப் போன்றது"


எல்லோருக்கும் கிடைக்குமளவு
'தௌராலா
க்யூப் சர்க்கரை
ஏராளமாகக்
கிடைக்கிறது
உங்கள் கடைக்காரரிடம் அல்லது டி.ஸி.எம்.
வியாபாரியிடம் விசாரியுங்கள்.



உங்கள் குழந்தைகள் கைவைக்கும்
ஒவ்வொரு தளத்திலுமிருக்கும்
அழுக்கினாலும் கிருமிகளாலும்
அபாயம் ஏற்படும்!
LIFEBUOY
SOAP
அவர்கள் லைப்பாய்சோப்பினால் அடிக்கடி சுத்தம்
செய்துகொள்ளும்படி பார்த்துக்கொள்ளுங்கள்!
லைப்பாய் சோப்
அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து
அவர்களைக் காப்பாற்றுகிறது
L. 102-111 TM

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 46 | ஜூன் 13 | சர்வதாரி வைகாசி 31

"பச்சைத் தழையைக் கொண்டு பஞ்சத்தைப் போக்கலாம்!" என்பது நமது சென்னை மாகாண விவசாய இலாகாவின் சித்தாந்தம். பஞ்சத்தைப் போக்குவதற்கு உணவுப் பொருள் அதிகம் விளைய வேண்டும். உணவுப் பொருள் அதிகம் விளைய நில வளம் பெருக வேண்டும். நில வளம் பெருக நல்ல உரம் நிறைய வேண்டும். செயற்கை ரசாயன உரங்கள் இப்போது நமக்குச் சுலபமாய்க் கிட்டுவதில்லை. நாமே நிறைய உண்டுபண்ணிக் கொள்ளக் கூடிய இயற்கை உரம் பசுந் தழைதான். "ஆகையால், விவசாயிகளே! பசுந் தழையை உண்டாக்கிப் பஞ்சத்தைப் போக்குங்கள்!" என்று விவசாய டைரக்டர் ஸ்ரீ எம். எஸ். சிவராமனும் அவருடைய தலைமையில் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்களும் தீவிர பிரசாரம் செய்து வருகிறார்கள். இதை யொட்டிச் சென்னை சர்க்கார் விவசாயிகளுக்கு ஏராளமான பசுந் தழை விதை விநியோகிக்கப் போகிறார்கள். ஐந்து பிர்க்காக்களில் உள்ள சொற்ப நில விவசாயிகளுக்கு இலவசமாகப் பசுந் தழை விதை கொடுத்து உதவப் போகிறார்கள்.



பச்சைத் தழைகளிலும் சிற்சில தழைகள்தான் நல்ல உரமாகின்றன. அவற்றில் சுலபமாகவும் சீக்கிரமாகவும் நிறைய உற்பத்தி செய்யக்கூடியவை சிலதான் உண்டு. இந்த அம்சங்கள் எல்லாம் பொருந்தியது சணல். ஈர நிலத்தில் நெருங்க விதைத்தால் காடாக மண்டிவிடும். இரண்டு மாதத்தில் ஐந்து அடி உயரம் வளரும். சணல் செடிகள் புஷ்பித்திருக்கும்போது பார்க்க அற்புதமான காட்சி. பச்சை இலைகளும் பொன்னிறப் பூக்களும் கண்களைக் கவரும். செடிகளை வெட்டி நன்செய் நிலத்துக்கோ புன்செய் நிலத்துக்கோ போடலாம். தென்னை முதலிய தோட்டக்கால் பயிர்களுக்கும் உரமாக உபயோகிக்கலாம். அல்லது இன்னும் சில காலம் செடிகளை வெட்டாமல் விட்டு வைத்து விதைகள் எடுக்கலாம். செடிகள் வளர்ந்த நிலமும் பயனடையும்.

வெய்யில் தகிக்கின்ற இந்த வேனிற் காலத்தில் நேயர்களின் கண்ணுக்குக் குளிர்ச்சியாயிருக்கட்டும் என்று சணல் பூத்திருக்கும் அழகிய இயற்கைக் காட்சியை அட்டையில் வெளியிட்டிருக்கிறோம். தென்னங்கன்றுக்குப் பக்கத்தில் நிற்பவர் பசுந்தழைப் பிரசாரத்தில் தீவிரமுள்ள ஒரு ஜில்லா விவசாய அதிகாரி. சணலை எப்படி உரமாக உபயோகப்படுத்துவது, எப்படி விதை சேகரிப்பது என்று விவசாயிக்கு எடுத்துச் சொல்ல வந்திருக்கிறார்.

கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார். | இதழ் 46

என்ன சேதி?


தூரத்தில் இல்லை!


என்று எமதன்னை கை விலங்குகள் போகும் என்று ஏங்கினார் நமது கவிச் சக்கரவர்த்தி. அன்னையின் கை விலங்குகள் சுக்கு நூறாய் நொறுங்கி அந்த மகானின் ஆத்மா சாந்தி அடைந்தது. "ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்" என்றும் அதே மகா கவிதான் பெருமிதத்துடன் கர்ஜித்தார். அந்த வாக்கும் நிறைவேறும் காலம், அதாவது பாரத நாடு பல்வேறு சாதன உற்பத்தியிலும் சிறந்து விளங்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

ஆசியா கண்டத்தின் பெரும்பாலான தேசங்களும் அரசியல் சுதந்திரம் பெற்றுள்ளன. பொருளாதாரத் துறையில் சுதந்திரம் பெறவேண்டும். மேற்படி துறையில் பிற நாடுகளின் ஆதிக்கம் இருக்கும் வரையில் எந்த நாடும் அரசியல் சுதந்திரத்தின் பூரண பலனை அனுபவிக்க முடியாது. அரசியல், பொருளாதாரத் துறைகளில் உலக நாடுகளை உய்விப்பதற்காக என்று ஏற்பட்ட ஐக்கிய நாடுகள் சபை வெற்றி பெற வேண்டுமாயின், பொருள் உற்பத்தியில் பிற்பட்டு நிற்கும் நாடுகளுக்குப் பிரிட்டன், அமெரிக்கா போன்ற வல்லரசுகள் யந்திர சாதனங்களை அனுப்பி உதவ வேண்டும். அவ்வாறு உதவுவதில் ஆதிக்க நோக்கம் எள்ளளவும் இருக்கக் கூடாது. உலகத்தின் க்ஷேமம் ஆசியா நாடுகளின் க்ஷேமத்தையே பொறுத்திருக்கிறது என்பதை உணர்ந்து உதவ வேண்டும். — இந்த விஷயத்தை உதக மண்டலத்தில் கூடிய ஆசியா பொருளாதார மகாநாட்டை ஆரம்பித்து வைத்த பண்டித ஜவாஹர்லால் நேரு தெளிவாக எடுத்துக் கூறினார். அந்த மகாநாட்டில் கலந்து கொண்ட பிரிட்டிஷ் பிரதிநிதி ஆசியா நாடுகளுக்குப் பிரிட்டன் தன்னால் இயன்ற உதவியை அளிக்கும் என்று பேச்சளவிலாவது சொன்னார். ஆனால் அமெரிக்கப் பிரதிநிதியோ அத்தகைய ஆதரவு வார்த்தை கூடச் சொல்லாமல் ஏதேதோ கதை அளந்தார். ஐரோப்பிய நாடுகளின் உத்தாரணத்துக்காக கோடானுகோடி தொகை கொடுத்து உதவுவதில் கண்ணுங் கருத்துமாயிருக்கும் அமெரிக்கா, ஆசியா நாடுகளுக்கு உதவி செய்வதில் உற்சாகம் காட்டாததன் மர்மம் என்ன? பொருளாதார ஆதிக்க நோக்கம் கொண்டு உதவி புரிவதை ஆசியா நாடுகள் ஏற்றுக் கொள்ள முடியாது என்று ஜவாஹர்லால்ஜி தெளிவாக்கியதுதான் போதும்.

மற்றொரு அதிசயம்

ஜனாப் கூரோ டிஸ்மிஸ் செய்யப்பட்டதை யொட்டிச் சமீபத்தில் நாம் எழுதியபோது, பாகிஸ்தானில் இன்னும் என்னவெல்லாம் அதிசயங்கள் நடைபெறுமோ என்று குறிப்பிட்டிருந்தோம். இப்போது அங்கு மற்றொரு அதிசயம் நடந்திருக்கிறது. வங்காளத்தின் மாஜி மந்திரி ஜனாப் சுஹ்ரவர்த்தியைக் கைது செய்து இனி அவர் கிழக்கு பாகிஸ்தானுக்குள்ளே பிரவேசிக்கக் கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஜனாப் சுஹ்ரவர்த்தியின் பூர்வோத்தரங்களும் அவர் இரண்டு வருஷத்துக்கு முன்னால் செய்த அட்டகாசங்களும் யாவரும் அறிந்தவையே. முஸ்லிம் லீக் வீரர்களிலும் பாகிஸ்தான் பக்தர்களிலும் அவர் பிரதம ஸ்தானம் வகித்து வந்தார். அவர் இப்போது ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை உபதேசம் செய்வது எத்தனை தூரம் மனப் பூர்வமானது என்பது சந்தேகத்துக்கு இடம். அப்படிப்பட்ட சுஹ்ரவர்த்தியின் ஒற்றுமை முயற்சிக்குக் கூடத் தடை ஏற்பட்டிருக்கிறது என்பது பாகிஸ்தானின் பலவீனத்தை நன்கு எடுத்துக் காட்டுகிறதல்லவா?


"எது எப்படியானாலும் ஹைதராபாத் தனக்குள்ள தனி கௌரவத்தை இழக்கக் கூடாது" என்கிறார் காஸிம் ராஸ்வி. மயில் வேஷம் போட்ட காக்கை மயிலைப் போல் எவ்வளவு காலம் நடக்க முடியும்?
காஸிம் ராஸ்வி


ஐ.நா. சபையில் அடுத்த பிரச்னை
பாலஸ்தீனத்தைப் பற்றி நீங்கள் செய்த சமரசத் தீர்ப்பால் என்னுடைய உலகத்தில் இட நெருக்கடி அதிகமாகி யிருக்கிறதே. இதற்கு என்ன சொல்கிறீர்கள்?
ஐ.நா. சபை
எமதர்மராஜன்

ஒரு இடம்! ஒரு இடம்!
படிப்பதற்கு ஓர் இடம்!

இந்த வேடிக்கையைக் கேளுங்கள். இந்தியாவிலிருந்து, சென்னை மாகாணத்திலிருந்து, ஒரு தகுதி வாய்ந்த இளைஞன் இங்கிலாந்தில் மேற் படிப்புக்குச் செல்ல விரும்பினால் கொஞ்சம் முயற்சியின் பேரில் அங்கே அவனுக்கு இடம் கிடைத்து விடுகிறது. உலகப் பிரசித்தி பெற்ற ஆக்ஸ்போர்டு கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலைகளில் இடம் கிடைக்கிறது. வைத்திய கலாசாலைகளில் இடம் கிடைக்கிறது. பாரிஸ்டர் பயிற்சி பெறுவதற்கு இடம் கிடைக்கிறது. என்ஜினியரிங் பயிற்சிக்கு இடம் கிடைக்கிறது.

இங்கிலாந்தில் படிப்பதற்கு இடம் கிடைப்பது போலவே அமெரிக்காவிலும் இடம் கிடைக்கிறது. அமெரிக்கக் கோடீசுவரர்களின் புதல்வர்கள் படிக்கும் ஹார்வர்டு சர்வ கலாசாலையில் இந்திய மாணாக்கர்கள் இடம் சம்பாதித்துக் கொள்ளலாம்.

ஆனால் சென்னை மாகாணத்தில் பிறந்த இளைஞன் ஒருவன் சென்னை மாகாணத்தில் உள்ள என்ஜினியரிங் கலாசாலையிலோ வைத்திய கலாசாலையிலோ இடம் பெறுதல் அரிது! மானிடராய்ப் பிறத்தலையும் மற்றும் ஔவையார் கூறியிருக்கும் எல்லா அரிய விஷயங்களையும் விட அரிதரிது!!

* * *

சென்ற வாரத்தில் எஸ். எஸ். எல். சி. பரீட்சை முடிவுகள் வெளியாகியிருக்கின்றன. மொத்தப் பரீட்சைக்குப் போனவர்கள் ஐம்பத்துநாலாயிரத்துச் சொச்சம் பேர். பரீட்சையில் தேறிச் சர்வகலாசாலையில் சேருவதற்குத் தகுதி வாய்ந்தவர்கள் என்று அறிவிக்கப்பட்டிருப்பவர்கள் சுமார் இருபத்தாறாயிரம் பேர். இந்த இருபத்தாறாயிரம் இளைஞர்களும் (பாலர்கள் என்று கூடச் சொல்லலாம்) மேலே என்ன செய்யப் போகிறார்கள்? ஆயிரக்கணக்கானவர்கள் கலாசாலைகளில் இடம் பிடிக்கும் முயற்சி தொடங்குவார்கள். 'நல்ல காலேஜ்' என்று பெயர் வாங்கிய காலேஜுகளுக்கு முதலில் ஓடுவார்கள். அத்தகைய காலேஜுக்கு ஆயிரக்கணக்கில் விண்ணப்பங்கள் வந்து குவியும். காலேஜ் அதிகாரிகள் என்ன செய்ய முடியும்? சென்ற வருஷத்தில் ''அறுபது மார்க் வாங்கியவர்களைத்தான் சேர்ப்போம்'' என்று சொன்னவர்கள் இந்த வருஷத்தில் ''எழுபது மார்க் வாங்கியவர்களைத்தான் சேர்ப்போம்'' என்பார்கள். எழுபது மார்க் வரம்பை ஒரு வேளை எண்பது மார்க்காகச் செய்தாலும் செய்து விடுவார்கள்.

குறைவான மார்க் வாங்கிய பிள்ளைகள் மற்றக் காலேஜுகளுக்கு ஓடுவார்கள். ஒவ்வொரு காலேஜிலும் வடி கட்டல் வேலை நடைபெறும். இதற்கிடையில் பெற்றோர்கள் அங்கு மிங்கும் பறந்து விழுந்து ஓடுவார்கள். சிபார்சுகள் பிடிக்கவும் சிபார்சுக் கடிதங்கள் சம்பாதிக்கவுந்தான்! இந்த மாதத்தில் காலேஜுக் கமிட்டி அங்கத்தினர்களுக்கும் கலாசாலைகளின் பிரின்ஸ்பால்களுக்கும் தலைகால் தெரியாது! ''அது எப்படி, சார்? அறுபத்தைந்து மார்க் வாங்கிய பையனைச் சேர்க்காமல் நாற்பத்திரண்டு மார்க் வாங்கியவனை எப்படிச் சேர்க்க முடியும்?'' என்பார் பிரின்ஸிபால். ''எல்லாம் சேர்க்கலாம், சார்! நீங்கள் மனது வைத்தால் சேர்க்கலாம்!'' என்பார் சிபார்சுக்கு வந்தவர்.

இப்படியாக, வருகிற ஒரு மாத காலம் ''சர்வம் சிபார்சு மயம் ஜகத்'' தாக விளங்கும். மாதம் முடிந்த பிறகு பார்த்தால், எஸ். எஸ். எல். சி. தேறிய இருபத்தாறாயிரம் மாணாக்கர்களில் சுமார் ஐயாயிரம் பேருக்குத்தான் காலேஜுகளில் இடம் கிடைத்திருக்கும். மற்ற இருபத்தோராயிரம் பேர் என்ன செய்வார்கள்? சிலர் தலையில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். சிலர் ஜாதகத்தை எடுத்துப் பார்ப்பார்கள். சிலர் உத்தியோக வேட்டை தொடங்குவார்கள்.

* * *

காலேஜில் இரண்டு வருஷம் படித்து 'இன்டர்மீடியட்' என்னும் இடை வகுப்பில் தேறிய மாணாக்கர்களின் இடம் பிடிக்கும் போராட்டம் அதி தீவிரமாயிருக்கும்.

இன்டர் மீடியட் தேறிய மாணாக்கர்களில் பலர் முதன்மையாக என்ஜினியரிங் காலேஜ் அல்லது மெடிகல் காலேஜில் இடம் தேடுவார்கள். இவர்களோடு போட்டி போடுவதற்கு பி. ஏ. பாஸ் செய்த மாணாக்கர்கள் பலரும் வந்துவிடுவார்கள்.

ஆனால் இன்டர்மீடியட் தேறிய மாணாக்கனாயிருந்தாலும் சரி, பி. ஏ. பரீட்சையில் தேறியவனாயிருந்தாலும் சரி, மேற்படி கலாசாலைகளில் சுலபமாக இடம் பெற்று விட முடியாது.

சாதி, குலம், மதம், ஜில்லா ஆகிய பரீட்சைகளிலும் அந்த மாணாக்கன் தேறியாக வேண்டும்!!!

இந்தக் கட்டத்திலேதான் பிள்ளைகள் பலர் தாங்கள் பிறந்த ஜில்லாவைப் பற்றி நொந்து கொள்ள நேரிடுகிறது!

வைத்திய கலாசாலைக்கோ என்ஜினியரிங் காலேஜுக்கோ விண்ணப்பம் போடும்போது, "ஏண்டா இந்தத் தஞ்சை ஜில்லாவில் பிறந்தோம்!" என்று கஷ்டப்படுகிறார்கள். "கடப்பை அல்லது கர்நூலில் பிறந்திருந்தால் எவ்வளவு சௌகரியமாயிருக்கும்?" என்று கருதுகிறார்கள். சிலர் தங்களுடைய சித்தப்பாவோ, ஒன்றுவிட்ட மாமாவோ ராயலசீமையில் முன்னொரு சமயம் உத்தியோகம் பார்த்ததை ஞாபகப்படுத்திக் கொண்டு தங்கள் ஜில்லா கடப்பை அல்லது பெல்லாரி என்று போட்டு வைக்கிறார்கள்!

அடுத்தபடியாக, சாதி — மதப் பாகுபாடு மாணவர்களைப் பீடிக்கிறது. மெடிகல் காலேஜ் — என்ஜினியரிங் காலேஜ்களுக்கு மாணாக்கர் சேர்க்கும் விஷயத்தில் அனுசரிக்கப்படும் வகுப்புவாரி முறை பின்வருமாறு:—

ஹிந்து பிராமணரல்லாதார் 6, பிராமணர் 2, ஹரிஜனர் 2, இந்தியக் கிறிஸ்தவர் 1, முஸ்லிம் 1, பின்னணி ஹிந்துக்கள் 2.

இந்த விகிதாசாரம் இம்மாகாணத்து சர்க்கார் உத்தியோகங்களில் அனுஷ்டிக்கப்படுகிறதாம். மெடிகல் காலேஜ்—என்ஜினியரிங் காலேஜில் இடங்கொடுக்கும் விஷயத்திலும் அதே முறை அனுசரிக்கப்படும் என்று சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

• • •

சென்ற வாரத்தில் இந்திய தேசத்தின் உத்தமோத்தமத் தலைவர்,— பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு,—உதகமண்டலத்துக்கு விஜயம் செய்திருந்தார். பாரதத் தாயின் கண்மணிக் கொப்பான அம் மாபெருந் தேசபக்தரைத் தரிசிக்கவும் அவருடைய பொன்மொழிகளைக் கேட்கவும் கோயமுத்தூர் ஜில்லா வாசிகள் கொடுத்து வைத்திருந்தார்கள்.

கோயமுத்தூரில் கூடியிருந்த ஜன சமுத்திரத்தின் மத்தியில் ஜவாஹர்லால் ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். டில்லியில் அமைதி நாட்டிய சென்னை வீரர்களையும் காஷ்மீரில் வீரப் போர் புரியும் சென்னைப் படைகளையும் புகழ்ந்து பாராட்டினார். இவை யெல்லாம் நமக்கு உற்சாக மளித்தன.

ஆனால் சில குறைபாடுகளையும் எடுத்துக் காட்டினார். பிராமணர்-பிராமணரல்லாதார் வேற்றுமைகளை விட்டொழிக்க மாட்டீர்களா என்று கேட்டார். சென்ற சில வருஷங்களில் சென்னை மாகாணம் தேசிய முன்னணியில் நில்லாமல் பின்னடைந்திருப்பதையும் குறிப்பிட்டார். பாஷாவாரி மாகாணப் பிரிவினை சம்பந்தமாக இவ்வளவு ஆத்திரமும் பரபரப்பும் ஏன் என்று கேட்டார்.

மாகாணப் பிரிவினை விஷயத்தில் ஆந்திரத் தலைவர்கள் ஆத்திரங் காட்டிக் கிளர்ச்சி செய்ததை நாம் அறிவோம். ஆகையால் அதைப் பற்றி ஜவாஹர்லால்ஜி குறிப்பிட்டதில் வியப்பொன்றுமில்லை.

ஆனால் பிராமணர்—பிராமணரல்லாதார் பிரச்னையைப் பற்றி அவர் ஏன் குறிப்பிட வேண்டும்? இங்கே அப்படி என்ன நடந்து வருகிறது? பிராமணரும் பிராமணரல்லாதாரும் தெருவில் நின்று சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்களா?

இம் மாகாணத்தில் பிராமணர்கள் 100-க்கு 3 பேர்; பிராமணரல்லாதார் 97 பேர். இவர்களுக்குள்ளே என்ன விதமான சண்டை நடக்க முடியும்? பிராமணரல்லாதாரின் நல்லுறவும் சிநேகமும் இருந்தால்தான் பிராமணர்கள் வாழ முடியும். அவை இருந்து கொண்டுதானிருக்கின்றன.

பிராமணர் — பிராமணரல்லாதாருக்குள் முன்னிருந்த வேற்றுமைகள் மறைந்து வருகின்றன. சாதி வேற்றுமையை வளர்க்கும் சாதனங்கள் எல்லாமும் மறைந்து வருகின்றன.

ஆலயங்களுக்குள் சாதி வேற்றுமை மறைந்து விட்டது; ஹோட்டல்களில் சாதி வேற்றுமை மறைந்து விட்டது; கிணறுகளிலும் குளங்களிலும் நதிக் கரைகளிலும் மறைந்து விட்டது. சபைகளிலும் பொதுக் கூட்டங்களிலும் மறைந்து விட்டது.

மொத்தத்தில் பொது வாழ்க்கையிலிருந்து சாதி வித்தியாசம் மறைந்து

விட்டது என்று சொல்வது மிகையாகாது. "அடியோடு மறைந்து விட்டது" என்று திட்டமாய்ச் சொல்ல முடியா விட்டாலும், "அதி சீக்கிரமாக மறைந்து கொண்டு வருகிறது" என்று சொல்லலாம்.

சர்க்கார் உத்தியோகங்களிலும் சர்க்கார் நடத்தும் கல்வி ஸ்தாபனங்களிலும் மட்டும் சாதி வேற்றுமை நிலை நாட்டப்பட்டு வருகிறது.

உத்தியோகங்களில் சாதி விகிதாசாரங்களை அனுஷ்டிப்பது சுதந்திர இந்தியாவின் பெருமைக்கு இழுக்குத் தருவதுதான். ஆனால் அதற்காவது ஓரளவு சமாதானம் சொல்லலாம்.

கல்வி ஸ்தாபனங்களில் சாதி மத விகிதாசாரங்களை அனுஷ்டிப்பதும், அது காரணமாக இளம் பிள்ளைகளின் உள்ளத்தில் விஷம் ஏறும்படி செய்வதும் நியாயம் என்று யாரும் சொல்ல முடியாது; அறிவுடைமை என்றும் சொல்ல முடியாது.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் தலைமையில் இப்போது நடந்து வரும் சென்னை மந்திரி சபை பல துறைகளில் அருமையான வேலைகளைச் செய்து வருகிறது. மற்ற மாகாணங்களுக்கு வழி காட்டியாக வேலை செய்து வருகிறது என்று சொல்வதும் மிகையாகாது.

ஆனால் கல்வி ஸ்தாபனங்களில் சாதி விகிதப்படி பிள்ளைகளைச் சேர்க்கிறார்கள் என்னும் விஷயம் ஓமந்தூர் மந்திரி சபைக்கு இந்தியா முழுவதிலும் அபகீர்த்தியை உண்டு பண்ணி வருகிறது என்பதில் சந்தேகமில்லை.

இந்த அபகீர்த்திதான் பண்டித ஜவாஹர்லால் நேருவை அவ்விதம் பேசச் செய்திருக்க வேண்டும்.

* * *

குறிப்பிட்ட ஒரு சாதியாரில் பத்துப் பேரோ இருபது பேரோ என்ஜினியரிங் காலேஜ் அல்லது மெடிகல் காலேஜில் இடம் பெறாமற் போவது ஒரு பெரிய காரியமல்ல. இதைப் பிரமாதப் படுத்துவதோ ஒரு கிளர்ச்சியாக்குவதோ விரும்பத் தகாத காரியம். இக் கலாசாலைகளில் இடம் பெறாதவர்கள் வேறு துறைகளில் இறங்கிப் பெயரும் புகழும் அடையக் கூடும்.

ஆனால் சாதி மத வேற்றுமைகளை ஒழித்துச் சம உரிமையை நிலை நாட்டுவதையே கொள்கையாகக் கொண்ட காங்கிரஸ் ஆட்சியின் கீழ் கல்விக் கூடங்களில் சாதி மத வேற்றுமையை நிலைநாட்டுவதை யாரும் சரியென்று சொல்ல மாட்டார்கள்.

சென்னையில் இப்போதுள்ள நிலைமையில் சாதி விகிதாசார முறையை மாற்றுவதினால் எதிர்பார்த்ததற்கு நேர்மாறான பலன் உண்டாகலாம். சாதித் துவேஷக் கிளர்ச்சி பலமடைந்து வளருவதற்கு அது காரணமாகக் கூடும்.

பின்னே பரிகாரம் என்னவென்றால், "படிக்க இடம் வேண்டும்" என்று கேட்கும் மாணவர்கள் எல்லாருக்கும் இடம் கிடைக்கும்படி செய்வதுதான்.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் படிக்க விரும்பும் மாணவர்களுக்குக் "காலேஜு"களில் இடம் இல்லை" என்ற பேச்சே கிடையாது.

அந்த நிலைமை சென்னை மாகாணத்திலும் ஏற்பட வேண்டும். எந்த மாணாக்கனுக்கு எந்தத் துறையில் கல்வி பயில ஆசையிருக்கிறதோ, அந்தத் துறையில் பயிற்சி பெற அவனுக்கு இடமும் வசதியும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

சாதிக்க முடியாத காரியமல்ல; சர்க்காரும் கல்வி இலாகாவும் சர்வ கலாசாலைகளும் சமூகத் தலைவர்களும் ஒத்துழைத்து முயன்றால் நிச்சயம் வெற்றி பெறலாம்.

சுதந்திர இந்தியாவை உலகத்தில் முதன்மையான தேசங்களில் ஒன்றாகச் செய்வதற்கு ஆயிரக்கணக்கான என்ஜினியர்களும் டாக்டர்களும் வேண்டும். சென்னை மாகாணம் ஏன் அவர்களை உற்பத்தி செய்து கொடுத்துப் புகழ் அடையக் கூடாது?

ராஜாஜி மலர்

சுதந்திர இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக நாளது ஜூன் மீ 21உ ஸ்ரீ சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் பதவி ஏற்பதை முன்னிட்டு அடுத்த வாரத்துக் கல்கி இதழ் ராஜாஜி மலராக வெளிவரும்.


ஜவாஹர் விஜயம்



★ ★


கிழக்கு ஆசிய நாடுகளின் பொருளாதார மகாநாடு அழகிய நீலகிரியில் குளிர்ந்த உதகமண்டலத்தில் கூடியது. மேற்படி மகாநாட்டின் நிரந்தரக் காரியதரிசியும் புகழ்பெற்ற பொருளாதார நிபுணருமான ஸ்ரீ லோகநாதன் கொடியேற்றினார். பண்டித ஜவாஹர்லால் நேரு மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசினார். "ஜவாஹர் பேசியது ஆசியாவே பேசியதாகும்!" என்னும் கருத்தை...








★ ★



★

மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த சீன, இந்தோ சைன, பர்மா, பிலிப்பைன்ஸ் முதலிய கீழ்த்திசை நாடுகளின் பிரதிநிதிகள் ஒப்புக் கொண்டு ஆமோதித்தார்கள்.

★





★

மகாநாட்டின் தலைமைப்பதவிக்கு இந்திய ரயில்வே மந்திரி டாக்டர் மத்தாய் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய மனைவியாரும் கூட வந்திருந்து தம் கணவருக்கு ஒத்தாசை செய்தார்.

★

• •

உதகமண்டலத்திலும் கோயமுத்தூரிலும் ஜவாஹர்லால் நேரு மாபெரும் பொதுக் கூட்டங்களில் பேசினர். மக்களின் உற்சாகம் கரை புரண்டு ஓடியது.

• •

ஜவாஹருடன் வந்திருந்த அவருடைய சகோதரி மகளாகிய குமாரி ரீதா ஆங்காங்கு சபைக்கு அலங்காரமாய் விளங்கி ஜனங்களை மகிழ்வித்தார்.

• •









இருபத்திரண்டாம் அத்தியாயம்

கன்னத்தில் ஒரு அறை

சில வருஷங்களுக்கு முன்பு கிட்டா வய்யர் கொஞ்சம் சுக வாசியாயிருக்க வேண்டும், நாகரிகமாக வாழ்க்கை நடத்த வேண்டும் என்று எண்ணிய போது ஊர்க் குளத்தங் கரையில் அவருக்கிருந்த மேட்டு நிலத்தில் ஒரு சவுக்கண்டி கட்டினார். கூரைக்குக் கீத்தும் விழலும் போட்டார். நாலு புறமும் பிளாச்சு வேலி எடுத்தார். முன் பக்கத்தில் குரோடன்ஸ்களும் பின் பக்கத்தில் மல்லிகை முல்லை முதலிய புஷ்பச் செடிகளும் வைத்து வளர்த்தார். குளத்தங்கரைப் பங்களா என்றும் கிராம முனிசிப் சவுக்கண்டி என்றும் பெயர் பெற்ற அந்த இடத்தைத் தம்முடைய சொந்த ஆபீஸாகவும் நண்பர்களுடன் சல்லாபம் செய்யும் இடமாகவும் வைத்துக் கொண்டிருந்தார். முக்கியமாகக் கோடை காலத்தில் அந்தக் குளத்தங்கரை பங்களா ஜில்லு ஜில்லு வென்று காற்று அடித்துக் கொண்டு வெகு சுகமாக இருக்கும். நாலு பேர் வருவதற்கும் சீட்டுக் கச்சேரி போடுவதற்கும் மிக்க வசதியாயிருக்கும்.

அதெல்லாம் சவுக்கண்டி கட்டிய புதிதில் சில காலந்தான் நடந்தது. அப்புறம் பங்களா வரவரச் சிதிலம் ஆகிப் பாழடைந்து கிடந்தது. இந்த வருஷம் லலிதாவின் கலியாணம் நடக்க வேண்டியதை முன்னிட்டுக் கிட்டா வய்யர் சவுக்கண்டியைப் புதுப்பித்துக் கட்டியிருந்தார்.

• • •

திடீரென்று பங்களாவுக்குள்ளே நுழைந்த சூரியாவைப் பார்த்து லலிதா எரிச்சலுடன், "இங்கேயும் வந்துவிட்டாயா? இங்கே ஒருவரும் பயப்படவும் இல்லை; வீராதி வீரன் சூரியாவின் உதவியும் வேண்டியதில்லை! பொம்மனாட்டிகள் பேசிக் கொண்டிருக்குமிடத்தில் புருஷப் பிள்ளைக்கு என்ன வேலை? சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறாயே?" என்றாள்.

"பெரிய பொம்மனாட்டிகள் நீங்கள்! வாயாடித்தனத்தைப் பார்! அத்தங்கா! நீயே சொல்லு! அண்ணாவிடம் தங்கை இப்படித்தானா பேசுகிறது! நாளைக்குக் கலியாணம் ஆகி இவள் புருஷன் வீட்டுக்குப் போய் விட்டால் அப்புறம் யார் இவளைத் தேடிக் கொண்டு போகப் போகிறார்கள்? ஏதோ இன்னும் கொஞ்ச நாளைக்குப் பிறந்த வீட்டு மனுஷர்களிடம் பிரியமாயிருக்கக் கூடாதா? பொம்மனாட்டிகளின் சுபாவமே இப்படித்தான்! அவர்களுக்கு மனதில்

கொஞ்சமாவது வாஞ்சை என்பதே கிடையாது!" என்றான் சூரியா

"ஆமாம்! நீ ரொம்பப் பெரிய மனுஷன்! பொம்மனாட்டிகளின் சுபாவத்தை ரொம்பக் கண்டு விட்டாய்! வாயை மூடு!" என்று லலிதா மேலும் கடுமையாகப் பேசினாள்.

அப்போது சீதா குறுக்கிட்டு, "லலிதா! அண்ணாவின்மேல் எதற்காக இப்படி எரிந்து விழுகிறாய்? யாருக்கும் தங்களுக்குக் கிடைத்திருக்கும் அதிர்ஷ்டம் எப்படிப்பட்டதென்பது தெரிவதில்லை. தெரிந்தாலும் அதைப் பாராட்டுவதில்லை. சூரியாவைப்போல் எனக்கு ஒரு அண்ணா இல்லையே என்று நான் எவ்வளவோ ஏங்கிக் கிடக்கிறேன். நீயானால் இப்படி வெடுக்கு வெடுக்கென்று பேசுகிறாய்" என்றாள்.

"சரியாய்ப் போச்சு! நீயும் சூரியாவின் கட்சியிலே சேர்ந்து கொண்டாயா?" என்றாள் லலிதா.

சூரியா குதூகலத்துடன், "பின்னே எப்போதும் உன் கட்சியையே பேசுவாளோ? சீதா உனக்கு எப்படி அத்தங்காளோ, அப்படியே எனக்கும் அத்தங்காள்தானே?" என்றான்.

"நான் ஒருத்தருடைய கட்சியும் பேசவில்லை. நியாயத்தைத்தான் சொன்னேன். நீங்கள் தமையனும் தங்கையும் தயவு செய்து சண்டை போட்டுக் கொள்ளாதீர்கள்!" என்று சீதா இதோபதேசம் செய்தாள்.

"நான் ஒன்றும் சண்டை போடவில்லை. இவன் என்னத்துக்காக இப்போது இவ்விடம் வந்தான் என்று கேட்டேன். அவ்வளவுதானே?"

"காரியம் இல்லாமல் நான் வரவில்லை, லலிதா! அத்தை சீதாவைத் தேடினாள். இங்கே இருந்தால் அனுப்பும்படி சொன்னாள். அதனாலேதான் வந்தேன். பம்பாய் அத்திம்பேரிடமிருந்து கடிதம் வந்திருக்கிறதாம். சீதா பேருக்கு வந்திருப்பதால் அவள் வந்துதான் உறையைப் பிரிக்கவேண்டும் என்று அத்தை காத்திருக்கிறாள்! நாகரிகமுள்ள மனிதர்களுக்கும் பட்டிக்காட்டு மனிதர்களுக்கும் இதுதான் வித்தியாசம். நம் ஊரிலேயானால் பிரத்தியாருக்கு வந்த கடிதத்தைப் பிரித்துப் படித்து விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பார்கள்!" என்றான் சூரியா.

"அத்தை கூப்பிட்டாள் என்று முன்னாலேயே சொல்வதுதானே? இதற்கு இவ்வளவு சுற்றி வளைத்துப் பேசுவானேன்? வா, சீதா! நாம் போகலாம்!" என்றாள் லலிதா.

"நீ என்னத்துக்காக இப்போது போகிறாய்? சீதா போய் விட்டுச் சீக்கிரம் வந்து விடுகிறாள். அது வரையில் நாம் பேசிக் கொண்டிருக்கலாம்!" என்று சூரியா சொன்னான்.

"ஆமாம், லலிதா! நீ இங்கேயே இரு! நான் போய் ஐந்து நிமிஷத்தில் திரும்பி வந்துவிடுகிறேன்!" என்று சொல்லிவிட்டுச் சீதா புறப்பட்டாள்.

இரண்டு காரணங்களை முன்னிட்டுச் சூரியா லலிதாவை அங்கேயே இருக்கச் சொன்னான். முதலாவது அத்திம்பேரிடமிருந்து வந்த கடிதத்தை அத்தையும் சீதாவும் தனியாகப் படிக்கப் பிரியப்படுவார்கள். லலிதா கூடச் சென்றால், கடிதத்தைத் தானும் படித்துப் பார்க்க வேண்டுமென்று தொந்தரவு செய்வாள். அம்மாவும் பெண்ணும் ஒரு நிமிஷம் தனித்திருந்து பேசுவதற்கு விடமாட்டாள். இரண்டாவது, லலிதாவிடம் அவளுடைய கலியாணத்தைப் பற்றிச் சில விஷயங்கள் சொல்ல வேண்டுமென்று சூரியா விரும்பினான். இந்தச் சந்தர்ப்பத்தை விட்டால் அப்புறம் அதற்குச் சௌகரியம் கிடைக்காது என்று எண்ணினான்.

லலிதாவுக்குச் சூரியாவின் மேல் வாஞ்சை இல்லை என்பது கிடையாது. ஆனால் அவள் அன்று சாயங்காலம் தான் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று சீதாவிடம் பேசித் தெரிந்து கொள்ள விரும்பினாள். அதற்குத் தடையாகச் சூரியா வந்து சேர்ந்தபடியால்தான் அவ்வளவு கோபம் அவன்பேரில் அவளுக்கு வந்தது. வீட்டுக்குத் தானும் போனால் திரும்பிவர முடியாது; சீதாவிடம் தனியாகப் பேசவும் முடியாது. ஆகையால் சீதா போய் விட்டு வருவதே நல்லது என்று குளத்தங்கரைப் பங்களாவில் இருக்கச் சம்மதித்தாள்.

மற்றப்படி சூரியாவுடன் பேசுவதற்கு வேண்டிய பொறுமை அவளிடம் அப்போது இல்லை.

சூரியா எப்படித் தன் பேச்சைத் தொடங்குவது என்று யோசித்தான். யோசித்துத் தவறான முறையிலேயே தொடங்கினான்.

"லலிதா! உன் அத்தங்காளைப் பற்றி அப்படி, இப்படி என்று என்னவெல்லாமோ அளந்து கொண்டிருக்தாயே? எல்லாம் வெறும் பொய்!" என்று சொன்னான்.

"எது பொய்?" என்றாள் லலிதா.

"எல்லாந்தான்! 'பம்பாய் அத்தங்காள் ரொம்ப அழகாயிருப்பாள்! ரதிதான்; ஒளிதான்' என்று எவ்வளவு வர்ணனை செய்தாய்? அது மட்டுமா? பம்பாயிலிருந்து உன் அத்தங்காள் வந்த பிறகுகூடப் பக்கம் பக்கமாய்க் கடிதம் எழுதினாயே?"

"ஆமாம், எழுதினேன். அதிலெல்லாம் என்ன தப்பு?"

"உன்னுடைய அத்தங்காள் ரொம்ப அழகோ?"

"அழகு இல்லையோ?"

"இல்லவே இல்லை; சுத்த அவலட்சணம்; எந்தக் குருடன் அவளைக் கலியாணம் செய்து கொள்ள......"

மேலே சூரியா பேச முடியவில்லை. ஏனெனில், "என்ன? யார் அவலட்சணம்?" என்று சொல்லிக் கொண்டே லலிதா தன் தமையனின் கன்னத்தில் பளீர் என்று அறைந்தாள்!

கொஞ்ச நாளைக்கு முன்னேயாயிருந்தால் சூரியா லலிதாவின் ஒரு அறைக்குப் பதிலாக அவளுடைய தலையில் ஆறு குட்டுக் குட்டியிருப்பான்! இப்போது அப்படியெல்லாம் செய்யவில்லை. கன்னத்தில் விழுந்த அறை அவனுக்குக் குஷியை உண்டு பண்ணியது என்று தோன்றியது. மலர்ந்த முகத்துடன், "அடே அம்மா! அத்தங்காளிடத்தில் எவ்வளவு கரிசனம்! சிநேகம் என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? நான் வெறுமனே சொன்னேன், லலிதா! உன் அத்தங்காள் நல்ல இலட்சணமாய்த்தான் இருக்கிறாள். புத்திசாலியாயுமிருக்கிறாள். ஆனால் அழகும் அறிவும் இருந்து என்ன பிரயோஜனம்? பெண்களுக்கு நல்ல இடத்தில் கலியாணம் ஆவதற்கு இந்தக் காலத்தில் பணம் அல்லவா வேண்டியிருக்கிறது?" என்றான்.

"ஆமாம்; நம் ஊர்க்காரர்களுக்குப் பணம், பணம், பணந்தான் பெரிது! பணத்துக்காக உயிரை விடுகிறார்கள். இங்கிலீஷ்கார தேசத்திலேயெல்லாம் இப்படி இல்லையாமே? அங்கே ஒருவருக்கொருவர் பிடித்திருந்தால் கலியாணம் செய்து கொள்வார்களாம். ஏழை பணக்காரர் என்ற வித்தியாசமே பார்க்க மாட்டார்களாம். நம் ஊர்ப்பிள்ளைகள் நீங்களும் இருக்கிறீர்களே! இங்கிலீஷ்காரர்களைப் பார்த்துத் தலையைக் கிராப் செய்து கொள்ளவும் கால் சட்டை மேல் சட்டை போட்டுக் கொள்ளவும் தஸ்புஸ் என்று இங்கிலீஷ் பேசவும் கற்றுக் கொள்கிறீர்கள். கலியாணம் என்றால் மட்டும் 'பதினாயிரத்தைக் கொண்டு வா!, இருபதினாயிரத்தைக் கொண்டு வா!' என்கிறீர்கள். இங்கிலீஷ்காரர்களிடமிருந்து நல்ல விஷயத்தைக் கற்றுக் கொள்ளத் துப்பு இல்லை!" என்று லலிதா பொரிந்து கொட்டினாள்.

"லலிதா! முன்னேயெல்லாம் உன்னை ஒரு வார்த்தை பேசச் சொல்வது பிரம்மப் பிரயத்தனமாயிருக்குமே! எப்போது இவ்வளவு பெரிய வாயாடி ஆனாய்? உன்னைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிற ராஸ்கல் என்ன பாடுபடப் போகிறானோ, தெரியவில்லையே?"

"அண்ணா! உனக்கு என் மேல் கோபமாயிருந்தால் யாரையோ பிடித்து எதற்காக வைகிறாய்?"

"அப்பப்பா! இனிமேல் வரப்போகிற புருஷனுக்கு இதற்குள் பரிந்து கொண்டு வந்து விட்டாயா? போனால் போகட்டும், லலிதா! உன்னிடம் ஒரு விஷயம் சொல்வதற்காகவே முக்கியமாக வந்தேன். அதை இப்போது சொன்னால்தான் சொன்னது; அப்புறம் ஒருவேளை சந்தர்ப்பம் கிடைக்காது."

"என்ன சொல்ல வேணுமோ, அதைப் பளிச்சென்று சொல்லேன்! மூடுமந்திரம் என்னத்திற்கு?"



"மூடு மந்திரம்! ஒன்றும் இல்லை, லலிதா! உன்னுடைய நன்மைக்காகவே ஒரு விஷயம் சொல்லப் போகிறேன். சாயங்காலம் யாரோ மதராஸிலிருந்து உன்னைப் பார்க்க வருகிறார்கள் அல்லவா? 'மாப்பிள்ளை' யாகப் போகிறவனை உனக்குப் பிடித்திருந்தால் சரி; பிடிக்கவில்லையென்றால் தைரியமாகச் சொல்லி விடு. அப்பா அம்மா சொல்வதற்காகவோ, வெறுமனே சங்கோசப்பட்டுக் கொண்டோ, வாயை மூடிக் கொண்டு இருந்து விடாதே! தெரிந்ததா? கலியாணம் என்பது சாதாரண விஷயம் அல்ல. ஏதாவது ஒரு சாமான் நமக்குப் பிடிக்காவிட்டால் அதை எறிந்து விட்டு வேறு வாங்கிக் கொள்ளலாம். கலியாண விஷயம் அப்படியல்ல. ஒரு தடவை முடிந்து போனால் முடிந்து போனதுதானே! அப்புறம் மாற்ற முடியாதல்லவா?"

"சரி, அண்ணா! நானே அப்படித்தான் மனதிற்குள் தீர்மானம் பண்ணி வைத்திருக்கிறேன். ஒரு வேளை எனக்குப் பிடிக்காவிட்டால், நீ என் கட்சியில் இருப்பாய் அல்லவா?"

"கண்டிப்பாய் இருப்பேன். அதைப் பற்றி நீ கொஞ்சமும் சந்தேகப்பட வேண்டாம்!" என்றான் சூரியா.

* *

வீட்டுக்குப் புறப்பட்ட சீதா சவுக்கண்டியின் வெளி 'கேட்'டின் அருகே தயங்கி நின்றான். மறுபடியும் இங்கு திரும்பி வருவானேன்? லலிதாவையும் அழைத்துக் கொண்டு போய்விட்டால் என்ன?' என்ற எண்ணம் அவன் மனதில் தோன்றியது. எனவே திரும்பச் சவுக்கண்டிக்குள் வருவதற்காக நாலு அடி எடுத்து வைத்தான். இதற்குள் உள்ளே தமையனும் தங்கையும் பேசியது காதில் விழுந்தது. தன்னைப் பற்றிச் 'சுத்த அவலட்சணம்' என்று சூரியா கூறியது அவள் உள்ளத்தில் ஆங்காரத்தை உண்டாக்கிற்று. அதற்குப் பதிலாக லலிதா பளீரென்று

கன்னத்தில் அறைந்த சத்தமும் அவன் காதில் விழுந்தது. தன்னுடைய உத்தேசத்தை மறுபடியும் மாற்றிக் கொண்டு வீடு நோக்கிச் சென்றான்.

குளத்தங்கரையிலிருந்து ஓட்டா வய்யரின் வீடு குறுக்கு வழியாகச் சுமார் அரை பர்லாங்கு தூரந்தான் இருக்கும். அந்த தூரம் போவதற்குள் ஆங்காரங் கொண்ட சீதாவின் உள்ளம் எண்ணாததெல்லாம் எண்ணியது. 'இந்தத் தறிதலைப் பையனுக்கு நான் அவலட்சணமாம்! என்னைக் குருடன்தான் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமாம்! அம்பிகே! தாயே! சூரியாவைப் போன்றவர்கள் வெட்கித் தலை குனியும்படியாக உயர்ந்த பதவியிலுள்ள சீமான் என்னைக் காதலித்துக் கலியாணம் செய்து கொள்ளமாட்டானா?'' என்று அவளுடைய குழந்தை உள்ளம் ஆத்திரத்துடன் பிரார்த்தனை செய்தது. அன்று காலையிலிருந்து வீட்டில் நடந்து கொண்டிருந்த தடபுடல்களை யெல்லாம் பார்த்துவிட்டு 'இப்படி யெல்லாம் நமக்கு நடக்கப் போகிறதா?' என்று சீதா ஏக்கமடைந்திருந்தாள். சூரியா வேடிக்கையாகச் சொன்ன வார்த்தைகள் அவளுடைய தாபத் தீயில் எண்ணெய் விட்டது போன்ற பலனை அளித்தன.



அதே சமயத்தில் லலிதா தன்னிடத்தில் எவ்வளவு அபிமானம் கொண்டிருக்கிறாள் என்பதையும் சீதா ஞாபகப் படுத்திக் கொண்டாள். தன்னைப் பற்றித் தமையன் சொன்ன வார்த்தையைப் பொறுக்காமல் அவன் கன்னத்தில் அறைந்து விட்டாளே? இது வல்லவா அன்பும் சிநேகமும்? இப்படிப்பட்ட அன்புக்கும் சிநேகத்துக்கும் தன்னால் என்ன பிரதி செய்ய முடியும்? தற்காலத்துக்கு ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் பிரதி உபகாரம் செய்யக்கூடிய காலம் ஒரு சமயம் வராமலா போகும்?

சற்று நேரத்துக்கெல்லாம் சண்டுப் பயல் குளத்தங்கரை பங்களாவுக்கு ஓடி வந்தான். "அடி லல்லு! உன்னை அம்மா அழைத்து வரச் சொன்னாள். உனக்குத் தலை வாரிப் பின்னி அலங்காரம் செய்ய ஆரம்பிக்க வேணுமாம். மணி மூன்று ஆகிவிட்டது. இன்னமும் நீ இங்கே உட்கார்ந்திருக்கிறாயே? அண்ணாவுடன் அந்தரங்கம் பேசுவதற்கு இதுதானா சமயம்?'' என்று கீச்சுக் குரலில் கத்தினான்.

"இந்தப் பிள்ளை பண்ணுகிற அதிகாரத்தைப் பார்!......சண்டு! சீதா அத்தங்கா அங்கே தான் இருக்கிறாளா? இங்கே வருவதாகச் சொல்லவில்லையா!'' என்று கேட்டாள் லலிதா.

"சீதா அத்தங்காவுந்தான் உன்னை உடனே புறப்பட்டு வரச் சொன்னாள். இங்கே அவள் வரமாட்டாளாம். ஏன் என்று தெரியவில்லையா? மிஸ்டர் கே. சூரியநாராயண அய்யர்வாள் இங்கே விஜயம் செய்திருப்பதனால்தான்!'' என்று சண்டு சொல்லிவிட்டு, சூரியா தன்னை அடிக்க வந்தால் அவனிடம் அகப்படாமல் தப்பி ஓடுவதற்குத் தயாரானான்.

இருபத்து மூன்றாம் அத்தியாயம்

"இது என்ன ஓசை?"

சரஸ்வதி அம்மாளும் சீதாவும் லலிதாவை வீட்டுக்கு வரும்படி சொல்லி அனுப்பியது உண்மைதான். அவள் வந்ததும் அலங்காரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அந்த வேலையில் சீதா மிகவும் உற்சாகம் காட்டினாள். சட்டாம்பிள்ளை உத்தியோகம் பார்த்தாள் என்றும் சொல்லலாம். இந்த மாதிரி தலைபின்னிச் சடை போட வேண்டும், இப்படி முன் வகிடு எடுக்க வேண்டும், இப்படி முன்னால் இரண்டு சுருட்டை மயிரைத் தொங்க விட வேண்டும், இந்த வர்ணப் புடவைக்கு இந்த நிற ரவிக்கை போட்டுக் கொள்ள வேண்டும், அதே நிறத்தில் தலையில் பூவும் கையில் வளைகளும் இருக்க வேண்டும், — என்றெல்லாம் வாயினால் பிரசங்கம் செய்து கொண்டே சீதா கையினால் காரியமும் செய்து கொண்டிருந்தாள். லலிதாவை அலங்காரம் செய்யும் விஷயத்தில் சீதா காட்டிய தீவிர உற்சாகத்தைக் கண்டு சரஸ்வதி அம்மாளின் கடின இதயம்கூட அவள் விஷயத்தில் சிறிது இளகி விட்டது.

"அடுத்தாற்போல் சீதாவுக்கும் ஒரு வரனைப் பார்த்து நிச்சயம் செய்து விட வேண்டும். ஒரே முகூர்த்தத்தில் இரண்டு கலியாணமும் வைத்துக் கொண்டாலும் நல்லதுதான். ஆனால் சாஸ்திரப்படி செய்யலாம் என்கிறார்களோ, என்னமோ? செய்யலாம் என்று சொன்னால் ரொம்ப நல்லது. செலவோடு செலவாய்ப் போய்விடும். ஆனால் அதற்காக முகூர்த்தத்தை ரொம்ப தள்ளிப் போடக்கூடாது. சித்திரை மாதத்திலாவது கலியாணத்தை நடத்தி விட்டால் தான் எல்லா விஷயங்களுக்கும் சௌகரியமாயிருக்கும்!" என்று மற்றவர்கள் காதிலும் விழும்படியாகச் சரஸ்வதி அம்மாள் தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

"ஏன், அம்மா! என் கலியாணம் நிச்சயமாகி விட்ட மாதிரியே பேசுகிறாயே?" என்றாள் லலிதா.

"அதிலே கூட சந்தேகமா என்ன?" என்றாள் சரஸ்வதி அம்மாள்.

"அதுதான், மாமி, நானும் சொல்லுகிறேன்! மதராஸிலிருந்து வருகிறவர்கள் வெறுமனே ஜம்பத்துக்கா வருவார்கள்? அல்லது நம்ம லலிதாவைப் பார்த்து விட்டு யாராவது 'பிடிக்கவில்லை' என்றுதான் சொல்வார்களா? அப்படிச் சொல்கிறவர்களுக்குத் தலையிலே கொம்பா முளைத்திருக்கும்? லலிதா மாதிரி பெண் கிடைப்பதற்குப் பூர்வ ஜன்மத்திலே புண்ணியம் செய்திருக்க வேண்டாமா?" என்றாள் சீதா.


"வருகிறவர்கள் சொல்கிறது இருக்கட்டும். நான் 'பிடிக்கவில்லை' என்று சொல்லிவிட்டால்?" என்றாள் லலிதா.

"அசடே! பேசாமலிரு. யார் காதிலாவது விழப் போகிறது! சூரியா பேத்துகிறதைக் கேட்டுக் கொண்டு ஏதாவது உளறுதே!" என்று சரஸ்வதி அம்மாள் கோபமாய்ச் சொன்னாள்.

"நானும் அதுதான் இவளுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறேன், மாமி! பார்க்கிறதற்கு முன்னாலேயே 'பிடிக்காமலிருக்கும்' என்று எதற்காக நினைத்துக் கொள்ள வேண்டும்! மாமாவோ நேரில் பார்த்து விட்டு வந்து 'மாப்பிள்ளை மன்மதன் மாதிரி இருக்கிறார்!' என்று சொல்லுகிறார். மன்மதனை விட அழகாய் எங்கே போய் மாப்பிள்ளை பிடிக்கிறது, மாமி! இந்த விஷயத்திலே



மட்டும் லலிதா கொஞ்சம் அசட்டுப் பிசட்டு என்று பேசிக் கொண்டிருக்கிறாள். அது எனக்குப் பிடிக்கவே இல்லை; உங்கள் மூத்த பிள்ளையின் துர்ப்போதனை தான் போலிருக்கிறது!" என்றாள் சீதா.



"கேட்டாயா, லலிதா! உன் அத்தங்காள் சொல்கிறதைக் கேட்டுக் கொள். சூரியா ஏதாவது உளறினால் அதைக் காதிலேயே போட்டுக் கொள்ளாதே! அவனுக்கு இந்த விஷயம் எல்லாம் என்ன தெரியும்? யாரோ அவனுக்குத் தூபம் போட்டு விட்டிருக்கிறார்கள்! சீதா தான் நல்ல மாதிரி யோசனை சொல்கிறாள். அவளுடைய புத்திமதியைக் கேட்டுக் கொள்!" என்றாள் சரஸ்வதி அம்மாள்.

* * *

லலிதாவை அலங்காரம் செய்ய ஆரம்பித்த சிறிது நேரத்துக்கெல்லாம் பம்பாய் ராஜம்மாள் சூரியாவைக் கூப்பிட்டு அனுப்பி, "அப்பா! நான் பிறந்து வளர்ந்த ஊரைச் சுற்றிப் பார்க்க வேணுமென்று ஆசையாயிருக்கிறது. குளத்தங்கரையில் அண்ணா பங்களாக் கட்டியிருக்கிறானாமே? அங்கே போய்ச் சற்றுநேரம் காற்று வாங்கிவிட்டு வரலாமா?" என்றாள்.

"ஆகட்டும் அத்தை, போகலாம்" என்றான் சூரியா.

இருவரும் பங்களாவை அடைந்தார்கள். ராஜம்மாள் பங்களாவின் திறந்த ஜன்னல் வழியாக நெடு நேரம் குளத்தை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாள். "எனக்குக் குளத்தில் இறங்கிக் குளிப்பதற்கு ரொம்பப் பிரியம். வினாத் தெரிந்த நாளிலிருந்து கல்யாணம் ஆகும் வரையில் ஒரு நாள் கூட நான் இந்தக் குளத்தில் குளிக்காமல் இருந்தது கிடையாது. பம்பாய்க்குப் போனதிலிருந்து பம்பு ஜலந்தான். கங்கை, காவேரி எல்லாம் என்று ஆகிவிட்டது" என்று சொல்லி ராஜம் பெருமூச்சு விட்டாள்.

"அத்தை! உங்களுக்கு நீந்தத் தெரியுமாமே? அது உண்மையா? பெரிய அத்தை சொன்னாள்" என்றான் சூரியநாராயணன்.

"உண்மை தான், சூரியா! அப்பா எனக்கு நீந்தக் கற்றுக் கொடுத்தார். நான் குழந்தையாயிருந்த போது ஒரு நாள் யாரோ ஒரு ஸ்திரீ காவேரி வெள்ளத்தில் போய்' விட்டாள் என்று செய்தி வந்தது.. அது முதல் 'பெண்களுக்கும் கட்டாயம் நீந்தத் தெரிய வேண்டும்' என்று சொல்லி அப்பா எனக்கு நீந்தக் கற்றுக் கொடுத்தார். அதாவது உன் தாத்தா. இந்தக் குளத்தின் இக்கரையிலிருந்து அக்கரைக்கு நீந்திப் போய்விடுவேன். சில சமயம் காவேரியில்கூட நீந்தியிருக்கிறேன். புண்ணிய காலங்களிலும் பண்டிகை தினங்களிலும் வண்டி கட்டிக் கொண்டு எல்லாரும் காவேரிக்குக் குளிக்கப் போவோம். அப்பா, அண்ணா, அக்கா எல்லாருமாகப் போவோம். நான்தான் வீட்டுக்குக் கடைக்குட்டிப் பெண். எல்லாருக்கும் என் பேரில் ஆசை அதிகம்......"

ராஜம்மாள் கண்ணைத் துடைத்துக் கொண்டு, "அந்தப் பழங்கதையெல்லாம் இப்போது எதற்கு? என்னமோ உளறினேன். இருக்கட்டும், சூரியா! நீ இந்த வருஷம் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்குப் படிக்கிறாயாமே? அப்படித்தானா?" என்றாள்.

ராஜம்மாளின் கண்ணில் கண்ணீர் ததும்புவதைப் பார்த்துச் சூரியாவும் பேச்சை மாற்ற விரும்பினான்.

"ஆமாம், அத்தை! முன்னேயெல்லாம் மெட்ரிகுலேஷன் என்பார்கள். இப்போது எஸ். எஸ். எல். ஸி. என்று அதற்குப் பெயர். எங்க அம்மாவுக்குப் பத்தாவது என்று சொன்னால்தான் தெரியும்!" என்றான்.

"ஆமாம், சூரியா! நீ ஒரு வக்கீல் வீட்டில் ஜாகை வைத்துக் கொண்

டிருக்கிருயாம். அந்த வக்கீலுக்கு ஒரு பிள்ளை இருக்கிருனும்; பி. ஏ. படிக்கிருனுமே? வாஸ்தவந்தானு?" என்று ராஜம்மாள் கேட்டாள்.

"வாஸ்தவந்தான், அத்தை! அதற்கு என்ன இப்போது?" என்று சூரியா கேட்டபோதே அவன் மனதில் அந்தக் கேள்விக்குப் பதிலும் உதித்தது. வக்கீலின் பிள்ளைக்குச் சீதாவைக் கொடுக்கலாமென்பதற்குத்தான் அத்தை அவனைப் பற்றிக் கேட்கிருள் என்று தெரிந்து விட்டது. அந்த எண்ணம் ஊசியால் குத்துவது போல் சுரீர் என்ற வேதனையை அவனுக்கு உண்டாக்கியது.

"சூரியா! உன் அத்திம்பேர் ஒரு மாதிரி மனுஷர் என்று கேட்டிருப்பாய். எனக்கோ உடம்பு சரியாகவே இல்லை. இந்தப் பெண் சீதாவுக்கு ஒரு கலியாணத்தைச் செய்து வைத்துவிட வேண்டுமென்று கவலையா யிருக்கிறது. அண்ணுவிடம் சொல்லித்தான் இருக்கிறேன். ஆனல் அவனுக்கு எத்தனையோ ஜோலி. யாராவது நல்ல வரனைத் தெரிந்தால் பார்த்துச் சொல், சூரியா! அதற்காகத்தான் முக்கியமாக உன்னுடன் தனியாகப் பேச வேண்டுமென்று சொன்னேன்."

"அத்தை! இதுஎன்ன பிரமாதம்? சீதாவின் சமர்த்துக்கும் அழகுக்கும் வரன்கள் நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு வரமாட்டார்களா? அதைப் பற்றி உங்களுக்குக் கவலையே வேண்டாம்!" என்று சூரியா கூறினன். அதே சமயத்தில் தன்னுடைய மனதிற்குள், "நான் ஒருவன் இருக்கிறேனே? வேறு வரனைத் தேடுவானேன்?" என்று சொல்லிக் கொண்டான். இதை வெளியிட்டு அத்தையிடம் சொல்லி விடலாமா என்று கூட நினைத்தான். ஆனல் சங்கோசம் குறுக்கிட்டது.

"சீதா சமர்த்து என்று உனக்குத் தோன்றுகிறதா, சூரியா? எதிலிருந்து அவ்விதம் சொல்கிருய்? வயது பதினைந்து பிறந்திருக்கிறது; இன்னும் விளையாட்டுத்தனம் கொஞ்சம் கூடப் போகவில்லை. ஓடையில் விழுந்ததும் 'ஓகோ' என்று கூச்சல் போட்டாளே, பார்த்தா யல்லவா?" என்ருள் ராஜம்மாள்.

"அதனல் என்ன, அத்தை! சிறு பிராயத்தில் பெண்கள் அப்படிச் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தால் தானே நன்ருயிருக்கிறது? அழுமூஞ்சியா யிருந்தால் யாருக்குப் பிடிக்கும்? பம்பாய்க்குப் போய்வந்த பிறகு லலிதாவின் சுபாவம் கூட மாறியிருக்கிறது. அதற்கு முன்னுலெல்லாம் அம்மாவுடன் சண்டை பிடிப்பதும் அழுவதுமாகவே இருப்பாள்; கலகலப்பாகவே இருக்க மாட்டாள். இந்த ஒரு வருஷமாகச் சிரித்து விளையாடிக் கொண்டு சந்தோஷமா யிருக்கிருள்!" என்ருன் சூரியா.

"இந்த அசட்டுப் பெண் உன் தங்கையையும் தன்னைப்போல் ஓயாமல் சிரித்துக் கொண்டிருக்கும்படி செய்துவிட்டா ளாக்கும்."

"அடிக்கடி சீதாவை 'அசடு' 'அசடு' என்று சொல்கிறீர்களே, அத்தை! அவள் முகத்திலேயே 'சமர்த்து' என்று எழுதி ஒட்டி யிருக்கிறதே! எதுவரையில் படித்திருக்கிருள்?"

"படிக்கிறதிலே சீதா சமர்த்துத்தான், சூரியா! பள்ளிக்கூடத்தில் எப்போதும் முதல் மார்க்குத்தான். ஒரு தடவை காதால் கேட்ட பாட்டை அப்படியே பாடிவிடுவாள்! இந்தப் பக்கங்களில் எட்டாவது என்று சொல்கிருர்களே, அதுவரையில் படித்திருக்கிருள். இங்கிலீஷ் நன்ருகத் தெரியும். கதை சொல்லச் சொன்னுல் இன்றைக்கெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கலாம். ஆனல் உலகம் தெரியாத பெண்ணு யிருக்கிருள்! யாரிடம் எப்படி நடந்து கொள்வது என்று தெரியவில்லை. இந்த வருஷம் லலிதாவின் கல்யாணத்தோடு சேர்த்துச் சீதாவுக்கும் நடத்தி விட்டால் என் மனதுக்கு நிம்மதியா யிருக்கும்."

மேற்படி சம்பாஷணையின் நடுவில் சூரியாவுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. அதாவது அத்தைக்குச் சீதாவைத் தனக்குக் கொடுக்க வேண்டும் என்ற விருப்பம் போலிருக்கிறது. அதை மனதில் வைத்துக் கொண்டு தான் வரனைப் பற்றிய பேச்சை எடுத்திருக்கிருள் என்று நினைத்தான். ஆனலும் தன்னுடைய கௌரவத்தை விட்டுக் கொடுத்து விடக் கூடாது

என்று எண்ணினான். அத்தை அந்த விஷயத்தைப் பற்றிப் பட்டவர்த்தனமாகக் கேட்ட பிறகு கொஞ்சம் 'பிகு' பண்ணிக் கொண்டு அரைமனதாகத் தன்னுடைய சம்மதத்தைத் தெரியப் படுத்துவது என்று தீர்மானித்தான்.

எனவே, சிறிது அலட்சிய பாவத்துடன், "இங்கே என்ன அப்படி ஓசத்தியான வரன் கிடைத்துவிடப் போகிறது, அத்தை! பம்பாயில் இல்லாத வரனா? அங்கேயே பார்க்கக் கூடாதா?" என்றான்.

"பம்பாயில் வரன் இருக்கலாம், சூரியா! ஆனால் சீதாவை இந்தப் பக்கத்தில் கொடுக்க வேண்டும் என்பது என் எண்ணம். நம்முடைய குடும்பத்தில் நான் ஒருத்தி பம்பாயில் வாழ்க்கைப் பட்டது போதும் என்று இருக்கிறது. மறுபடி நீ தேவ பட்டணத்துக்குத் திரும்பிப் போனதும் அந்த வக்கீலாத்துப் பையனின் ஜாதகம் வாங்கி அனுப்புகிறாயா, சூரியா? அந்தப் பையன் பெயர் என்ன?"

"அவன் பெயர் பட்டாபிராமன், அத்தை! பையன் கெட்டிக்காரன் தான்; பி. ஏ. படிக்கிறான். ஆனால் சொத்து அதிகம் கிடையாது. ஒரு வீடு இருக்கிறது; அதன் பேரில் கடன். இந்த இலட்சணத்துக்கு ஏராளமான வரதட்சிணை வரவேண்டும் என்று அவன் அப்பாவும் அம்மாவும் ஆசைப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பட்டாபியைவிடச் சிலாக்கியமான வரன்கள் இருக்கின்றன. நான் பார்த்துச் சொல்கிறேன். நீங்கள் அவசரப் பட வேண்டாம்" என்றான் சூரியா.

"எவ்வளவோ பெரிய வரன்கள் இருக்கலாம்! ஆனால் நமக்குச் சரியாக வரவேண்டாமா, சூரியா? இந்த நாளில் பிள்ளைகளைப் பெற்றவர்கள் எல்லாரும் கண்ணை மூடிக்கொண்டு தான் வரதட்சிணை கேட்கிறார்கள். நாளைக்கு உனக்குத்தான் கலியாணப் பேச்சு வருகிறது என்று வைத்துக் கொள்வோம். அண்ணாவும் மன்னியும் பத்தாயிரம் ரூபாய்க்குக் குறைந்து வரதட்சிணை வாங்குவார்களா?......"

வரதட்சிணை வாங்குவதைப் பற்றி ஒரு பெரிய கண்டனப் பிரசங்கம் செய்ய வேண்டும் என்று சூரியா எண்ணினான். கலியாண விஷயத்தில் தன்னுடைய தீர்மானமான கொள்கையை வெளியிடவும் உத்தேசித்தான். ஆனால் அதற்குள் அத்தையின் முகபாவம் மாறுவதைக் கவனித்தான். ராஜம்மாளின் முகத்தில் பீதியின் அறிகுறி தோன்றியது. "சூரியா! இது என்ன ஓசை?" என்று கேட்டாள்.

"ஓசையா? என்ன ஓசை? எனக்கு ஓசை ஒன்றும் கேட்கவில்லையே!" என்றான் சூரியா.

"கவனித்துக் கேள், சூரியா! சமுத்திரத்தின் அலை ஓசை மாதிரி சத்தம் கேட்கவில்லையா?"

சூரியாவின் காதிலும் அப்போது அந்த ஓசை கேட்டது. பங்களாவுக்கு வெளியில் எட்டிப் பார்த்தான். சற்றுத் தூரத்தில் ஒரு விஸ்தாரமான சவுக்கு மரத் தோப்புக் காணப்பட்டது. இளவேனிற் காலத்தின் இனிய தென்றல் அந்தத் தோப்பில் பிரவேசித்து நெருங்கிய சவுக்கு மரக் கிளைகளின் வழியாக நுழைந்து சென்ற போது உண்டான சத்தந்தான் அப்படிச் சமுத்திரத்தின் அலை ஓசை போன்ற பிரமையை உண்டாக்கியது.


இதைத் தெரிந்து கொண்ட சூரியா, "அத்தை! அலையும் இல்லை; ஓசையும் இல்லை. அதோ அந்தச் சவுக்குத் தோப்பின் கிளைகள் காற்றில் அசைவதுதான் அலை ஓசை போன்ற சத்தத்தை உண்டாக்குகிறது!" என்றான்.


அது உண்மை யென்று தெரிந்து கொண்ட பிற்பாடு ராஜம்மாளின் முகம் சிறிது தெளிவடைந்தது.

"இருந்தாலும், அத்தை! நீ என்னத்திற்காக அவ்வளவு பயங்கரமடைந்தாய்? அலை ஓசையா யிருந்தால்தான் என்ன?" என்று சூரியா கேட்டான்.

"என் மனது இப்போது ரொம்பவும் கலங்கிப் போயிருக்கிறது, சூரியா! இன்னொரு சமயம் சொல்லுகிறேன்!" என்றாள் ராஜம்மாள்.

சற்றுத் தூரத்திலிருந்து 'பாம்' 'பாம்' என்று மோட்டார்க் கொம்பின் சத்தம் கேட்டது.





சிரஞ்சீவிச் சிற்பம்

இவ்வருஷம் ஜனவரி 30உ நம்மெல்லாருடைய நெஞ்சிலும் ஒரு பேரிடி விழுந்தது. "காந்தி மகாத்மாவை இனிக் காண முடியாதே? இந்தக் கண்கள் இருந்து பயன் என்ன?" என்று தோன்றியது. அவ்விதம் எனக்கு ஏற்பட்ட ஏக்கம் இரண்டு வாரத்துக்கு முன்னால் ஒருநாள் நீங்கியது. "ராய் சௌத்ரி ஏதோ சிலை செய்திருக்கிறாராம்! வந்தால் பார்க்கலாம்!" என்று செய்தி வந்ததின் பேரில் மேற்படியாருடைய சிற்பச் சாலைக்குச் சென்றேன். அந்த அறைக்குள் நுழைந்ததும், "ஆகா! இதோ இருக்கிறாரே எம்மான்!" என்று உள்ளத்தில் ஒரு புது உவகை உதித்தது. ஸ்ரீ ராய் சௌத்ரி இயற்றியுள்ள காந்திஜியின் சிலை அவ்வளவு தத்ரூபமாய்க் காட்சி தந்தது. உருவத்திலும் முகத்திலும் உயிர்க் களை ததும்பியது. கண்களில் கருணை குடி கொண்டிருந்தது. கன்னத்திலும் நெற்றியிலும் ஒவ்வொரு சுருக்கமும் வயிற்றிலே ஒவ்வொரு மடிப்பும் சிலைக்கு ஜீவ களையை ஊட்டியது.

ஸ்ரீ D. P. ராய் சௌத்ரி என்பார் வங்கத்தில் பிறந்தவர்; கலைக்குப் பிறப்பிடமான தென்னாட்டுக்கு வந்தவர். சென்னை நகரில் உள்ள "Indian School of Arts" என்னும் அரசாங்கக் கலைப் பயிற்சிச் சாலைக்கு நீண்ட நாளாகத் தலைமைப் போராசிரியராக இருந்து வருகிறவர். சித்திரக் கலையில் நிபுணர். சிலை இயற்றும் சிற்பக் கலையில் ஸ்ரீ ராய் சௌத்ரிக்கு இணையான மேதாவி உலகிலேயே இல்லை யென்று சொல்கிறார்கள்.

ஸ்ரீ ராய் சௌத்ரியைக் கொண்டு மகாத்மாவின் சிலையை இயற்றுவிக்க ஏற்பாடு செய்த சென்னை மந்திரிகளைப் பாராட்டுகிறேன். —ரா. கி.

மாந்தருக்குள் ஒரு தெய்வம்

கல்கி

32. கஸ்தூரிபாயும் கண்ட ஹாரமும்

தென்னாப்பிரிக்கா இந்திய சமூகத்தில் காந்திஜியின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. அந்தச் செல்வாக்கைக் காந்திஜி சமூகத்தின் நன்மைக்காகவே பயன்படுத்தி வந்தார். இந்தியர்களின் உரிமைகளுக்காகச் சர்க்காரோடு போராடுவதுடன் அவர் நின்று விடவில்லை. இந்திய சமூகத்தில் குடி கொண்டிருந்த குறைபாடுகளைப் போக்கித் தூய்மைப்படுத்தவும் பெருமுயற்சி செய்தார். நம்மிடத்திலுள்ள குறைபாடுகளை மறைத்து மெழுகுவது காந்திஜிக்கு எப்போதும் பிடிப்பதில்லை. நம்முடைய உரிமைகளுக்காகப் போராடுவதில் எவ்வளவு சிரத்தை காட்டுகிறோமோ அவ்வளவு கடமைகளைச் செலுத்துவதிலும் ஊக்கம் காட்ட வேண்டும் என்பது காந்திஜியின் உறுதியான கொள்கை.

தென்னாப்பிரிக்கா இந்தியர்களைப் பற்றி வெள்ளைக்காரர்கள் அடிக்கடி சொல்லி வந்த ஒரு குறைபாடு இந்தியர்கள் தங்கள் வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் சுத்தமாய் வைத்துக் கொள்ளுவதில்லையென்பது தான். பொதுவாக இந்தியர்களிடம் இந்தக் குறை உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. நம்முடைய உடம்பையும் உடைகளையும் சுத்தமாய் வைத்துக் கொள்வதில் நாம் மிகுந்த சிரத்தை காட்டுவோம். உணவுப் பொருள்களின் விஷயத்தில் வெகு சுத்தமாயிருப்போம். ஆசார அனுஷ்டானங்களைக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்போம். ஒரு நாள் உடுத்திய துணியை இன்னொரு நாள் உடுத்த மாட்டோம். தோய்த்து உலர்த்தித்தான் உடுத்திக் கொள்வோம். இல்லாவிட்டால் 'விழுப்பு' என்போம். ஒருவரையொருவர் தொட்டால் தீட்டு என்போம். சாப்பிட்ட இடத்தைச் சாணமிட்டு மெழுகாவிட்டால் இடம் சுத்தமானதாகக் கருத மாட்டோம். நன்றாகத் தேய்த்து வைத்த பாத்திரத்தை மறுபடியும் தண்ணீர் விட்டுக் கழுவுவோம். இப்படியெல்லாம் சுத்தம், அசுத்தம், தீட்டு, தீண்டாமை முதலிய பல கட்டுப்பாடுகளை அனுசரிக்கும் நாம் வேறு சில முக்கியமான காரியங்களில் சுத்தம்—அசுத்தம் என்னும் உணர்ச்சியேயில்லாமல் நடந்து கொள்வோம். வீட்டுக்குள்ளிருக்கும் குப்பையை வாசலிலே போட்டு விட்டுத் திருப்தியடைவோம். எச்சில் இலைகளைப் பக்கத்து வீட்டு ஓரமாகப் போட்டு விட்டுச் சும்மா இருப்போம். சாக்கடைத் தண்ணீர் நம் வீட்டுக்கு வெளியிலே போய்விட்டால் போதுமானது! வீதியிலோ கொல்லையிலோ சாக்கடைத் தண்ணீர் தேங்கிக் கிடந்து நாற்றம் எடுப்பதைக் கவனிப்பதில்லை. அதனால் எவ்வளவு சுகாதாரக் குறைவு என்பதையும் எண்ணிப் பார்ப்பதில்லை. நதிக்கரைகளையும் கோயில் குளங்களையும் மற்றும் பொது இடங்களையும் நம்முடைய ஜனங்கள் அசுத்தப்படுத்துவதைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை!

தென்னாப்பிரிக்காவில் வசித்த இந்திய சமூகத்தாரிடையிலும் இத்தகைய குறைபாடுகள் இருந்தன. இவற்றைக் குறித்து வெள்ளைக்காரர்கள் அடிக்கடி புகார் சொல்லி வந்தார்கள். அது காரணமாக இந்தியர்களைப் பற்றிக் கேவலமாகப் பேசினார்கள். அவர்கள் சொல்லுவதில் உண்மை இருக்கிறது என்பதைக் காந்திஜி கண்டார்.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்ப தறிவு"

என்னும் கொள்கையைக் காந்தி மகான் பரிபூரணமாகக் கடைப்பிடிப்பவர். ஆகவே டர்பனில் வசித்த இந்தியர்களின் வீடு வாசல்களைத் தூய்மைப் படுத்துவதற்கும் தூய்மையாக வைத்துக் கொள்ளும்படி செய்வதற்கும் பெரு முயற்சி தொடங்கினார். அந்த முயற்சிக்கு வேகம் கொடுப்பதற்கு ஒரு காரணம் ஏற்பட்டது. அதாவது டர்பனில் பிளேக் நோய் பரவத் தொடங்கியது. இந்தியர் வீடுகளின் சுகா

தாரத்தைக் கவனிக்கும் விஷயத்தில் நகரசபை அதிகாரிகள் இந்திய சமூகத் தலைவர்களின் உதவியை நாடினார்கள். காந்திஜியும் மற்ற சமூகத் தலைவர்களும் டர்பனில் வசித்த ஒவ்வொரு இந்தியரின் வீட்டுக்கும் போய்ச் சோதனை போட்டார்கள். வீட்டுக்கு உள்ளும் புறமும் தூய்மைப்படுத்துவதற்குப் பிரயத்தனம் செய்தார்கள். காந்திஜியும் அவருடைய சகாக்களும் மேற்கொண்ட பிரயத்தனத்தின் காரணமாக அதிகாரிகளின் வேலை எளிதாயிற்று. இந்திய சமூகம் பெருநன்மை அடைந்தது. பிளேக் முதலிய கொள்ளை நோய்கள் பரவும் போதெல்லாம் நிர்வாக அதிகாரிகள் பொறுமை இழந்து அளவு மீறிய கடும் முறைகளைக் கையாளுவது வழக்கம். அதனால் ஜனங்கள் பெருந் தொல்லைகளுக்கும் அல்லல்களுக்கும் ஆளாவார்கள். டர்பனில் பிளேக் நோய் தோன்றிய சமயத்தில் காந்திஜியின் முயற்சியால் இந்திய சமூகத்தாரே முன் வந்து சகலவிதமான சுகாதார முறைகளையும் மேற்கொண்டார்கள். இதனால் அவர்கள் அதிகாரக் கொடுமைகளுக்கு ஆளாகாமல் தப்பினார்கள்.

மேற்கூறிய முயற்சி நடந்த காலத்தில் காந்திஜிக்குப் பல வருந்தத்தக்க அனுபவங்கள் ஏற்பட்டன. உரிமைகளுக்காகப் போராடும் போது இந்திய சமூகத்தினர் எவ்வளவு ஊக்கம் காட்டினார்களோ அவ்வளவு இப்போது கடமைகளை ஆற்றும் விஷயத்தில் காட்டவில்லை என்பதைக் கண்டார். சிலர் காந்திஜியிடம் அவமதிப்பாகவே நடந்து கொண்டார்கள். சிலர் வாய்ப்பேச்சில் மரியாதை செலுத்தி விட்டுக் காரியத்தில் அசட்டையாயிருந்தார்கள். இதனாலெல்லாம் காந்திஜி மனச்சோர்வு அல்லது மனக் கசப்பு அடைந்து விடவில்லை. மக்களின் இயல்பு இதுதான் என்பதை அறிந்து பொறுமையுடன் தமது முயற்சியைச் செய்து வந்தார். மொத்தத்தில் இந்திய சமூகத்தாரின் வீடுகளும் சுற்றுப்புறங்களும் தூய்மை அடைந்தன.

இவ்வாறு இந்திய சமூகத்தின் முன்னேற்றத்துக்காகப் பற்பல துறைகளிலும் பாடுபட்டு வந்ததோடு இந்தியர்களுக்குத் தாய்நாட்டின் நினைவும் தாய் நாட்டிடம் பக்தியும் இருக்குமாறும் பார்த்துக் கொண்டார். வெளி நாடுகளுக்கு வந்துள்ள இந்தியர்கள் தாய்நாட்டுக்குச் செலுத்த வேண்டிய கடமை உண்டு என்பதை அடிக்கடி வற்புறுத்தினார். இதைக் காரியத்தில் காட்டுவதற்கு விரைவில் சந்தர்ப்பம் நேர்ந்தது. 1897-ம் ஆண்டிலும் 1899-ம் ஆண்டிலும் இந்தியாவின் சில பகுதிகளில் கடும் பஞ்சம் நேர்ந்தது. அந்தப் பகுதிகளில் வசித்த இந்திய மக்கள் கொடிய கஷ்டங்களை அனுபவித்தார்கள். அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டுக் காந்திஜி தென்னாப்பிரிக்காவில் நிதி வசூல் ஆரம்பித்தார். தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் தாராளமாக நிதிக்குப் பண உதவி செய்தார்கள். வர்த்தக சமூகத்தாரைத் தவிர ஒப்பந்தத் தொழிலாளிகளும் தங்களால் இயன்ற சிறு தொகையைக் கொடுத்து உதவினார்கள். தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரர்களுக்குக் காந்திஜி விடுத்த வேண்டுகோளும் வீண் போகவில்லை. வெள்ளைக்காரர்கள் பலரும் இந்தியப் பஞ்ச நிவாரணத்துக்குப் பணம் கொடுத்து உதவினார்கள். காந்திஜி கூறுகிறார் :— ‘ இவ்வாறு, தென்னாப்பிரிக்கா இந்தியர்களுக்கு நான் செய்த ஊழியம் ஒவ்வொரு படியிலும் சத்தியத்தின் புதிய புதிய அம்சங்களை எனக்குப் புலப்படுத்தி வந்தது. சத்தியம் என்பது ஒரு பெரிய விருட்சம். அதற்கு நீர் ஊற்றி வளர்க்க வளர்க்க அதிகப் பழங்களைத் தருகிறது. சத்தியமென்னும் சுரங்கத்தில் எவ்வளவு ஆழமாகத் தோண்டுகிறோமோ அவ்வளவுக்கு அதில் புதைந்து கிடக்கும் ரத்தினங்களைக் கண்டு பிடிப்போம். தொண்டு புரிவதற்குப் புதிய புதிய துறைகளே அந்த இரத்தினங்களாகும்.”

* * *

இம்முறை காந்திஜி தென்னாப்பிரிக்காவில் ஐந்து வருஷம் இருந்தார். 1901-ம் ஆண்டில் தாய்நாட்டுக்குத் திரும்ப எண்ணினார். தென்னாப்பிரிக்காவில் மேலும் தங்கினால் பணம் சம்பாதிப்பதே முக்கிய வேலையாய்ப் போய்விடுமென்றும் இந்தியாவுக்குச் சென்றால் அதிக பயன் தரும் தொண்டு செய்யலாம் என்றும் நினைத்தார். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் நலன்களைக் கவனித்துக் கொள்வதற்கு மனசுக்லால் நாஸர் முதலிய நண்பர்கள் இருந்தார்கள். காந்தி மகாத்மாவுடன் சேர்ந்து தொண்டு புரிந்ததில் அவர்களுக்கு நல்ல பயிற்சி ஏற்பட்டிருந்தது.

நண்பர்களிடம் காந்திஜி தம் உத்தேசத்தைத் தெரிவித்தபோது அவர்கள் இலேசில் அதற்கு இணங்கவில்லை. கடைசியாக ஒரு நிபந்தனையின் பேரில் விடை கொடுக்க ஒப்புக் கொண்டார்கள்.

அந்த நிபந்தனை தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் மறுபடியும் காந்திஜியின் உதவி தங்களுக்குத் தேவை என்று கருதி அழைத்தால் காந்திஜி உடனே திரும்பி வந்துவிட வேண்டும் என்பதுதான்.

நிபந்தனையைக் காந்திஜி அவ்வளவாக விரும்பவில்லையென்றாலும் நண்பர்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு அதை ஒப்புக்கொண்டார். பிறகு, காந்திஜி இந்தியா போவதை முன்னிட்டுப் பிரிவுபசார விருந்துகளும் கூட்டங்களும் ஆரம்பமாயின. கேட்டால் இந்தியர்கள் அன்பு என்னும் அமுத வெள்ளத்தில் மகாத்மாவை மூழ்க அடித்தார்கள். பல பரிசுப் பொருள்கள் அளிக்கப்பட்டன. தங்கச் சாமான்கள்—வெள்ளிச் சாமான்களோடு விலையுயர்ந்த வைர ஆபரணங்களும் பரிசாக அளிக்கப்பட்டன. இந்தப் பரிசுகளில் ஐம்பத்திரண்டு பவுன் பெறுமான மூன்ன கண்ட ஹாரம் ஒன்றும் இருந்தது. இது காந்திஜியின் மனைவியாரான கஸ்தூரி பாய்க்கு என்று கொடுக்கப்பட்டது.

மேற்படி வெகுமதிகள் ஏராளமாகக் கிடைத்த ஒரு நாள் இரவு காந்திஜிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. பரிசுகளைத் தாம் சொந்தத்துக்கு வைத்துக் கொள்வது உசிதமா என்று சிந்தனை செய்தார். அவை பெரும்பாலும் சமூகத்துக்கு அவர் செய்த தொண்டை உத்தேசித்து அளிக்கப்பட்டவை. அவற்றை அங்கீகரித்தால் சமூகத் தொண்டுக்குக் கூலி பெற்றது போலத்தானே ஆகும்? அது நேர்மையாகுமா? ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமான மூன்ன பரிசுகளை வேண்டாமென்று புறக்கணிப்பதும் சுலபமான காரியமில்லை. வேண்டாம் என்று மறுப்பது காந்திஜிக்கு விருப்பமாயிருந்தாலும் அதற்கு மனைவியும் குழந்தைகளும் சம்மதிக்க வேண்டுமே? அவர்கள் ஒருவேளை ஆட்சேபித்தால் என்ன செய்வது?

காந்திஜியின் வீட்டில் அதுவரை விலையுயர்ந்த நகை எதுவும் கிடையாது. தங்கச் சாமான்—வெள்ளிச் சாமான் கிடையவே கிடையாது. நகைப் பைத்தியத்தை ஒழிக்க வேண்டும் என்று காந்திஜி ஜனங்களுக்கு அடிக்கடி உபதேசித்து வந்தார். தம் குடும்பத்தில் அதைக் கடுமையாக அனுஷ்டித்தார். அப்படியிருக்க, இப்போது பரிசாகக் கிடைத்த தங்கக் கடிகாரங்கள், தங்கச் சங்கிலிகள், வைர மோதிரங்கள் ஆகியவற்றை என்ன செய்வது?

இரவெல்லாம் யோசனை செய்து பரிசுகளைச் சொந்தத்துக்கு வைத்துக்கொள்ளக் கூடாது என்ற முடிவுக்குக் காந்திஜி வந்தார். அவற்றைத் தென்னாப்பிரிக்கா இந்திய சமூகத்துக்கே உரிமையாக்குவதென்றும், அந்தத் தர்ம சொத்தைப் பரிபாலிப்பதற்கு பார்ஸி ரஸ்டம்ஜி முதலியவர்களைத் தர்மகர்த்தர்களாக நியமிப்பதென்றும் தீர்மானித்தார். அந்தப்படியே கடிதமும் எழுதி முடித்தார். இதற்குப் பிறகுதான் காந்திஜியினால் தூங்க முடிந்தது.

பொழுது விடிந்ததும் குழந்தைகளிடம் தம்முடைய தீர்மானத்தைத் தெரிவித்தார். தந்தையின் உயர்ந்த இலட்சியங்களில் பயிற்சி பெற்று ஊறிப் போயிருந்த குழந்தைகள் காந்திஜியின் முடிவை உற்சாகமாக ஆமோதித்தன.

"அப்படியானால் உங்கள் அம்மாவிடம் இதைப்பற்றிப் பேசி அவளை இந்த ஏற்பாட்டுக்கு இணங்கச் செய்யுங்கள், பார்க்கலாம்!" என்றார் காந்திஜி.

அவர் எதிர்பார்த்தது போலவே கஸ்தூரி பாயை இணங்கச் செய்வது அவ்வளவு எளிதான காரியமாக இல்லை. ஸ்ரீமதி கஸ்தூரிபாய் கூறியதாவது:—"உங்களுக்கு இப் பொருள்கள் தேவையில்லை. உங்கள் குழந்தைகளுக்கும் தேவையில்லை. நீங்கள் சொல்கிறதைக் கேட்டுக் கொண்டு அவர்கள் உங்கள் இஷ்டப்படி கூத்தாடுவார்கள். குழந்தைகளுக்கு என்ன தெரியும்? ஆனால் பரிசுகளைத் திருப்பிக் கொடுக்க நான் சம்மதிக்க மாட்டேன். என்னை நகை அணிந்து கொள்ளக் கூடாது என்று சொல்கிறீர்கள்; அதன்படியே நான் நடக்கிறேன். ஆனால் நாளைக்கு நம் பிள்ளைகள் மணக்கும் நாட்டுப் பெண்களின் விஷயம் என்ன? அவர்களையும் நீங்கள் கட்டாயப்படுத்த முடியுமா? அவர்களுக்குக் கட்டாயம் ஆபரணங்கள்

வேண்டியிருக்கும். ஆகையால் திருப்பிக் கொடுக்கவே கூடாது."

இவ்வாறு ஸ்ரீமதி கஸ்தூரிபாய் சொல்லித் தம்முடைய வாதத்துக்குப் பக்க பலமாகக் கண்ணீர் பெருக்கத் தொடங்கினர்.

எனினும் காந்திஜி சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. கற்பாறையை யொத்த சலியாத மன உறுதியுட னிருந்தார்.

"குழந்தைகளுக்கு நாளைக்குக் கலியாணம் செய்து வைக்கப் போகிறோமா? அவர்களுக்கு வயது வந்தபின் கலியாணம் செய்துகொள்ளலாம். அப்போது அவர்களே தங்கள் காரியத்தைக் கவனித்துக் கொள்வார்கள். நாமாகக் கலியாணம் பண்ணி வைத்தால் நகைப் பைத்தியம் கொண்ட பெண்களை ஒரு நாளும் கலியாணம் செய்து வைக்கப் போவதில்லை. அப்படி உன் மருமகன்மார்களுக்கு ஆபரணம் செய்து போடுவது அவசியம் என்று ஏற்பட்டால் நான் ஒருவன் இல்லையா? என்னைக் கேட்டால் வேண்டியதை வாங்கிக் கொடுக்கிறேன்!"

"உங்களையா கேட்பது? இவ்வளவு நாளைக்குப் பிறகும் உங்கள் சமாசாரம் எனக்குத் தெரியாதா? என்னுடைய நகைகளை யெல்லாம் நீங்கள்தானே பிடுங்கிக் கொண்டீர்கள்? அப்படிப்பட்ட நீங்களா மருமகள் மாருக்கு ஆபரணம் செய்துவிடப் போகிறீர்கள்? ஒருநாளும் இல்லை. இப்போதே என் குழந்தைகளைச் சந்நியாசி யாக்கப் பார்க்கிறீர்களே! கூடாது, கூடாது. நகைகளைத் திருப்பிக் கொடுக்க முடியாது. மேலும் என்னுடைய கண்டஹாரத்தைக் கேட்பதற்கு நீங்கள் யார்? உங்களுக்கு என்ன உரிமை?"

இதைக் கேட்ட காந்திஜி சற்றுக் கோபம் அடைந்து "கண்டஹாரம் இந்திய சமூகத்துக்கு நான் செய்த ஊழியத்துக்காகக் கொடுக்கப்பட்டதா? உன்னுடைய ஊழியத்துக்காகவா?" என்று கேட்டார்.

"உங்களுடைய ஊழியத்துக்காகத்தான். ஆனால் நீங்கள் செய்த ஊழியம் நான் செய்தது போல் அல்லவா? உண்மையில், நான் ஒன்றும் செய்யவில்லையா? இரவும் பகலும் உங்களுக்காக உழைத்தேனே. அதெல்லாம் ஊழியம் அல்லவா? வழியோடு போகிறவர்களை யெல்லாம் வீட்டுக்கு அழைத்து வந்து என்னை வதைத்தீர்களே? அது என்ன ஆகிறது? உங்களுடைய விருந்தாளிகளுக் கெல்லாம் நான் அடிமையைப் போல் உழைக்கவில்லையா? அதற்காக வெல்லாம் இந்தக் கண்டஹாரம் எனக்குத் தகாதா?"

ஸ்ரீமதி கஸ்தூரி பாயின் கேள்விகளில் பெரிதும் உண்மை யிருந்தது. ஆகையால் அவை கூரிய அம்புகளைப்போல் காந்திஜி யின் உள்ளத்தில் தைத்தன. எனினும், காந்திஜி தம் உறுதியிலிருந்து பிறழவில்லை. மேலும் ஸ்ரீமதி கஸ்தூரி பாயுடன் தொடர்ந்து வாதாடிப் பரிசுகளைத் திருப்பிக் கொடுப்பதற்குச் சம்மதிக்கும்படி செய்தார்.

இந்தச் சம்பவத்தைப் பற்றி விவரமாகச் சொல்லி விட்டுக் காந்தி மகாத்மா முடிவாக எழுதியிருப்பதாவது:—

"இவ்வாறு செய்ததின் பொருட்டு நான் எப்போதுமே வருந்தியதில்லை. நாளடைவில் என் மனைவியும் அப்படிச் செய்ததே அறிவுடைமை என்பதை உணர்ந்து கொண்டாள். இதனுல் எவ்வளவோ சோதனைகளுக் குள்ளாகாமல் நாங்கள் பாது காக்கப் பட்டோம். பொது ஊழியத்தில் ஈடுபட்டோர் விலை உயர்ந்த வெகுமதிகளை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்பது என் உறுதியான அபிப்பிராயம்."

• • •

பம்பாய் இந்திய வர்த்தக சங்கக் காரியதரிசி ஸ்ரீ ஏ. வி. ராமலிங்கம், இம் மாதம் 17-ம் தேதி சான்பிரான்ஸிஸ்கோவில் நடக்கப் போகும் சர்வதேசத் தொழிலாளர் மகா நாட்டுக்கு வர்த்தகர்களின் பிரதிநிதியாக இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கிருர். பன்னிரண்டாந்தேதி யன்று கல்கத்தாவிலிருந்து விமானம் மூலம் அமெரிக்காவுக்குச்செல்கிருர்.

• • •





டிக்கெட்டுகள்:
ரூ. 500, ரூ. 250, ரூ. 100
ரூ. 50, ரூ. 25, ரூ. 10

மைக் & ஒலிபெருக்கி
ஏற்பாடு: திருச்சி ரேடியோ
சேல்ஸ் & சர்வீஸ்

குறிப்பு:— ஜூன் - மீ 6-ம் தேதிக்கு ஏற்பாடு செய்யப் பட்ட இக்கச்சேரி 27-6-48க்கு ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

லால்குடி
பெண்கள் உயர்நிலைப்பள்ளி
உதவி நிதிக்காக

ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

உதவும் சங்கீதக் கச்சேரி

★


சங்கீதரத்ன ஸ்ரீ சௌடய்யா - பிடில்
கல்பாத்தி ராமனுதன் - மிருதங்கம்
ஆலங்குடி ராமச்சந்திரன் - கடம்

27-6-48 ஞாயிறு மாலை 6 மணிக்கு
லால்குடி போர்டு உயர்நிலைப் பள்ளியில்

சென்னை மராமத்து இலாகா மந்திரி
கனம் பக்தவத்ஸலம் அவர்கள்
தலைமையில் நடைபெறும்.

★

லால்குடி பெண்கள் கல்விக் கழகத்தார்
(Lalgudi Girls Education Society)



சுலபமாக எழுதுங்கள்

எவ்வளவு வேகமாக எழுதினாலும் சுலபமாக எழுதுவது என்பது கீர்த்தி வாய்ந்த மெண்ட்மோர் ஆடோ-ப்ளோ பேனாவின் முக்கிய அம்சங்களில் ஒன்று. இந்திய சீதோஷ்ண நிலைக்காகவே செய்யப்பட்ட அதன் பாகங்கள் இதை நன்கு நிரூபிக்கின்றன. இத்துடன் ட்ராப் பில்லிங், லீவர் பில்லிங், ஸ்டட் பில்லிங் ஆகிய மாடல்களில் ஆஸ்மி இரிடியம் தோய்க்கப் பட்ட முனைகளுடன் கூடிய 14 காரட் தங்க நிப்புடன் கூடியது. பெருமைபடக் கூடிய பேனாவிற்கு இதைவிட வேறு என்ன வேண்டும்?

விலை
ரூ. 15/-

MENTMORE
Auto-Flow

மெண்ட்மோர்
ஆடோ-ப்ளோ
இங்கிலாந்தில் செய்யப்பட்டது

வர்த்தக வியாபாரிகளுக்கு முழு உரிமை பெற்ற வினியோகஸ்தர்கள்:
முல்லர் & பிப்ஸ் (இந்தியா) லிமிடெட்., 15, கங்குராம செட்டித் தெரு, மதராஸ்

விற்பனைக்குப் பிறகும் எங்கள் சேவை!

உங்கள் மெண்ட்மோர் 'ஆடோ-ப்ளோ' பேனாவில் எவ்வித கோளாறு ஏற்பட்டாலும் உங்களுக்கு அருகிலுள்ள எங்கள் டிப்போவில் ரிப்பேர் செய்து கொள்ளலாம். எங்கள் டிப்போக்களிலும், ரிப்பேர் சாமான்கள் போதிய ஸ்டாக் உள்ளன. உங்களுக்கு அருகாமையிலுள்ள ஏஜண்டு: C. வெங்கடராயலு செட்டி & சன்ஸ் 57-பஜார் தெரு, மதராஸ்

திருப்பூர் கால்நடைக் கண்காட்சி

✿ பகீரதன் ✿



"சகோதரியே! உன்னைச் சில கேள்விகள் கேட்க ஆசைப் படுகிறேன். தயவு செய்து சொல்லுவாயா?" என்று தன் அருகில் இருந்த பசுவைப் பார்த்து இன்னொரு பசு கேட்டது.

அருகில் இருந்த பசு, "ஓ! பேஷாகச் சொல்லுகிறேன்!" என்று சொல்லித் தன் பக்கத்தில் துள்ளி விளையாடிக் கொண்டிருந்த காளைக் கன்றை அன்போடு நக்கிக் கொடுத்தது.

"உனக்கு எந்த ஊர்?"

"எனக்குக் காங்கேயம்; உனக்கு?"

"ஓகோ! காங்கேயமா? அதுதான் கேட்டேன். எனக்குச் சென்னைப்பட்டணம். அது இருக்கட்டும், இதோ விளையாடுகிறதே, இது உன் குழந்தையா?"

"ஆமாம், என்னுடைய அருமைக் கன்றுதான் இது. அதோ பார்! என் குழந்தையின் நடையை!" என்று பெருமிதத்துடன் சொல்லிவிட்டு நாணத்தால் தலையைக் குனிந்து கொண்டது காங்கேய காட்டுப் பசு.

சென்னை நகரத்துப் பசு காங்கேய காட்டுப் பசு காட்டிய திசையைப் பார்த்தது. நீளமான முகமும் நிமிர்ந்திருக்கும் கொம்புகளும் கொம்புக் கேற்ற காதும் குறுகுறுப்பான கண்களும் நீலமேக சியாமள வர்ணக் கொண்ட தளதளப்பான மேனியும் கடைசல் பிடித்தது போன்ற கால்களும் சச்சதுர மான வாலும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் அழகான கொண்டையும் உடைய அற்புதமான சொரூபம் நன்று நின்று கொண்டிருந்தது. அதன் அழகில் சொக்கித் தன்னை மறந்து அந்தக் காளையைப் பார்த்துக் கொண்டே இருந்தது சென்னை நகரத்துப் பசு. "என்ன அப்படிப் பார்க்கிறாய்?" என்ற காங்கேய காட்டுப் பசுவின் குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தது சென்னை நகரத்துப் பசு.

"ஆகா! இந்த ஒருத்தனைப் பார்த்து விட்டுத்தான் 'மானிடருள் வலிமை மிகுந்த மைந்தர்தமை—மேனியுறக் காளையென்று மேம்பாடுறப் புகழ்வார்' என்று பாரதியின் குயில் கூவியிருக்க வேண்டும்" என்று சென்னைப் பசு சொல்லியது.

காங்கேய காட்டுப் பசு மனதிற்குள் சிரித்துக் கொண்டு, "உனக்குக் குழந்தைகள் இல்லையா?" என்று கேட்டது.

"அதை ஏன் கேட்கிறாய்? எனக்கும் ஓர் அழகான குழந்தை இருந்தது. என்னை வளர்க்கிறானே பாவி, அவன் என் குழந்தையை என்னுடைய காலிலேயே கட்டி விட்டுப் பாலைக் கறந்து விற்றுவிடுவான். என் கன்று பால் இல்லாமலேயே மடிந்து விட்டது. எனக்கும் வயிறு நிறையத் தீனி போடுவதில்லை" என்று தன்னை மீறி வந்த



"என்ன, ஸார்! சௌக்யமா?"

துக்கத்தையும் அடக்கிக்கொண்டு சென்னை நகரத்துப் பசு சொல்லிற்று.

இந்தச் சமயத்தில் "ம்...ம்...மா" என்று உறுமும் சத்தம் கேட்டு இரண்டு பசுக்களும் திரும்பிப் பார்த்தன. காங்கேய நாட்டுக் காளை தன் வாலைக் குழைத்து முதுகில் அடித்துக்கொண்டு ஒரு மோஹனப் புன்னகை புரிந்தது.

அதைப் பார்த்த சென்னை நகரத்துப் பசு தன் துக்கத்தையும் மறந்து அதன் புன்சிரிப்பில் மயங்கி நின்றது. இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே இருந்த நான் என்னையறியாமல் சிரித்துவிட்டேன். என் சிரிப்புச் சத்தத்தைக் கேட்டு அந்தக் காளை மிரண்டு துள்ளியது. காளைகளைப் படம் பிடிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஸ்ரீ கணேசன் காளையை விட வேகமாகத் துள்ளிக் குதித்து, "என்ன சார்! சமய சந்தர்ப்பம் தெரியாமல் சிரித்துக் கெடுத்து விட்டீர்களே!" என்றார்.

இந்த நிகழ்ச்சி சென்ற மே மாதம் இருபத்து மூன்றாம் தேதி திருப்பூரில் நடந்த "அகில இந்திய திருப்பூர் தொகுதிக் கால்நடைக் கண் காட்சி"யில் நடந்தது.

தென்னிந்தியாவிலேயே மிகப் பெரியது என்று பெயர் பெற்ற மாட்டுச் சந்தை ஒவ்வொரு வருஷமும் வைகாசி மாதத்தில் திருப்பூரில் நடக்கிறது. இந்தச் சந்தையில் வியாபாரத்துக்கென்று ஆயிரக்கணக்கான மாடுகள் வருகின்றன. தென்னிந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் விவசாயிகள் சந்தைக்கு வருகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை யொட்டி, "கோவை ஜில்லா விவசாய சங்கம்" ஒரு கால் நடைக் கண் காட்சியை நடத்துகிறது. கண்காட்சியில் கலந்து கொண்ட நல்ல ரக மாடுகளுக்குப் பரிசளிக்கிறது. அந்தந்த மாட்டுக்குச் சொந்தக்காரரையும் பாராட்டுகிறது.

மேற்படி விவசாய சங்கத்தின் ஆதரவில் இந்த வருஷம் நடந்த ஐம்பதாவது கால் நடைக் கண்காட்சியை மாராமத்து இலாகா மந்திரி கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

ஆகா! அந்தக் காட்சியே காட்சி! சுமார் இருநூறு எருதுகளும் பசுக்களும் வரிசை வரிசையாகக் கட்டப்பட்டிருந்தன. ஒரு புறம் எருதுகளும் இன்னொரு புறம் பசுக்களும் ராணுவத்தில் பயிற்சிபெற்ற சோல்ஜர்கள் போல் ஜம்மென்று நிமிர்ந்து நின்று கொண்டிருந்தன. ஒவ்வொரு மாட்டையும் பெரிய மணிக்கயிறு போட்டுக் கட்டிப் பிடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார்கள் மாடு வளர்க்கும் நிபுணர்கள்.

பல ஜாதி மாடுகள் காட்சிக்கு வந்திருந்தன. மலை ஜாதி, நாட்டு ஜாதி, அந்தியூர்க் காளை, காங்கேயம் ஆகியவை உயர்ந்த ஜாதி மாடுகள் என்று நிபுணர்கள் கூறினார்கள். காங்கேயம்தான் மிக உயர்ந்த ஜாதி என்று உலகத்தில் உள்ள விவசாய நிபுணர்கள் எல்லாம் ஒத்துக் கொண்டிருக்கிறார்களாம். இப்படிக் காங்கேயம் மாடுகள் பெயரும் புகழும் பெற்றதற்குக் காலஞ்சென்ற பழைய கோட்டைப் பட்டக்காரர் ராவ் பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் அவர்களே காரணம் என்று தெரிந்தது.

திருப்பூரிலிருந்து சுமார் இருபத்தெட்டு மைல் தூரத்திலுள்ள பழைய கோட்டையில் ஸ்ரீ பட்டக்காரர் கால் நடைப் பண்ணை ஒன்று வைத்து நடத்தி வந்தார். இப்பொழுதும் அவருடைய குடும்பத்தார் நடத்தி வருகிறார்கள். ஸ்ரீ நல்ல தம்பி பட்டக்காரர் காலத்தில் பட்டக்காரருக்குச் சொந்தமான மாடுகள் எவ்வளவு என்று அவருக்கே கணக்குத் தெரியாது என்று சொல்லிக் கொள்கிறார்கள். பட்டக்காரரின் மாடுகளுக்குப் பெரிய மனிதர்கள், கவர்னர் துரைகள், மேல் நாட்டு விவசாய நிபு

ளர்கள் முதலியோர் வந்து பேட்டி கொடுத்து விட்டுப் பெருமை யடைவார்களாம். இந்த மாதிரி மாட்டுப் பண்ணை வைத்து நடத்திய விவசாயி இந்தியாவிலேயே பழைய கோட்டைப் பட்டக்காரர் ஒருவர்தானும்.

கவுண்டர்கள் எனப்படும் கொங்க நாட்டு வேளாளர்களின் சாதித் தலைவர் பட்டக்காரர். மாடுகள் விஷயத்தில் மட்டுமல்லாது கவுண்டர்கள் விஷயத்திலும் அவர் வைத்ததுதான் சட்டமாம். சீமைக் காளைகளைக் கொண்டுவந்து நமது மாடுகளிடையே விடுவதால் ஏற்படும் 'கிராஸ்-பிரீட்' அனர்த்தங்களைப் பற்றி அடிக்கடி அவர் சொல்லி அங்கலாய்ப்பாராம். கூடவே "நமது நாட்டுக் காளைகளை உலகெங்கும் உள்ள மாடுகளிடையே விடுவதால் ஏற்படும் 'கிராஸ்-பிரீட்' மூலம் உலகத்தில் உள்ள மாடுகளையே உயர்த்தலாம்!" என்று கூறி விட்டு, அதற்குத் தமது கற்பது வருஷ அனுபவத்திலிருந்து உதாரணங்கள் சொல்லுவாராம். இவருடைய முயற்சிகளின் பலனாகத்தான் காங்கேயம் எருதுகள் உலகத்திலேயே சிறந்தவை என்று உலகக் கால் நடை மேதைகள் ஒப்புக் கொள்ள நேர்ந்ததாம்.

தற்பொழுது ஸ்ரீ நல்லதம்பி பட்டக்காரரின் குமாரர் ஸ்ரீ நல்லசேனபதி பட்டக்காரர் அவர்கள் தந்தையைப் போலவே மாடுகளை வளர்ப்பதிலும் பராமரிப்பதிலும் 'கிராஸ்-பிரீட்' ஆராய்ச்சி செய்வதிலும் நிபுணராக இருக்கிறார். அவருடைய மேற்பார்வையில் வளர்க்கப்பட்டு வரும் பழைய கோட்டை மாட்டுப் பண்ணையில் சுமார் ஆயிரத்து ஐந்நூறு மாடுகள் இருக்கின்றனவாம். அவற்றிலிருந்து சில மாடுகள் கண்காட்சிக்கு வந்திருந்தன. அந்த மாடுகளைப் பற்றிக் கனம் மந்திரி அவர்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்தார் பழைய கோட்டை பட்டக்காரர்.

எல்லா மாடுகளையும் பற்றிச் சொல்லி விட்டு இவ்வளவும் 'காங்கேயம்-பிரீட்' மாடுகள் தான் என்று ஸ்ரீ பட்டக்காரர் சொல்லி முடித்தார்.


"பலமாதிரி உடல் அமைப்புகளும் வர்ணங்களும் கொண்ட இவ்வளவு மாடுகளும் காங்கேயம் மாடுகள் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதே?" என்று வியப்புடன் கேட்டார் கனம் மந்திரி.

"காங்கேயம் மாடுகளின் சரித்திரமே விசித்திரமானது. இளம் கன்று பிறந்து நாலு மாதம் வரையில் சிவப்பாக இருக்கும்" என்று சொல்லி ஒரு காளைக் கன்றைக் காண்பித்தார். நாலு மாதத்துக் கன்று ஒரு சிறிய மாடு போலிருந்தது. பிறகு கறுப்பும் வெள்ளையுமாக இருந்த இன்னொரு காளையைக் காண்பித்து, "இது இரண்டு வருஷத்துக் கன்று; கன்று வளர வளர மேனி நிறமும் உடல் அமைப்பும் மாறுகிறது" என்று சொன்னார்.

"ஒரே சாதிக் கன்றுகளில் சில கன்றுகளுக்குக் கால்கள் குட்டையா யிருப்பானேன்? சில கன்றுகளுக்குக் கால் உயரமாக இருப்பானேன்?" என்று கேட்டார் அருகிலிருந்த இன்னொருவர்.

"இயற்கையிலேயே காங்கேயம் மாடுகள் இப்படிப் பிறக்கின்றன. கால்கள் குட்டையாக இருந்தால் வண்டிப் பாரம் இழுக்கும். நெட்டையாக இருந்தால் குதிரைபோல ஓடும்" என்று சொல்லி நீளமான கால்களையுடைய அழகிய காளைகளைக் காண்பித்தார் ஸ்ரீ பட்டக்காரர். மான்கள் போல மருண்டு கொண்டிருந்த அந்தக் காளைகளைப் பார்த்தவுடன் "இதில் ஒரு ஜோடி மாடு வாங்கலாமா?" என்று எனக்குத் தோன்றியது. "இந்தக் காளைகளின் விலை என்ன?" என்று கேட்டு வைத்தேன். "ஆயிரத்து ஐந்நூறிலிருந்து இரண்டாயிரம் ரூபாய் வரையில்" என்றார். பிறகு "அப்படி ஒன்றும் விலை அதிகமில்லை; உலகத்திலே உள்ள மாட்டு ஜாதிகளுக்குள்ளேயே உயர்ந்த ஜாதி இதுதான். அது நம் தமிழ்நாட்டில் இருக்

கன்றுக்குப் பால் கொடுக்கும் காங்கேயம் காராம்பசு.





கால் நடைச் செல்வத்தில் கவலைகொண்ட பிரமுகர்கள். இடமிருந்து:— ஸ்ரீ வெள்ளியங்கிரிக் கவுண்டர், மராமத்து மந்திரி கனம் பக்தவத்சலம், கோயமுத்தூர் கலெக்டர், திருப்பூர் நகரசபைத் தலைவர் ஸ்ரீ பழனிசாமிக் கவுண்டர்.

கிறது. இது நமது தேசத்துச் செல்வம். இதற்கு விலை மதிப்பிட முடியாது. அதைப் பராமரிப்பதில் எனக்கு ஏற்பட்டிருக்கும் செலவைத்தான் சொன்னேன்" என்றார்.

இந்தச் சமயத்தில் "எங்கள் ஊர் மாடுகள் ஏன் இப்படி வளருவதில்லை?" என்று கேட்டார் ஒரு நோஞ்சான் மாட்டின் சொந்தக்காரர்.

"கொங்கு நாட்டில் ஒரு இயற்கை வசதியும் இருக்கிறது. இங்குள்ள காங்கேயம், தாராபுரம் முதலிய ஊர்களின் மண் நிறையச் சுண்ணாம்புச் சத்து உள்ளது. அதனால் இங்கு 'கொழுக்கட்டைப் புல்' என்ற ஒருவகைப் புல் வளருகிறது. அதைச் சாப்பிட்டு வளரும் மாடுகள் நன்றாகக் 'கொழு கொழு' என்று இருக்கின்றன" என்றார் பட்டக்காரர்.

"காங்கேயம் காளைகளை ஏன் மற்ற ஜில்லாக்காரர்களுக்கும் உதவும்படி செய்யக் கூடாது?" என்று ஒரு தென்னாற்காடு விவசாயி கேட்டபோது பட்டக்காரர் ஒரு பிரசங்கமே செய்து விட்டார்.

"உலகத்து மாடுகளின் வளர்ச்சிக்காகத் தான் காங்கேயம் பொலி காளைகளை வளர்க்கிறோம். எங்கள் பண்ணையில் நூற்றுக்கு மேற்பட்ட பொலி காளைகள் இருக்கின்றன. என் தந்தையார் காலத்தில் தென் அமெரிக்காவில் இருந்துகூட வந்து பொலி காளைகள் வாங்கிக்கொண்டு போயிருக்கிறார்கள். கோவை ஜில்லா போர்டார் ஒவ்வொரு வருஷமும் எங்கள் பண்ணையிலிருந்து பல பொலி காளைகளை வாங்கி ஜில்லாவெங்கும் இலவசமாகக் கொடுக்கிறார்கள். சமீபத்தில் டில்லியில் நடந்த 'அகில இந்தியக் கால்நடைக் கண்காட்சி'யில் பரிசு பெற்ற காளை எங்கள் மாட்டுப் பண்ணையிலிருந்து வாங்கிச் சென்றதுதான்!" என்று சொல்லி விட்டு, "இன்று இந்தக் கால் நடைக் காட்சியில் இருக்கும் எங்கள் பண்ணையின் மாடுகள் எல்லாம் போட்டியில் கலந்து கொள்ள இல்லை. காரணம், நாங்கள் போட்டியில் கலந்து கொண்டால் சந்தேகமில்லாமல் எங்களுக்குத்தான் பரிசு கிடைக்கும். அதனால் இதர விவசாயிகள் தங்கள் மாடுகளை வளர்ப்பதில் ஊக்கம் காட்ட முடியாது. இதனால் மாடுகள் வளர்ப்பதற்குப் பல வழிகளில் உதவி புரிந்து கொண்டுதான் வருகிறோம்" என்றார்.

"காளைகள்தான் பிரமாதமாக இருக்கின்றன. பால் கொடுக்கும் பசுக்கள் இல்லையா?" என்று ஒரு பால் சாப்பிடும் ரஸிகர் கேட்டு வைத்தார்.

"அடாடா! என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள். காங்கேயம் பசு வருஷத்துக்கு 3,000 பவுண்டிலிருந்து 4,000 பவுண்டு வரை பால் கறக்கும். காங்கேயம் வளர்ப்புப் பசுவின் பாலைச் சாப்பிட்டவர்கள் வேறு பாலைச் சாப்பிடப் பிரியப் படவே மாட்டார்கள்" என்று கூறிப் பக்கத்திலிருந்த பசுவை அருமையாகத் தடவிக் கொடுத்தார் பட்டக்காரர். அவர் மாடுகள் மீது காட்டும் அன்பைக் கண்டு வியந்தேன்.


மாடுகளையே பார்த்துக் கொண்டிருந்த நான் உலகத்தை மறந்து விட்டேன். மாட்டு உலகத்திலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்து விட்டேன். அந்தச் சமயத்தில் மாடுகளைத் தவிர அங்கு வந்திருந்த மகா ஜனங்கள் எல்லோரும் கண் காட்சியின் மத்தியில் அலங்காரமாகப் போட்டிருந்த கொட்டாரப் பந்தலுக்கு ஓடினார்கள். நானும் ஓடினேன். கனம் பக்தவத்சலம் அவர்கள் ஸ்ரீ வெள்ளியங்கிரிக் கவுண்டர் தலைமையில் கால் நடைகளைப் பற்றி அருமையான சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார்.

"உலகத்திலேயே வேறு எந்த இனத்துக்கும் இல்லாத உயர்ந்த பண்பாடு பழக்க வழக்கம் நம் தமிழ் இனத்துக்கு மட்டும் தான் உண்டு. இந்தப் பூமியிலே உள்ள மிருக இனங்களில் மாடுகளைப் போன்ற உயர்ந்தஜாதி வேறு ஒன்றும் கிடையாது. காளை மாட்டை நந்தி பகவானாக வணங்குகிறோம். நமது அரசர்கள் ரிஷபம் பொறித்த கொடியை நாட்டி அரசாண்டிருக்கிறார்கள். கைலாசநாதர் தமக்குரிய வாகனமாக ரிஷபத்தைத் தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்!" என்று கனம் பக்தவத்சலம் சொன்னபோது கண்காட்சி வரிசையில் உள்ள காளைகளைப் பார்த்தேன். அவைகளும் மந்திரியின் பேச்சைப் புரிந்து கொண்டது போல நிமிர்ந்து நின்று "ம்...ம்...மா" என்று சந்தோஷ ஆரவாரம் செய்தன.

"தமிழர்கள் நன்றி மறக்காதவர்கள். தம் குழந்தைகளுக்குப் பால் கொடுத்து உதவும் பசுவைத் தெய்வமாகப் பூஜித்து வணங்குகிறார்கள். இந்த வழக்கம் இப்பொழுதும் நமது கிராமங்களிலே நடப்பதைப் பார்க்கலாம். வருஷம் முழுவதும் எருதுகளின் உதவியைக் கொண்டு உழுது பாடு படுவதால் தான் நாம் வயிரார உண்ண உணவு கிடைக்கிறது. அப்படி உழைக்கும் மாட்டுக்கென்று ஒரு தனி விழா நடத்தி நன்றி செலுத்திப் பெருமைப் பட்டவன் தமிழன். ஒவ்வொரு வருஷம் தை மாதம் இரண்டாம் தேதியை 'மாட்டுப் பொங்கல்' என்று கொண்டாடுகிறோம். இது உலகில் வேறு எந்த இடத்திலும் இல்லாத ஒரு திரு விழா. இப்படிக் கால் நடைகளைக் கருத்துடன் வளர்த்துவந்த நாம் சமீபகாலமாக அதில் கவனம் செலுத்துவதில்லை. அதனுடைய காரணங்களைச் சொல்லிக் கொண்டு இருப்பதை விட இனிமேலாவது கால்நடைகளை வளர்த்துவருவதில் ஊக்கம் செலுத்துவது நலம். ஜில்லாதோறும் தாலுக்காதோறும் இது போன்ற கால்நடைக் கண்காட்சிகளை வைத்து எல்லாருக்கும் மாடுகளை வளர்க்கும் வழிகளையும் நல்ல உயர்ந்த ஜாதி மாடுகளைப் பார்க்கும் வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும். சர்க்காரும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்.

"விவசாயம் பூராவும் இயந்திரத்தினால் நடக்கும் காலம் வந்தால்கூட நமக்குப் பால் அவசியம்; பாலுக்குப் பசுவும் அவசியம்; எருதுகளும் அவசியம். ஆகையால் நமது வாழ்க்கையோடு ஒட்டிய பசுவைப் போற்றி வளர்க்காமல் இருக்க முடியாது. நமது நாட்டுக் காளைகளின் பெருமைகளை உலகம் எல்லாம் பரவும்படி செய்த பழைய

"...ம்...ம்...மா!" என்று சந்தோஷ ஆரவாரம் செய்தது.



கோட்டைப் பட்டக்காரரைப் பாராட்டுகிறேன்!" என்று கனம் மந்திரி சொல்லி முடித்தபோது, அங்கு கூடியிருந்த விவசாயிகள் பலத்த கைதட்டலுடன் ஆமோதித்தார்கள்.

• • •

பிறகு கால் நடைக் காட்சிக்கு அருகில் இருந்த மாட்டுச் சந்தைக்குச் சென்றோம். அடா, அடா! அந்தக் காட்சியைப் பற்றி என்னத்தைச் சொல்ல! கண்ணுக்கு எட்டியதூரம் திரும்பிய பக்கங்கள் எல்லாம் விதம் விதமான மாடுகளும், வண்டிகளும், வைக்கோல் போர்களுமாக இருந்தன. ஜனங்கள் சுறுசுறுப்பாக இங்கும் அங்கும் போய்க் கொண்டிருந்தார்கள். இதற்கு முன் நான் இவ்வளவு மாடுகளைச் சேர்ந்தாற்போலப் பார்த்திராததால் எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. "அடே அப்பா! இவ்வளவு மாடுகளா!" என்று என்னையும் அறியாமல் கேட்டுவிட்டேன்.

எங்களோடு வந்த திருப்பூர் நகர சபைத் தலைவர் ஸ்ரீ பழனிசாமிக் கவுண்டர் அவர்கள் இதைப் பார்த்து விட்டு "இப்படி ஆச்சரியப்படுகிறீர்களே, இத்தனை வருஷத்தையும்விட இந்த வருஷம் மாடுகள் குறைவு. மாட்டுக்கு வேண்டிய பருத்திக் கொட்டை, புல் முதலிய தீவனங்களின் பஞ்சத்தினாலும் ரேஷன் நெருக்கடியினாலும் மாடுகள் அதிகம் வரவில்லை. இருபதினாயிரம் மாடுகள் தான் வந்திருக்கின்றன" என்று சொன்னார்.



பழைய கோட்டை பட்டக்காரர் ஸ்ரீ நல்லசேனாபதி மன்றாடியார்.

மாடுகள் இருபதினாயிரம் என்றால் மனிதர்களும் அவ்வளவு பேர் வந்திருந்தார்கள். மாடுகளைப் பார்ப்பதும் விலை பேசுவதும் பிறகு வேறு மாடுகளைப் பார்ப்பதுமாகச் சந்தைக்கு மாடு வாங்க வந்தவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். இப்படிப் போய்க் கொண்டிருந்தவர்களில் சிலர் ஒரு இடத்தில் மாடு வாங்குவதைக் கவனித்தேன். அதைப் பார்த்த பிறகு மாடுவாங்குவதும் அதை விற்பதும் ஒரு தனிக் கலை என்று தீர்மானித்தேன். மாட்டுக்குச் சொந்தக்காரர்கள்; மாட்டை வாங்குகிறவர்கள்; இவர்களுக்கு மத்தியில் ஒரு தரகர். அந்தத் தரகரின் சாமர்த்தியத்தைப் பற்றி என்ன சொல்லுவது என்றே தெரியவில்லை. விருவிரு என்று தன் சொந்த மாடுகளைப்போல் சந்தையில் கட்டியிருந்த மாட்டை அவிழ்த்துக் கொண்டு மாட்டை வாங்குகிறவர்களிடம் வந்தார். மாட்டின் பல்லைப் பிடித்துக் காட்டினார். அதனுடைய உடல் அமைப்பைப் பற்றியும் அதற்கு இருக்கும் இரட்டைக் கழியின் பெருமையைப் பற்றியும் பிரமாதமாகப் புகழ்ந்தார். "மாடு பிடித்திருக்கிறது, வாங்க வேண்டியதுதான்" என்று மாட்டை வாங்குகிறவர் தீர்மானம் செய்த பிறகு விலை பேச ஆரம்பித்தார்கள்.

மாட்டை வாங்குகிறவர் மாட்டின் சொந்தக்காரர் இருக்கு மிடத்திலிருந்து சுமார் நூறு கஜத்துக்கு அப்பால் போய்விட்டார். மாட்டுக்காரரும் தரகருமாகக் குசுகுசுவென்று பேசிக்கொண்டார்கள். என்னத்தைத்தான் பேசினார்களோ தெரியவில்லை. இதற்கு மத்தியில் மாட்டுத் தரகர் மாட்டுச் சொந்தக்காரரிடமும் மாடு வாங்குகிறவரிடமும் போய்ப் போய் வந்தார். கடைசியில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

தரகர், மாட்டை வாங்குகிறவரை மாட்டுச் சொந்தக்காரரிடம் அழைத்துப் போனார். ஆயிரத்து ஐந்நூறோ இரண்டாயிரமோ, சரியாகத் தெரியவில்லை, அந்த மாட்டிற்கு விலை கொடுப்பது என்று முடிவு கட்டினார்கள். இந்த ஆயிரம் இரண்டாயிரம் பேரத்தில் ஒரு இருபது ரூபாயில் தகராறு வந்துவிட்டது. சண்டை போட்டுக் கொள்கிறவர்கள் போல, "சரிதான், பிடி அண்ணே! அவர்தான் சாப்பிடட்டும். நீ மனசோடு மாட்டைப் பிடித்துக் கொடு. பணத்தைப் பிடி என்றால் பிடி!" என்று சத்தம் போட்டுச் சொல்லிக் கொண்டே மாட்டுச் சொந்தக்காரரின் மடியில் பணத்தை வைத்தார் தரகர். மாட்டுச் சொந்தக்காரர், "அதெல்லாம் முடியாது. இந்த மாட்டை

விற்க வேண்டும் என்று ஒன்றும் அவசரமே இல்லை!" என்று சொல்லிவிட்டு முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டார்.

இப்படி அரைமணி நேரத்துக்கு மேலே வாதப் பிரதிவாதங்கள் நடந்தன. யாராவது விஷயம் தெரியாதவர்கள் அந்தக் காட்சியைப் பார்த்தால் ஏதோ பெரிய சண்டை நடக்கிறது என்று மத்தியஸ்தம் செய்து வைக்கக் கிளம்பினார்களென்றால் ஆச்சரியப்படுவதற்கில்லை. கடைசியில் மாட்டின் 'சொந்தக்காரர் பணத்தைப் பெற்றுக் கொண்டு மாட்டைப் பிடித்து அதை வாங்கியவரிடம் கொடுத்தார். பிறகு இரண்டுபேரும் நெருங்கிய நண்பர்கள் போலப் பேசிக் கொண்டு பிரிந்தார்கள்.

இதுபோன்ற காட்சி, சந்தையில் பல இடங்களில் நடந்து கொண்டிருந்தது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.



"போய் வருகிறீர்களா? ரொம்ப சந்தோஷம்"

"என்ன ஸார்! மணி நாலாகப் போகிறது, வேடிக்கை பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களே?" என்று சேர்மென் அவர்கள் சொன்னவுடன் சந்தையை விட்டு வருவதற்கு மனமில்லாமல் திரும்பினேன்.

* * *

திருப்பூரில் மேற்படி சந்தையையொட்டிக் கால்நடைக் காட்சியை விடாமல் நடத்துவதற்குப் பேருதவி புரிந்து வரும் ஸ்ரீ வெள்ளியங்கிரிக் கவுண்டர் அவர்களையும் திருப்பூர் நகரசபைத் தலைவர் ஸ்ரீ கே. என். பழனிசாமிக் கவுண்டர் அவர்களையும் கால்நடைகளின் வளர்ச்சிக்காகவே பாடு பட்டு வரும் பழைய கோட்டை பட்டக்காரர் ஸ்ரீ நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் அவர்களையும் சென்னை அரசாங்கக் கால் நடை வைத்திய இலாகாத் தலைவர் ஸ்ரீ கே. எஸ். காயனாரையும் வாழ்த்துகிறேன்.

● ● ●

அதே கதைதான் !

பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வந்த சிறுவன் தன் தந்தையிடம் ஓடோடியும் சென்று, "என் அப்பா, உன்னைப் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியே அனுப்பி விட்டார்களென்று ஒரு கதை சொல்லுவாயே ஞாபகமிருக்கிறதா?" என்று கேட்டான்.

"ஞாபகம் இருக்கிறது. அதற்கு இப்பொழுது என்ன வந்தது?" என்று அப்பா கேட்டார்.

"ஒன்றுமில்லை; அந்தக் கதையை உன்னிடமே நான் திருப்பிச் சொல்லப் போகிறேன், கொஞ்சம் கேளேன்!" என்றான் சிறுவன்.

இலக்கிய நெஞ்சம்

கோமதி ஸ்வாமிநாதன்

மாலை ஆபீஸிலிருந்து திரும்பிய ரங்கநாதன் காதுகளில், வாசற்படி ஏறும்போதே பின் கட்டிலிருந்து எழுந்த பேச்சுச் சத்தம் நன்றாய் விழுந்தது. அவன் தாயாரும், மனைவியும் எதைக் குறித்தோ உச்சஸ்தாயியில் வாக்கு வாதம் செய்து கொண்டிருந்தார்கள். அதை வாக்குவாதம் என்று சொல்வதை விட வாக்கு யுத்தம் என்றே சொல்லிவிடலாம். இது ரங்கநாதனுக்குப் புதிதல்ல; தினசரி அவன் மனைவி வசந்தாவுக்கும், ரங்கநாதனின் தாயார் லக்ஷ்மிக்கும் ஏதாவது ஒரு விதத்தில் அபிப்பிராய பேதம் எழுந்து கொண்டே இருக்கும்.

“அம்மா! இது வீடா, சந்தைக் கடையா? உங்கள் சண்டைகளுக்கும் சச்சரவுகளுக்கும் முடிவே கிடையாதா?” என்று கோபாக்கிராந்தனாய் இரைந்து கொண்டே கோட்டைக் கழற்றினான் ரங்கநாதன்.

“என்னைத் தான் உனக்குக் கண்டிக்கத் தெரியும். அது என் தலைவிதி!” என்று சொல்லிக் கொண்டே லக்ஷ்மி அம்மாள் அடுக்களையிலிருந்து எழுந்து கொல்லைத் தாழ்வாரத்திற்குப் போனாள்.

சில விநாடிகளில், கையில் அல்லித்தண்டு போல் குளிர்ந்த காப்பியுடன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க, “தனிக் குடித்தனம் வைத்தாலன்றி என்னால் இங்கு ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது!” என்று முணுமுணுத்துக் கொண்டே வசந்தா கூடத்திற்கு வந்தாள்.

இது பழக்கமான பல்லவிதான் என்றாலும், அன்று என்னமோ ரங்கநாதனுக்கு அது சுரீரென்று பட்டது. அலைமோதிக் கொண்டிருந்த அவன் உள்ளத்தை அந்த ஆறிப்போன காப்பி பொங்கி எழச் செய்தது. காப்பியை அப்படியே வசந்தாவின் மீது வீசிவிட்டு “நான் ஒழிந்தால் உனக்கு நிச்சயமாகத் தனிக்குடித்தனம் தான்!” என்று இரைந்து கத்தினான். அடுத்த நிமிஷம் அவன் துண்டை உதறித் தோளின்மீது போட்டுக் கொண்டு ஆற்றங்கரையை நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

லக்ஷ்மி அம்மாளுக்கு ரங்கநாதன் ஒரே பிள்ளை; வேறு பெண்களும் கிடையாது. நல்ல உத்தியோகத்திலிருந்த அவள் கணவர் ரங்கநாதனின் பால்ய பருவத்திலேயே இறந்து காலமாய் விட்டார். நல்ல வேளையாக அவர் கொஞ்சம் ரொக்கப் பணமாகச் சேர்த்து வைத்திருந்ததால் லக்ஷ்மி அம்மாளால் கூடியவரை கஷ்டப்படாமல் காலம் கழிக்க முடிந்தது. ரங்கநாதனையும் நன்றாகப் படிக்க வைத்தாள். அவன் முன்னுக்கு வந்து தனக்குச் சந்தோஷமளிக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் அவள் எவ்வளவோ செட்டாகவும், சிக்கனமாகவும் இருந்தாள்.

ரங்கநாதன் புத்திசாலிப் பையன். நன்றாகப் படித்துச் சர்வகலாசாலைப் பரீட்சையிலும் தேறினான். அதிர்ஷ்டவசமாக அவனுக்கு உடனே நல்ல வேலை கிடைத்தது. “ரங்கா! இனிமேல் என்னால் தாளாது. சீக்கிரமே நல்ல பெண்ணாகப் பார்த்து நீ கல்யாணம் செய்து கொண்டுவிடு. உன் கிரகலக்ஷ்மி வந்தால்தான் என்னை உட்கார வைத்துச் சாப்பாடு போடுவாள்!” என்று அவனை அடிக்கடி நச்சரிக்கத் தொடங்கினாள் லக்ஷ்மி அம்மாள்.

“அம்மா! இத்தனை நாள் பாடு பட்டு என்னை மனிதனாக்கிய மாதிரி, நீயே உனக்கு இஷ்டமான ஒரு பெண்ணைப் பார்த்துத் தேர்ந்தெடு; அவள் உன் மனதுக்குத் திருப்தியளித்து உன்னைப் பணிந்து போற்றி உபசரிக்கக் கூடியவளாக இருக்க வேண்டும்!” என்று லாகவமாகப் பதில் சொல்லித் தப்பித்துக் கொண்டான் ரங்கநாதன்.

கடைசியில் லக்ஷ்மியே வசந்தாவைத் தேர்ந்தெடுத்தாள். ஆனால் வசந்தாவின் குணம் விஷம் கலந்ததென்று அவளுக்கு அப்போது தெரியவில்லை.

வசந்தா புக்ககம் வந்த சில தினங்களுக்கெல்லாமே புயல் வீசத் தொடங்கிவிட்டது. லக்ஷ்மி அவளை எவ்வளவுக் கெவ்வளவு நேசித்தாளோ, அதைப்போல் பன்மடங்கு வசந்தா அவளை வெறுத்தாள். கணவன் மீது தன் ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கு

அவள் பெரிய தடையாக நிற்கிறாள் என்று கருதினான். அரை குறைப் படிப்புடன், தற்பெருமையும் அகங்காரமும் சேர்ந்த வசந்தாவின் கண்களுக்கு லக்ஷ்மி பரம விரோதியாகத் தென்பட்டாள். அனுபவத்தினால் அடிபட்டுக் கஷ்டத்துடன் வாழ்க்கை நடத்திய லக்ஷ்மி அம்மாள், வசந்தாவைச் சிக்கனமாகக் குடித்தனம் செய் என்று சொல்லுவாளே தவிர, வேறு ஒரு வார்த்தையும் கடிந்து சொல்ல மாட்டாள். நாட்டுப் பெண்ணைப் போற்றி அன்புடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரே நோக்கம் தான் அவளுக்கு.

ரங்கநாதன் மானஸ்தன். சண்டையையோ, சச்சரவையோ விரும்பாதவன். தன் வீட்டைப் பற்றி நாலு பேர் வம்பளக்கப் பிரியப்படாதவன். வசந்தாவை முடிந்த மட்டும் அவன் கண்டித்தான். பெரியவர்களுக்கு அடங்கி மரியாதையாகக் குடித்தனம் செய்யும்படி ஆனமட்டும் வற்புறுத்தினான். ஆனால் முரட்டுச் சுபாவமுள்ள வசந்தா தனிக் குடித்தனப் பல்லவியைப் பாடினாளே தவிர அவன் உபதேசங்களைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ரங்கநாதன் லக்ஷ்மி அம்மாளிடமும் சொல்லிப் பார்த்தான். "அம்மா! நீதான் சும்மா இருந்தால் என்ன? இரண்டு கைகளையும் தட்டினால்தானே சத்தம்?" என்று இதமாகச் சொல்லிப் பார்த்தான்.

"ரங்கா! 'சிக்கனமாக இரு, சமர்த்தாக இரு' என்று சொல்வது தப்பா? இதைக்கூடச் சொல்லக் கூடாதென்றால் நான் இந்த வீட்டில் இருந்து என்ன பிரயோஜனம்? எனக்குத் தனியாக இந்தத் தெருவிலேயே ஒரு இடம் பார்த்துக் கொடு. நான் பகவான் பேரைச் சொல்லிக்கொண்டு காலத்தைக் கழிக்கிறேன்!" என்று நிஷ்டூரமாகச் சொன்னாள் லக்ஷ்மி அம்மாள்.

அன்று அவன் வீட்டிற்குத் திரும்பிய போது ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்திருந்தான். அதன்படி மறுநாளே அடுத்த தெருவிலிருந்த ஒரு சிறு வீட்டில் லக்ஷ்மி அம்மாள் வசிப்பதற்கு ஏற்பாடு செய்தான். அவளுக்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் வாங்கிப் போட்டான். அக்கம் பக்கத்தவர்கள் கேலியாகப் பேசியதைக் கூட அவன் காதில் போட்டுக் கொள்ளவில்லை. வசந்தாவின் தனிக் குடித்தன ஆசையும் நிறைவேறியது. ரங்கநாதன் தினசரி கொஞ்ச நேரம் தாயார் இருக்குமிடத்திற்குப் போய் அவளுக்குத் தேவையான சாமான்களை வாங்கித் தருவான். அவன் ஆபீஸ் போயிருக்கும் நேரங்களில் லக்ஷ்மி அம்மாள் எப்போதாவது வந்தாலும் வசந்தா முகம் கொடுத்துப் பேசவில்லை. இந்த நிலையில் சில மாதங்கள் கழிந்து அவள் பிரசவத்திற்காகப் பிறந்தகத்திற்குப் போகவேண்டி நேர்ந்தது. அவள் போனவுடன் ரங்கநாதன் தன் தாயாரிடம் போய்ச் சாப்பிட்டு வந்தான்.

*

நாட்கள் ஓடின. வசந்தா அழகான ஆண் குழந்தையைப் பெற்று எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தாள். அவள் வந்தவுடன் ஒரு நாள் லக்ஷ்மி அம்மாள் வந்து குழந்தையைப் பார்த்து விட்டுப் போனாள். அப்புறம் சில மாதங்கள்வரை அவள் அந்தப் பக்கம் வரவேயில்லை.

ஒரு நாள் மாலை வசந்தாவை ஒரு புது சிநேகிதி தன் வீட்டிற்கு அழைத்திருந்தாள். போவதற்கு முன் குழந்தைக்கு 'ஹார்லிக்ஸ்' கரைத்துக் கொடுக்கலாம் என்று கொதிக்கும் வெந்நீர், மாவு, சர்க்கரை எல்லாவற்றையும் சேகரித்துக் கொண்டிருக்கும்போது லக்ஷ்மி அம்மாள் யதேச்சையாகக் குழந்தையைப் பார்க்க வந்தாள். தான் ஓரிடத்திற்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது தன் மாமியார் வந்து சேர்ந்தது வசந்தாவுக்குக்



"என்னப்பா, உட்கார்ந்து விட்டீங்க? சீக்கிரம் ஆகட்டும்ப்பா, மூட்டைகளை!"

"எந்தக்கால நாளா எட்டு மணிக்குமேல் எங்களாலே வேலை செய்ய முடியாதுன்னு நாங்கள் சொல்லிக்கிட்டு வாரோம்? நீ கேட்டாத்தானே? இன்னிலேருந்து நாங்கள் 'ஸ்டிரைக்' செஞ்சிப்பிட்டோம்!"

கோபத்தைக் கிளப்பியது. "ஏன் வந்தாய்?" என்று கேட்க முடியுமா? ஆகவே, அந்த ஆத்திரத்தைக் காரியத்தில் காட்டுவது போல் தடதடவென்று சொக்கலை எடுத்துக் கீழே வைத்தாள். அப்போது எதிர்பாரா விதமாக அவள் கை வெந்நீர்ப் பாத்திரத்தில் பட்டு, அவ்வளவு கொதிக்கும் வெந்நீரும் குழந்தையின் பாதங்களில் கொட்டி விட்டது. குழந்தை வேதனை தாங்காமல் அலறித் துடித்தது. வசந்தா பயத்தினால் சிலை போல் நின்று விட்டாள். லக்ஷ்மி அம்மாள் அனுபவசாலியாதலால் உடனே உள்ளே போய் அரைத்து வைத்திருந்த தோசை மாவைக் கொண்டு வந்து குழந்தையின் கால்களில் தடவிச் சமாதானப் படுத்தினாள்.

அன்று எதிர்பாராத விதமாகச் சீக்கிரமாகவே வீடு வந்துசேர்ந்த ரங்கநாதன் குழந்தையின் காலையும் அதன் வேதனையையும் கண்டதும் துடித்தான்.

லக்ஷ்மி அம்மாள் தான் முதலில் பேசினாள். "ஒன்று மில்லையடா! நான்தான் இன்று குழந்தைக்கு 'ஹார்லிக்ஸ்' புகட்டலாமென்று எடுத்து மடியில் வைத்துக் கொண்டேன். அதைக் கரைப்பதற்காகக் கொண்டு வந்து வைத்திருந்த வெந்நீர் கைதவறிக் காலில் பட்டுவிட்டது!" என்று தீனமாகச் சொன்னாள்.

இந்த வார்த்தைகள் காதில் விழுந்த பிறகு தான் வசந்தாவுக்கு உயிர் வந்தது. சமயத்தில் தன்னைக் காட்டிக்கொடாமல் காப்பாற்றிய மாமியாரை மானசீகமாக வாழ்த்தினாள். ரங்கநாதனும் தன் தாயாரை ஒன்றும் சொல்ல முடியாமல் மாடிக்குப் போய் விட்டான். குழந்தையைச் சமாதானம் செய்து தூங்கப் பண்ணிவிட்டு லக்ஷ்மி அம்மாள் தன் வீட்டிற்குப் போனாள்.

அன்று இரவு கணவனுக்குச் சாப்பாடு போட்டுக் கொண்டே, "ஏன்னா! அம்மா எதற்குத் தனியாக இருக்கிறாள்? குழந்தையை வைத்துக் கொண்டு நம்மிடம் இருக்கலாகாதா?" என்றாள் வசந்தா.

ரங்கநாதன் சில விநாடிகள் பிரமிப்பால் பேசாமலிருந்தான். பிறகு, "சரி! காலைக்கே கூப்பிட்டுக் கொண்டு வந்து விடுகிறேன்!" என்றான்.

வசந்தாவின் மனம் மாறியது அவனுக்குப் பெரிய புதிராக இருந்தது. அதன் காரணம் அவனுக்குத் தெரியவில்லை. தெரியாவிட்டால் என்ன? அவன் விரும்பியதெல்லாம் அந்த மனமாற்றம்தானே?



கணக்குச் சரி!

காலையில் வெளியே போன ஆபீஸ் பையன் மத்தியானம் வரையில் வராமல் வெகு நேரம் கழிந்து வந்தான். மானேஜருக்குக் கோபம் தாங்கவில்லை.

மானேஜர்:—சுத்த உபயோகமற்றவனாயிருக்கிறாயே; எங்கே போய் விட்டு இத்தனை நேரம் கழிந்து வருகிறாய்?

பையன்:—தபால் ஆபீஸுக்குப் போயிருந்தேன், ஸார்!

மானேஜர்:—ஓகோ! ஒரு கடிதத்தைத் தபாலில் போட மூன்று மணி நேரமா?

பையன்:—மன்னிக்க வேண்டும், ஸார்! நான் எடுத்துப் போனது மூன்று கடிதங்கள்!

★

ஊதிக் கெடுத்தான்!

நீதிபதி (ஜூரர்களை அழைத்து):—கடிகாரம் திருடியதாகக் கூறப்படும் இந்தப் பேர்வழியைப் போலீஸ்காரர்கள் எவ்வளவோ கவனமாகச் சோதித்தும் கடிகாரம் அகப்படவில்லை. இவன் அணிந்திருக்கும் பூட்ஸ், கோட்டு, ஷர்ட்டுப் பாக்கெட்டுகள் முதலியவைகளை யெல்லாம் துருவிப் பார்த்தும் அது கிடைக்கவில்லை. அதை அவன் எங்கே தான் ஒளித்து வைத்திருக்க முடியும்? ஆகையினால் நான் இந்த வழக்கை......

குற்றவாளி (இடைமறித்து):— எஜமான், நான் அந்தக் கடிகாரத்தைக் குல்லாய்க்குள் வைத்திருந்தேன்!

★

ஓகோ!

செட்டி:—முத்து, நீ கடைசியாகப் பார்த்து வந்த வேலையையும் விட்டுவிட்டாயாமே? ஏன் அப்படி?

முத்து:—என் எஜமானர் நான் பத்து ரூபாய் திருடிவிட்டதாக எனக்குத் திருட்டுப் பட்டம் கட்டினார்!

செட்டி:—நீ திருடினதாக அவரை ருசுப்பிக்கச் சொல்லுவதுதானே?

முத்து:—சொல்லி யிருக்கலாம்; ஆனால் ருசுப்பித்து விட்டால் என்ன செய்கிறது?

★

என்ன!

கிழவர் (பஸ்ஸில் போகும்போது கண்டக்டரைப் பார்த்து):— ஐயோ, மூலை முடுக்குகளில் திரும்பும்போது பஸ்ஸை இவ்வளவு வேகமாக ஓட்டினால் எனக்கு ரொம்ப பயமாயிருக்கிறது!

கண்டக்டர்:—ஒன்றும் இல்லை, பெரியவரே! டிரைவரைப் போலவே நீங்களும் கண்ணை மூடிக்கொண்டு விடுங்கள்! பயமாயிருக்காது!

வட்ட மேஜை

கோத்தவாஸ்சாவடி, சென்னை
2—6—48

வாழ்க வாழைப்பழம்!

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

சென்னை அரசாங்க மாளிகையின் தோட்டத்தில் நடந்த பழங்கள் கண்காட்சியைப் பற்றித் தங்கள் மே மாதம் 30உ கல்கி பத்திரிகையில் படித்தேன். அதில் சென்னைப் பழவணிகர்கள் பழங்களில் சிறந்தது மாம்பழம் என்று வோட்டளித்தார்கள் என்று இருந்தது. பழங்களில் சிறந்தது என்றால் உயர்ந்தது என்றுதானே அர்த்தம்? மாம்பழம் எப்படி உயர்ந்ததாகும்? எல்லாக் காலங்களிலும் மாம்பழம் கிடைக்காது. பலவித ஜாதிகளில் தித்திப்பு, புளிப்பு, வெறுப்பு



இப்படிப் பலவிதமான ருசி பேதங்கள். பெங்களூரா தவிர மற்ற உயர்ந்த மாம்பழங்களை ஏழைகள் வாங்க முடியாது. இப்படியாகக் குணத்தாலும், காலத்தாலும், வாங்கும் தன்மையாலும் பேதப்பட்டது எப்படிச் சிறந்ததாகும் என்று எனக்குத் தோன்றவில்லை. நிற்க, வாழைப் பழத்தை எடுத்துக் கொண்டால், அதிலும் பல ஜாதிகள் இருக்கின்றன. பங்களா, பச்சை, ரஸ்தாளி, பூவன், ராஜா, ருமாலன், கற்பூரம், மனோரஞ்சிதம், ஆனைக்கொம்பு, கதளி, மலைவாழை, செவ்வாழை இன்னும் பல ஜாதிகள் இருக்கின்றன. எல்லாக் காலங்களிலும் கிடைக்கின்றன. ஏழைகளும் சுலபமாக வாங்கக்கூடிய உணவு. ருசிகளில் ஒரே தன்மையான இனிப்பைக் கொண்டது.

காலத்தாலும், குணத்தாலும், ருசியிலும், வாங்கும் தன்மையிலும் பேதப்படாதது வாழைப்பழந்தான். ஆகையினால் பழங்களில் சிறந்தது வாழைப்பழம் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

எம். வி. கோபால் நாயுடு.

கோத்தகிரி
21—5—48

தேயிலைத் தோட்டத்திலே!

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

1933-ம் வருஷத்தில் "இந்தியன் டீ லைசென்ஸிங் கமிட்டி" ஏற்படுத்தி, தேயிலைத் தோட்டங்களின் சொந்தக்காரர்களுக்குத் தேயிலை ஏற்றுமதி செய்ய "எக்ஸ்போர்ட் கோட்டா" கொடுக்கும்படியாகவும், கோட்டா இல்லாமல் தேயிலை அயல் நாடுகளுக்கு அனுப்ப முடியாதென்றும், ஒருவரும் புதிதாகத் தேயிலைத் தோட்டம் பயிர் செய்யக் கூடாதென்றும், முன் பயிர் செய்துள்ள தோட்டங்களை விஸ்தரிக்க கூடாதென்றும் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. இக்கமிட்டியின் அங்கத்தினர்களில் பெரும்பான்மை பேர் ஐரோப்பியர்கள். இதனால் பெரிய தோட்டக்காரர்களுக்கு மாத்திரம் அனுகூலம் ஏற்பட்டது. எப்படியெனில் சிறிய தோட்டக்காரர்கள் தங்களுக்குக் கிடைக்கும் சுமார் 500 அல்லது 600 பவுன் "எக்ஸ்போர்ட்" கோட்டாவைக் கொண்டு தங்கள் தேயிலையை ஏற்றுமதி செய்ய முடியாது. ஆகையால் தங்கள் "எக்ஸ்போர்ட்" கோட்டாவைப் பெரிய தோட்டக்காரர்களுக்குக் குறைந்த விலைக்கு விற்றுவிடுகிறார்கள். பெரிய தோட்டக்காரர்களுக்குத் தேயிலை வியாபாரம் போட்டியில்லாமல் மிகவும் லாபகரமாக நடக்கிறது. உற்பத்திக் குறைவினால் விலை ஏறியிருக்கிறது. ஆனால் சிறிய தோட்டக்காரர்கள் புதிதாகத் தேயிலைச் செடிகளைப் பயிர் செய்யக்கூடாது என்ற சட்டத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ர. மாரு கவுடர்.

மதுரை
27—5—48

லஞ்சப் பழக்கம் ஒழிக!

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

எங்கள் நகரில் நம் சகோதர போலீஸ்காரர்களின் கரண்டல் வழக்கம் இன்னும் போகவில்லை. பிளாட்பார ஓரத்திலும், தெருக்களின் கடை ஓரத்திலும் அன்றாட வாழ்க்கையைக் கழிக்க உதவியாகக்கொண்டு தட்டுகளில் பண்டங்கள் வைத்துச் சில ஏழைகள் வியாபாரம் செய்து வருகிறார்கள். ஒருநாள் பூராவும் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தால் இரண்டு ரூபாய்க்கு மேல் லாபம் இருக்காது. அதைக்கொண்டு அவர்கள் தங்களுடைய குழந்தைகள் மனைவி, தாயார், தகப்பனார் இவர்களைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். இந்நிலையில் ஒரு நாளைக்குக் குறைந்தது மூன்று அல்லது நான்கு போலீஸ்காரர்கள் வந்து பொதுஜன இடைஞ்சல் உண்டாக்கியதற்குச் சார்ஜ் செய்ய வேண்டுமென்று அவர்களைப் பயமுறுத்துகிறார்கள். இதனிடையில் அவர்களுடன் வரும் மற்றப் பேர்வழி (போலீஸ்காரர்கள் தங்களுடனே கூட்டிக் கொண்டு வருகிறவர்) சமாதானம் செய்து நாலணா முதல் எட்டணா வரை வாங்கிக் கொண்டு போலீஸ்காரர்களுடனே சென்று விடுகிறான். இவ்விதமாக ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று தடவை செய்கிறார்கள். வியாபாரம் செய்யும் ஏழை மக்களோ சார்ஜ் செய்யப்பட்டால் இரண்டு ரூபாய்க்கு மேல் கொடுக்க வேண்டுமே என நினைத்து மேலே கண்டபடி லஞ்சத்தைக் கொடுக்க வேண்டிய நிலைமையிலிருக்கிறார்கள். இவர்கள் ஒரு மாதம் பூராவும் கொடுக்கும் லஞ்சத்தைக் கணக்குப் போட்டுப் பார்த்தால் ஒரு கடை பிடித்து அதிலேயே வியாபாரத்தை நடத்திவிடலாம். இக்கொடிய வழக்கத்தை ஒழித்தால்தான் மக்கள் காந்தி மகாத்மாவின் வழியைக் கடைப் பிடித்ததாகும். கடந்த அறுபது ஆண்டுகளாகக் காங்கிரஸ் மகாசபை பட்ட கஷ்டங்களுக்கும் பரிகாரம் தேடிக் கொண்டதாகும்.



ஆ. குருசாமி.

சாலைக்கிராமம்
24—5—48

அலைந்தது மிச்சம்!

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

விவசாய அதிகாரிகள் வெளியிடும் "மேழிச் செல்வம்" என்னும் பத்திரிகையில் "விவசாயிகளுக்கு வேண்டிய விதை, உரம், கலப்பை, பம்பு செட்டுகள் சப்ளை செய்யப்படும். விண்ணப்பம் செய்துகொள்ளவும்" என்று பிரசுரித்திருக்கிறார்கள்.

நான் ஒரு விவசாயி. பதினைந்து ஏக்கரில் நெல், கரும்பு, கேப்பை சாகுபடி செய்திருந்தேன். மழை கிடையாது. கவலை போட்டுத் தண்ணீர் இறைத்ததில் மாட்டின் கழுத்தில் வீக்கம் ஏற்பட்டது. பிறகு பம்பு செட்டு வாடகைக்கு வாங்கப் பரமக்குடி, பாம்பூர், இராமநாதபுரம், மண்டபம் முதலிய இடங்களில் போய் அலைந்தும் விவசாய டெமான்ஸ்டிரேட்டரைச் சந்தித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்தும் பம்பு செட்டுக் கிடைக்கவில்லை. பம்பு செட்டு வாடகைக்கு வாங்குவதிலே அலைந்து அலைந்து அலுத்ததுதான் மிச்சம்.

வி. குருசாமி.

பொன்னாச்சி
24—5—48

தியாகம் செய்ய முடியாது!

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

தங்கள் கல்கியில் எந்த ஒரு முக்கியமான விஷயத்தைப் பற்றியாகிலும் ஒன்றுமே பிரஸ்தாபிக்காமல் இருந்தால், மற்றவர்களைப்போல் நாங்கள் ஏமாற்றம் அடைவதில்லை. ஏனெனில் கடைசியில் எல்லாவற்றிற்கும் வட்டியும் முதலுமாகச் சேர்த்துப் போடுவீர்களென்று எங்களுக்குத் தெரியும். இது எங்களது ஏழு வருஷ கால அனுபவம்.

ராஜாஜி கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருப்பது பற்றிய மகிழ்ச்சிகரமான செய்தி கல்கியில் வெளிவரும் என்று பொறுமையுடன் காத்திருந்தோம். எங்கள் பொறுமையும் வீண் போகவில்லை என்று இந்த வாரக் கல்கி இதழ் கிடைத்ததும் தெரிந்தது.

ஆனால் அதில் "அதிகமாகச் சந்தோஷத்தை வெளியிட்டால் யாராவது துக்கப் படப் போகிறார்களே என்றுதான் மகிழ்ச்சியை வெளியிடவில்லை" என்று எழுதியிருக்கிறீர்கள். அன்று அறிவு வேண்டாம், ஆற்றல் வேண்டாம் என்று சொன்னவர்களெல்லாம் இன்று தங்கள் தவறுக்காகத் துக்கப்படுகிறார்கள். தவறு செய்தவர்கள் துக்கப்பட வேண்டியதுதான். அதற்காக நாம் நமது மகிழ்ச்சியைத் தியாகம் செய்துவிட முடியுமா?

வ. மு. சௌந்திரம்.

கடலூர்
23—5—'48

எழுத்துச் சீர்திருத்தம்

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

தமிழ் எழுத்துக்களை 'லைனோ' டைப்பில் கொண்டு வருவதைச் சாத்தியமாக்கும் பொருட்டு, தமிழ் எழுத்துக்களைச் சீர்திருத்தம் செய்ய நியமிக்கப்பட்டிருக்கும் கமிட்டியினின் பொறுப்பு மிகவும் முக்கியமானது. கூடியவரை தற்போது நடைமுறையில் உபயோகத்திலிருக்கும் எழுத்துக்களை மாற்றுவது விரும்பத்தக்கதல்ல. குறைவான டைப்புகளை உபயோகப்படுத்துவதனால், சொற்பமும் எழுத்துச் சிக்கனத்திற்கு இடமிருந்தாலும், அது நமது தமிழ் மொழியை விகாரப்படுத்துவதாகும். அதை நாம் ஆதரிக்க முடியாது. உதாரணமாக, தமிழ் நாட்டில் வெளிவரும் சில பத்திரிகைகளில் தமிழ் எழுத்தைக் கையாண்டு வரும் விதம் விரும்பத்தக்கதாயில்லை. அதாவது, கலை, வேலை, கற்றோர், விணை போன்றவை.

அநேக நூற்றாண்டுகளாக அமுலில் இருக்கும் அழகான எழுத்துக்களை நவீன இயந்திர காலத்தின் சௌகரியங்களை முன்னிட்டுச் சிதைப்பது விரும்பத்தக்கதல்ல.

வி. எஸ். கிருஷ்ணசுவாமி.

திருவல்லிக்கேணி
22—5—48

லைசென்ஸ் உபத்திரவம்

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

நடுத்தர வருவாயுடைய என் கணவர் திருவல்லிக்கேணியிலிருந்து ஜார்ஜ் டவுனிலிருக்கும் தமது ஆபீசுக்குப் போக சைகிளின் உதவியையே நாடுகிறார். ஆனால் அந்த சைகிளுக்கு லைசென்ஸ் வாங்கும் கஷ்டத்தைப் பார்க்கும்பொழுது சைகிளே வேண்டாம் போலத் தோன்றுகிறது. நான் பார்த்தமட்டில் சைகிளால் தெருக்கள் பாழாவதை விட, தற்போதிருக்கும் ரஸ்தாக்களால் சைகிள்கள்தான் பாழாகின்றன என்பது என் அபிப்பிராயம். ஆகையால், சைகிளுக்கு லைசென்ஸ் வாங்குவதே அநீதி. ஏற்கெனவே அதிகமாக இருந்த சைக்கிள் வரியை ஸ்ரீ சத்தியமூர்த்தி அவர்கள் மேயராக வந்த காலத்தில் சொம்பப் பாடு பட்டு, இது ஏழைகளின் வாகனம் என்று விவாதித்து, ஆறு மாதத்திற்கு எட்டணாவாகக் குறைத்தார். ஆனால் அவர் பதவியை விட்டு விலகிய பின்பு மறுபடி ஒரு ரூபாயாக ஆக்கினார்கள். சமீபத்தில் மேலும் உயர்த்தி இரண்டு ரூபாயாக ஆக்கியிருக்கிறார்கள். இது எவ்வளவு அநியாயம்! மேலும் லைசென்ஸ் கொடுக்கும் விஷயத்திலோ மிகவும் மோசமான வழியைக் கடைப்பிடிக்கிறார்கள்.



கொஞ்ச நாளைக்கு முன்பு சைக்கிள் லைசென்ஸ் வேண்டுபவர்கள் அந்தந்த டிவிஷனில் உள்ள கார்ப்பரேஷன் ஆபீஸுகளில் 7 முதல் 10 மணி வரையில் வாங்கிக் கொள்ளலாமென்று தெரிவித்திருந்தார்கள். அது போது ஜனங்களுக்குச் சௌகரியமாய் இருப்பதை எப்படியோ தெரிந்து கொண்டு அவர்கள் கொஞ்ச நாளைக்கெல்லாம் அதை மாற்றி விட்டார்கள்! இப்போது கார்ப்பரேஷன் காரியாலயத்துக்குப் போய்த்தான் சைக்கிள் லைசென்ஸ் வாங்க வேண்டும். அங்கே 11 மணிக்கு மேல்தான் லைசென்ஸ் கொடுக்கிறார்கள். என் கணவருக்கோ 10 மணிக்கு ஆபீஸ். சாயங்காலம் வரும்போது 6 மணி ஆகிவிடும். இப்படியிருக்கும்போது எப்பொழுது போய் லைசென்ஸ் வாங்குவது? தயவு செய்து பழையபடி அந்தந்த டிவிஷனில் லைசென்ஸ் கொடுக்க ஆரம்பித்தால் நலமாயிருக்கும்.

வத்ஸலா ராகவன்.


ஜோலார்பேட்டை
24—5—48

'டீ'க்கடையில் என்ன?

''கல்கி'' ஆசிரியர் அவர்களுக்கு,

வட ஆற்காடு மதுவிலக்கு அமுலில் உள்ள ஜில்லா. முன்பிருந்ததற்கும், இப்பொழுது இருப்பதற்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான். முன் பகிரங்கமாக இரண்டொரு கடைகள் இருந்தன. இப்பொழுதோ ரகசியமாகக் கணக்கில் அடங்காத கடைகள் இருக்கின்றன.

இப்பொழுது 'டீ'க்கடைகள் அதிகரித்திருக்கின்றன. 'டீ'க்கடை வாசலில் போண்டா, வடையில் ஈ மொய்த்துக் கொண்டிருக்கும். அடுப்பில் பூனை தூங்கும். ஆனால் போவோர் வருவோர் அதிகம். சுய உணர்வுடன் உள்ளே போகும் மனிதன், சிறிது நேரம் கழித்து வெளி வரும்பொழுது கண்கள் சிவந்திருக்கும்; கால்கள் தடுமாறும். இவர்களைப் பிடிப்பதற்காக ஏற்பட்டிருப்பவர்களே இதனுள் பேரம் வருகிறார்கள் என்றால் கடைக்காரர்களுக்கு என்ன பயம்?



இதனால் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. பட்டப்பகலில் பிடிபட்டுப் போகிறவன் மறுநாள் சுதந்திரமாய் உலாவுகிறான்.

மது விலக்குச் சட்டம் செய்து விட்டால் போதாது. அதை அமுல் நடத்தத் தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஆ. ராமசாமி.

நாசரேத்
25—5—48

நாட்டுக்கு உழைப்போம்!

''கல்கி'' ஆசிரியர் அவர்களுக்கு,

தொழிலாளிகள் உழைத்தும் பட்டினி, சம்பளம் வாங்கியும் பட்டினி என்ற நிலை அநேகமாக உண்மை. அப்படியிருந்தாலும், பொதுஜன நலனுக்காக, தம் நாட்டு நலனுக்காகத் தங்களைத் தாங்களே தியாகம் செய்துகொள்ள முன்வர வேண்டும். வேலை நிறுத்தம் செய்து உற்பத்தியையும், போக்குவரத்தையும் பாழ்படுத்திப் பொது ஜனங்களின் கஷ்ட நஷ்டங்களை அதிகப்படுத்துவதைவிட, வேலையைச் செய்து உற்பத்தியைப் பெருக்கிக்கொண்டு, உணவு தானியம் துணிமணி போக்குவரத்தைப் பாதுகாத்துக் கொண்டே தங்கள் கோரிக்கை நிறைவேறும் வரை ''சம்பளம் வாங்க மறுத்தல்'' செய்யலாமல்லவா?

நம்முடைய நலன்தானே நாட்டின் நலன்! நமது கோரிக்கை நிறைவேறும் வரை வேலை செய்வோம். சக்தியிருக்கும் வரை ஒவ்வொரு தொழிலாளியும் உழைப்போம். நமது நாட்டின் நலனைக் கருதிப் பாடுபடுவோம். நமது கோரிக்கை நிறைவேறினால் சம்பளம் வாங்குவோம். நமது நியாயமான கோரிக்கை நிறைவேறிவிட்டால், நாட்டுக்காக உழைத்துக் கொண்டே சம்பளம் வாங்க மறுப்போம். இக்காலம் சம்பளம் வாங்காமல் உழைத்துக் கொண்டிருந்தோமானால் பொது ஜனங்கள்தான் நம்மைக் கைவிட்டு விடுவார்களா? நமது சர்க்கார்தான் நமது கோரிக்கைக்கு செவி சாய்க்காமல் இருந்து விட முடியுமா? பார்க்கலாமே!

இராஜதுரை.

கும்பகோணம்
22—5—48

புதிய தொல்லை

''கல்கி'' ஆசிரியர் அவர்களுக்கு,

'மழை விட்டும் தூவானம் விடவில்லை' என்று சொல்லுகிறார்களே, அதைப்போல இருக்கிறது உணவுக் கட்டுப்பாடு எடுத்தபின் நிலைமை. அவரவர்கள் இஷ்டம்போல் நெல்லை எடுத்து வந்தோம், குத்தினோம், சாப்பிட்டோம் என்று இல்லை.

நெல் குத்த பர்மிட் வேண்டும் என்று ஓர் உத்தரவு போட்டு விட்டார்கள். இந்தப் பெர்மிட் வாங்குவதற்குள் போதும் போதும் என்றாகிவிடும். கிராமக் கணக்கரின் 'சர்டிபிகேட்' பெற்றுக்கொண்டு, அதனுடன் அரையணாவுக்கு விற்கப்படும் ஒரு பர்மிட் கார்டு வாங்கி, பழைய நெல் குத்தும் பர்மிட் ரேஷன் கார்டு முதலியவற்றுடன் மனுச் செய்து கொள்ள வேண்டும். அதை பிர்க்கா சப்ளை ஆபீஸர் சரி பார்த்து உண்மையில் இவர் நெல் வைத்துக்கொள்ள உரிமையும் யோக்கியதையும் உள்ளவரா என்று விசாரித்து, பின்பு அவர் குறிப்பிடும் ஒரு தேதியில் ஆஜராகிப் பர்மிட் பெற்றுக் கொள்ளவேண்டும். எப்படி இருக்கிறது உத்தரவும் அழகும்!

பர்மிட் இல்லாமல் நெல் அரைக்க மூட்டைக்கு ரூ. 0—12—0, 1—0—0, 1—8—0 என்று வாங்குகிறார்கள் மில்காரர்கள்.

எஸ். சீதா.

துறையூர்
26—5—48

கொலை செய்ய வேண்டாம்!

''கல்கி'' ஆசிரியர் அவர்களுக்கு,

சுதந்திர இந்தியாவில் பல மாறுதல்கள் ஏற்பட்டும், சர்க்கார் இயந்திரம் மட்டும் பழைய ரீதியிலேயே இயங்கி வருகிறது.

கன்னித் தமிழை, தேனினும் இனிய தமிழ் மொழியைச் சர்க்கார் எப்படிச் சிதைத்துக் குற்றுயிரும் கொலையுயிருமாய் அடித்திருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்.

''பொது விற்பனை வரியைக் குறித்த 1939-ம் வருஷத்திய சென்னைப் பட்டணத்து ஆக்ட்'' என்ற தலைப்பில் ''ஏ-3 நமூனா'' என்ற ஒரு நமூனா இருக்கிறது. அதில் ''என்னுடைய வியாபாரத் தொகையைக் காட்டும் ஸ்டேட் மெண்ட் ஒன்றைச் சவதரிக்கிறேன்'' என்று ஒரு வரி இருக்கிறது. இந்த ''சவதரிக்கிறேன்'' என்பதற்கு என்ன அர்த்தம் என்றே புரியவில்லை.

சென்னைத் தொழிற் சட்டத்தில் சம்பந்தப்பட்ட ''தற்செயலான விபத்துக்களைத் தடுப்பதற்காக நோட்டீஸ்—(இ. நமூனா 80-வது விதியைப் பார்க்கவும்) என்ற சர்க்கார் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்ட விளம்பரம் ஒன்று பல தொழிற்சாலைகளில் மாட்டப்பட்டிருக்கிறது. அதில் 6-வது விதியில் ''மின்சார சம்பந்தமான முந்துபவைப் பழுது பார்க்கப் பிரயத்தனப்பட வேண்டாம்'' என்றும், 12-வது விதியில் ''கருவிகளின் மேல் பாகம் திறந்து இருப்பது அபாயகரமானது'' என்றும் காணப்படுகிறது.

இனியாவது சர்க்கார் சம்பந்தமான எல்லா அறிக்கைகளும், தஸ்தாவேஜுகளும் ''சர்க்கார் தமிழ்'' என்ற புரியாத தமிழில் இல்லாமல் நல்ல பேச்சுத் தமிழில் இருக்கும்படி செய்ய வேண்டும்.

து. ம. வாசுதேவன்.

---

* இந்த இதழில் வெளியாகி யிருக்கும் வட்ட மேஜைக் கடிதங்களில் சென்னை ஸ்ரீ எம். வி. கோபால் நாயுடு எழுதியிருக்கும் கடிதத்துக்கு ரூ. 25 பரிசளிக்கப்பட்டது.

ஆகாசவெடி

நிஜாம் சர்க்காரின் அண்டப் புளுகுகள்.
—செய்தித் தலைப்பு

நிஜாம் சர்க்காரை நிஜம் (சொல்லும்) சர்க்கார் என்று இதுவரை யாராவது நினைத்துக்கொண்டிருந்தார்களா, என்ன?

★

பிரதேச பாஷையில் பயிற்சி அளிக்கப் படவேண்டும் என்று ஒரு பிரசங்கி கூறியதைக் கூட்டத்திலிருந்த ஒருவர் ஆட்சேபித்தார்.

—செய்தி

பிரசங்கி 'பிரதேச' என்பதை அதிகமாக அழுத்திப் 'பிறதேச' என்று உச்சரித்து விட்டிருப்பார்!

★

ஒரு எகிப்திய விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது என்று ஒரு உத்தியோகப் பற்றற்ற செய்தி கூறுகிறது.



போகட்டும். உத்தியோக வேட்டை தாண்டவமாடும் இந்தக் காலத்தில் செய்திகளாவது உத்தியோகப் பற்று இல்லாமலிருக்கின்றனவே!

★

ஸ்டர்லிங் கடன் பேச்சுக்களை லண்டன் நகரில் ஜூன் மாத முதல் வாரத்தில் ஆரம்பிக்க பிரிட்டிஷ், இந்திய, பாகிஸ்தான் சர்க்கார்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். —தினசரி.

பேச்சுக்களை வெறும் கடன் இழவே என்று ஆரம்பிக்காமல் இருந்தால் சமரசமான முடிவுக்கு வர முடியும்.

★

எல்லை காந்தி போன்றவர்களை சபையிலிருந்து விலக்கும் அதிகாரத்தைப் பாகிஸ்தான் அ. நீ. சபை ஜின்னாவுக்கு அளிக்கும். —பாகிஸ்தான் செய்தி.

அ. நீ. சபையா? அல்லது அநியாய சபையா?

★

ஜெமாட்டி சந்நியாசினி யானுள்!
—தலைப்பு.

அவருடைய கணவர் 'சற்று ஏறுமாறாக நடந்து' கொண்டாரோ என்னமோ?

கட்சிக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.
—செய்தித் தலைப்பு.



"எனக்கு நகைகளையும் பாத்திரங்களையும் தான் ஒத்தி வைக்கத் தெரியும். ஒரு கூட்டத்தையே ஒத்தி வைப்பது என்றால் எப்படி?" என்கிறார் திருவொற்றியூரில் வாழும் ஒரு கிருஹஸ்தர்!

★

கருட்டுத் தொழிற் சாலையில் தகராறு
—செய்தி

எல்லா லாபத்தையும் முதலாளிகளே சுருட்டிக் கொள்ளுகிறார்கள் என்று தொழிலாளிகள் நினைப்பதுதான் தகராறுக்குக் காரணமாயிருக்க வேண்டும்.

★

சோஷலிஸ்ட் தலைவர் ஸ்ரீ அச்சுத் பட்டவர்த்தன் இந்தியக் கம்யூனிஸ்ட்கள் ஹைதராபாத்தில் நடத்திவரும் அட்டூழியங்களை வன்மையாகக் கண்டித்தார்.
—செய்தி.

இவ்வளவு பட்டவர்த்தனமாகக் கண்டிக்கப்பட்ட பிறகாவது தோழர்கள் சும்மா இருப்பார்களா?

★

கடலூருக்கருகில் தீ விபத்து ஏற்பட்டு 2500 ரூபாய் பெறுமான கம்பு, சோளம் முதலிய உணவுப் பொருள்கள் நஷ்டமாயின.

—கடலூர் செய்தி

நமது உணவு மந்திரிகளின் உபதேசத்தை அக்கினி பகவான் கடைப் பிடித்துச் சோளம் சாப்பிட விரும்பினார் போலும்!

★

சமீபத்தில் சமயபுரத்தில் ஒரு வீட்டில் புகுந்து திருடர்கள் ரூபாய் ஐயாயிரம் மதிப்புள்ள நகைகளைக் கொண்டு போயினர். —செய்தி.

திருடர்கள் சரியான 'சமய'த்தில் தான் தங்கள் வேலையைச் செய்திருக்கிறார்கள்.

★

பிரபல கம்யூனிஸ்ட் தோழர் ஒருவரைப் பொது மக்கள் போலீஸாரிடம் பிடித்துக் கொடுத்து விட்டார்கள்.
—செய்தி.



அதாவது மேலும் பிரபலமடையச் செய்து விட்டார்கள்!

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

213. தலை பத்தும் சிந்துவாயோ!

ராவணன் என்றால் சாமானியப் பேர் வழியா?

எல்லாம் வல்ல சிவபெருமானையானாலும் எதிர்த்து ஒரு கை பார்ப்பவன் என்று சொல்ல வேண்டும். அப்படி உறுதிகொண்ட மனத்தை உடையவன் அவன். ஆனாலும் ஆசை ஒரு பக்கமும் வெட்கம் ஒரு பக்கமுமாக அவனைப் பாடாய்ப் படுத்துகிறது.

ஈசற்(கு) ஆயினும்
  ஈடழி வுற்(று)இறை
வாசிப் பா(டு)அழி
  யாதம னத்தினன்,—
ஆசைப் பாடுடன்
  நாணம்அ டர்த்திடக்
கூசிக் கூசி
  இனையன கூறினன்.

[ஈடழிவு உற்று: உறுதி இழந்தவனாய்; இறைவாசிப் பாடு அழியாத மனத்தினன்: கொஞ்சம் கூடத் தளராத மனத்தினன்; கூசிக் கூசி இனையன கூறினன்: கூசிக் கூசிக் கீழே வரும் வார்த்தைகளைச் சீதையின் முன்னிலையில் சொல்லுகிறான்.]

●

தேவர்களுடைய மனைவியரே அடி தொழுது நிற்கும்படியான அத்தகைய சிறந்த தலைமைப் பதவியானது [நாயகம்] உன்னை வந்து அடையக் காத்திருக்கிறது.

தேவர் தேவியர்
  சேவடி கைதொழும்
தாவில் மூவுல
  கின்தனி நாயகம்
மேவு கின்றது
  நுன்கண், விலக்கினை ;-
யாவர் ஏழையர்
  நின்னின் இலங்கிழாய்.

[தாவில் மூவுலகின் தனி நாயகம்: ஈடு எடுப்பு என்றில்லாதபடி மூவுலகத்துக்குமே தலைமையாய் இருக்கும் பதவியானது; மேவுகின்றது நுன்கண்: உன்னை வந்து அடையப் பார்க்கிறது; விலக்கினை: நீயோ அதைத் தள்ளுகிறாய்; யாவர் ஏழையர் நின்னின்: நஷ்டத்துக்கு உள்ளானவர்கள் உன்னைப் போல யாரிருக்கிறார்கள்; இலங்கிழாய்: அரசன் என்றால் முடியும் செங்கோலும் தரிப்பவன். தரியாமல் இருந்த சமயத்திலும் அவைகளுக்கு உரியவன் அவன் என்று சொல்லுவது போல, சீதை யாதொரு ஆபரணமும் இல்லாமல் இருந்தாலும் எந்த ஆபரணத்துக்கும் அவளுடைய அங்கங்களே உரியன என்ற எண்ணத்தில் பேசுகிறான் ராவணன். வைர அட்டிகையைப் பார்த்தால் கழுத்தின் ஞாபகமும், வளையலைப் பார்த்தால் கையின் ஞாபகமும் வருகின்றன. பகல் கனவுகளில் ஆபரணங்களோடு ஒட்டியே சீதையைப் பார்க்கிறான் ராவணன். ஆகையால், இலங்கிழாய் என்னும் சொல் பெண்ணைக் குறிக்கும் வழக்காய் இருந்தாலும், இங்கே பொருளோடு ஒட்டி நிற்கும் சொல்லே.]

"இந்த உலகம் மாத்திரம் அல்ல. பாதாள லோகம், தேவலோகம் அவைகளிலுள்ள ராஜாதி ராஜாக்களும் குடிகள் என்ற நிலையில் எனக்குத் தொண்டு செய்து வருகிறார்கள். அத்தகைய பராக்கிரமத்துக்கு உரியவனான நான் உன் அடிமை: என்னை நீ ஏற்றுக் கொண்டு இரக்கங் காட்ட வேண்டும்" என்று சொல்லுகிறான்.

"குடிமை மூன்றுல—
  கும்செயும் கொற்றத்(து)என்
அடிமை கோடி,
  அருளுதி யால்" என
முடியின் மீது
  முகிழ்த்துயர் கையினன்
படியின் மேல்விழுந்
  தான்பழி பார்க்கலான்.

[குடிமை: குடிகளுக்குரிய தொண்டு; மூன்றுலகும் செய்யும்: மூன்று உலகத்திலுள்ளவர்களுமே செய்யும் படியான; கொற்றத்து என் அடிமை: பராக்கிரமத்தோடிருக்கும் என் அடிமைத் தன்மையை; கோடி: கொள்ளுதி; அருளுதியால்: என் வேண்டுகோளுக்கு இரங்கி அருளவேண்டும்; எனு: என்று சொல்லி; முடியின் மீது முகிழ்த்துயர் கையினன்: தலையின்மீது மிகவும் உயர்த்திக் கூப்பிய கையினனாய்; படியின் மேல் விழுந்தான்: சாஷ்டாங்கமாக நிலத்தில் விழுந்து நமஸ்கரித்தான்; பழி பார்க்கலான்: இதுபற்றி உலகத்தார் ஏளனம் பண்ணுவார்களே என்பதைச் சிறிதும் நினையாதவனாய்.]

குறிப்பு:—காதல் வெறியில் 'அடிமை' என்றும் 'அருளுதி' என்றும் வார்த்தை சொல்லத் தோன்றலாம். அதற்கு மேல் ஏதாவது செய்வது என்பது அடாத காரியம். தலைமேல் கையையும் கூப்பலாம். ஆனால் அதற்கு மேலேயும் போய்விட்டது ராவணனது செய்கை. காலில் விழுந்தான் என்ற வெறியின் உச்சத்தை செய்யுள் உருவம் நன்றாக எடுத்துக் காட்டுகிறது.

●

ராவணன் அடாத வார்த்தைகளை உபயோகிக்கிறான். அதெல்லாம் பழுக்கக் காய்ச்சிய நாராசத்தைக் காதில் செலுத்திய மாதிரிதான் இருக்கிறது சீதைக்கு. செவிகள் தீகின்றன. உள்ளம் மயக்கத்துக்கு உள்ளாகின்றது. சிவந்த ரத்தம் கண்களிலிருந்து கொப்புளிக்கிறது. என்ன செய்வாள் அப்பாவி!

காய்ந்தன சலாகைஅன் ன
உரைவந்து கதுவாமுன் னம்,
தீய்ந்தன செவிகள்,உள் ளம்
திரிந்தது, சிவந்தசோ ரி
பாய்ந்தன கண்கள்நின் றும்:—
பார்த்திலன் உறுவ,பெண் மைக்(கு)
ஏய்ந்தன அல்லவெய் ய
மாற்றங்கள் இனையசொன் னான்.

[சலாகை: இரும்பு சட்டி; உரைவந்து கதுவா முன்னம்: வார்த்தைகள் வந்து காதில் பட்ட மாத்திரத்தில்; உள்ளம் திரிந்தது: மனசு கழன்றது; சிவந்த சோரி: சிவந்த ரத்தம்; பார்த்திலன் உறுவ: தனக்கு நேரக்கூடிய கொடுமைகள் தென்படவே இல்லை; வெய்ய மாற்றங்கள் இனைய சொன்னான்: ஆங்காரமான மேலும் வரும் வார்த்தைகளைச் சொன்னான்.]

●


வார்த்தைகளில் ஆங்காரம் எப்படி வருகிறது பாருங்கள்:

மேருவை உருவல்வேண் டில்,
விண்பிளந்(து) ஏகல்வேண் டில்,
ஈரேழு புவனம்யா வும்
முற்றுவித்(து) இடுதல்வேண் டில்,
ஆரியன் பகழிவல் ல(து);—
அறிந்திருந்(து) அறிவிலா தாய்
சீரிய அல்லசொல் லித்
தலைபத்தும் சிந்துவா யோ?

[மேருவை உருவல் வேண்டில்: மேருமலையை ஊடுருவிச் செல்ல வேண்டுமா; விண் பிளந்து ஏகல் வேண்டில்: வானத்தை ஊடுருவிச் செல்ல வேண்டுமா; ஈரேழு புவனம் யாவும் முற்றுவித்து இடுதல் வேண்டில்: பதினாலு உலகங்களையும் நிர்மூலமாக்க வேண்டுமா—எல்லாம் செய்ய முடியும்; ஆரியன் பகழி வல்லது: ராமனது அம்பு இருக்கிறதே அது செய்து முடிக்கும்.]

ஆங்கார பாவத்தை மக்களது உருவத்தில் காட்டலாம். தமிழ்க் கவியின் உருவத்திலும் காட்டலாம் என்பதைச் செய்யுள் விளக்குகிறது.

நிதி வசூல்!



ஆபீஸ் மானேஜர் ஏதோ ஒரு நிதிக்குப் பணம் திரட்டும் மனிதரை அழைத்துக் கொண்டு வருகிறார். அது முன்னாடியே தெரிந்ததினால் ஆபீஸில் ஏற்பட்ட விபரீதம்! ★

★ இந்த விகடத் துணுக்கைக் கண்டு பிடித்துக் கொடுத்த ஸ்ரீ ஏ. வி. நடேசய்யர் (அட்வகேட், சிவஸ்வாமி ரோட், கோயமுத்தூர்) அவர்களுக்கு ரூ. 25 பரிசு அளிக்கப்பட்டது.

காவேரி

சரோஜா ராமமூர்த்தி

ரயில் வண்டி ஸ்டேஷனி லிருந்து
புறப்படுகிற சமயம். ரயிலில் ஏகக்
கூட்டம். பிளாட்பாரத்திலும் ஒரே கூட்ட
மாக இருந்தது. மூட்டை முடிச்சுகளைத்
தூக்கிக் கொண்டு பிரயாணிகள் ரயிலில்
ஏற இடம் கிடைக்காமல் மேலும் கீழும்
அலைந்தார்கள். ஒவ்வொரு வண்டியிலும்
தவைக்கூடத் திறக்க முடியாதபடி
ள்ளே கூட்டம் நிறைந்திருந்தது.
பாதாக் குறைக்கு, ரயிலில் ஏற்கெனவே
இருந்தவர்களுக்கும், ஏற முயற்சிப்பவர்
ளுக்கும் சண்டை வேறு.

"கதவைத் திற ஐயா! உன் அப்பன்
ட்டு ரயிலோ? நானும் தானே டிக்கட்
ாங்கி யிருக்கேன்?" என்பது ஏற
யற்சிப்பவர்களின் வாதம்.

"கதவைத் திறந்தா எங்கே நிப்பே?
ங்க தலைமேலேயா? அடுத்த வண்டிக்
ப் போய்யா!" என்பது வண்டிக்குள்
ருப்பவர்களின் பதில். இதில் இன்னும்
ாஞ்சம் சாமர்த்திய மானவர்கள்,
இன்னும் ஐந்து நிமிஷத்தில் பின்னா
லயே இன்னொரு வண்டி விடுகிறான்.
தில் வாங்களேன். என்னத்துக்கு
ல்லாரும் இந்த ரயிலிலேயே வந்து
றீங்க?" என்று புளுகி, அவர்களை
றவொட்டாமல் தடுத்தார்கள்.

காவேரியும் அவசர அவசரமாக ஒரு
டை நிறைய மாம்பழத்தைத் தூக்கிக்
ாண்டு ஓடும் ரயிலில் ஏறப்பிரயத்தனம்
ய்தாள். ஆயிற்று; கூடையை உள்ளே
ள்ளியாயிற்று. அவளும் தொத்திக்
ாண்டு ஏறினாள். அதற்குள் ரயில்
கமாக ஓட ஆரம்பித்தது. காவேரி,
திய வேகத்தில் கால் தடுக்கி மலை
ழைப் பழக் கூடையுடன் உட்கார்ந்
ந்த துரைக் கண்ணுவின்
ரில் மோதிக் கொண்டு
டாலென்று விழுந்தாள்.
ண்டியி லிருந்தவர்களில்
ர் "த்லொ த்லொ"
று அனுதாபம் தெரி
தார்கள்.
இருந்தாலும் இவ்வளவு
ிச்சலாக நீ ஏறி இருக்
டாது! அம்மா" என்று
பெரியவர் கூறிவிட்டுத்



துரைக் கண்ணுவைப் பார்த்து, "எழுந்திருய்யா, பாவம்! பெண்பிள்ளை விழுந்த வேகம் தாங்காமல் அவஸ்தைப் படுகிறாள்; அவளை முறைத்துப் பார்க்கிறாயே நீ!" என்று துரைக் கண்ணுவையும் கோபித்துக் கொண்டார்.

துரைக்கண்ணு பற்களை நற நற வென்று கடித்தான். கோபத்தால் அவன் கண்கள் சிவந்தன.

"ஒரு பொட்டைச்சிக்கு இவ்வளவு துணிச்சலுங்களா?" என்று ஆத்திரத் துடன் கூறினான்.

காவேரி நெற்றியில் அரும்பி யிருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள். விழுந்த அதிர்ச்சியால் அவள் தேகத்தில் ஏற்பட்டிருந்த படபடப்பு கொஞ்சம் அடங்கியிருந்தது. தான் மோதிக் கொண்ட ஆள் யார் என்பதைக் கவனிக்க அவள் தலை நிமிர்ந்த போது மேற் கண்டவாறு துரைக்கண்ணு கூறிக் கொண்டிருந்தான். அவளுக்குக் கோபமும் துக்கமும் சேர்ந்து வந்தது.

"என்னத்தை ஐயா கண்டுட்டே நீ? துணிச்சலா உன்னை யார் என்ன செய்தாங்க?" என்று பதிலுக்கு இரைந்து கத்தினாள் அவள்.

"ஓ, வாயை மூடு! மாம்பழக் கூடை எகிறிப் போயிடும். பெரிய வாயாடி இல்லே நீ!" என்றான் துரைக்கண்ணு. வண்டியில் இருந்தவர்கள் இந்தச் சண்டையைப் பெரிதும் ரசித்தார்கள். முதலில் பேசிய பெரியவர் மறுபடி ஆரம்பித்தார்.

"சும்மா இரு அம்மா! ஒரு ஆண் பிள்ளைக்குச் சமமா நீயும் இரையாதே" என்று மத்யஸ்தம் செய்ய முனைந்தார் அவர்.

"இருங்க பெரியவரே! தெரியாம விழுந்துட்டேங்க. அதுக்கு இந்த ஆளு இப்படிப் பேசறதா?" என்றாள் காவேரி.

"பேசி விட்டுப் போகட்டுமே அம்மா, அதில் உனக்கு என்ன குறைஞ்சு போகிறது!" என்றார் பெரியவர்.

"காவேரி கண்களில் நீர் பெருக வண்டியின் கம்பியைப் பிடித்து நின்று கொண்டிருந்தாள். விழுந்த வேகத்தில் அவள் முழங் கையில் சிராய்த்து அந்தக் காயத்திலிருந்து ரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

எழும்பூர் போய் விட்டது. அவள் கோட்டையில் இறங்க வேண்டும். காலை

யில் விழித்து எழுந்த முகம் நல்லதாக இல்லை என்று எண்ணிக் கொண்டாள் காவேரி. இல்லாவிட்டால் இப்படி ரத்தக் காயம் ஏற்படுவானேன்?

கோட்டை ஸ்டேஷன் வந்தவுடன் கூடையை நகர்த்திக் கொண்டே மெதுவாக இறங்கினாள் காவேரி. துரைக்கண்ணுவும் வாழைப்பழக் கூடையால் அவளை நன்றாக மோதித் தள்ளிக் கொண்டே இறங்கினான். காவேரி இப்பொழுது அவனை முறைத்துப் பார்த்தாள்.

"ஏன் ஐயா, கண் இருக்கா உனக்கு?" என்றும் கேட்டாள். கோபத்தில் அவள் முகம் பார்க்க அழகாக இருந்தது. வில்லைப் போன்ற புருவங்கள் இரண்டும் வளைந்தன. அவள் நல்ல கருப்பு. இருந்தாலும், அந்தக் கண்களும் புருவங்களும் சிலைக்கு அமைந்ததுபோல் அமைந்திருந்தன. அவள் புருவங்களை நெரித்து அவனை எரித்து விடுவது போல் பார்த்துவிட்டு, கூடையை எடுத்துத் தலையில் வைத்துக்கொண்டு வேகமாக நடக்கலானாள்.

துரைக்கண்ணுக்குக் காவேரியைச் சாவகாசமாகப் பார்க்கச் சந்தர்ப்பம் அப்பொழுதுதான் கிடைத்தது. விடுவிடு என்று அவள் பின்னால் நடந்தான்.

"ஏய்! ஏய் அம்மா! இந்தா உன்னைத் தான்!" என்று கூப்பிட்டான்.

காவேரி திரும்பிப் பார்க்கவில்லை. மேலும் வேகமாக நடந்தாள்.

"உன்னைத்தான் அம்மா கூப்பிடறேன். வேகமாக ஓடறியே!" என்று கூறிக் கொண்டு அவள் எதிரில் போய் நின்றான்.

"இந்தா ஐயா! காலையிலே என் பிராணனை நீ வாங்காதே. ஒருதரம் ரயிலில் விழுந்தாச்சு; ஒருதரம் கூடையால் இடிச்சே; இப்போ வழி மறிக்கிறே. என்னை யாருன்னு நினைச்சுக்கிட்டு இருக்கே?" என்று கோபத்துடன் கேட்டாள் காவேரி.

"ஏ அம்மா! என்ன கோவம் வருது உனக்கு? இப்போ நீ எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா?" என்று முதல் தடவையாகச் சிரித்தான் துரைக்கண்ணு.

"ஆமாம், உன் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போய்யா" என்றாள் காவேரி. அவள் குரலில் முன்பிருந்த ஆத்திரம் இப்போது இல்லை. அவளும் துரைக்கண்ணுவை இப்பொழுதுதான் சரியாகக் கவனித்தாள். நல்ல புத்திசாலித்தனமான முகம். கருண்ட கிராப். அவன் நல்லவன் என்பதை அவன் கண்கள் கூறின. "போகிறேன் அம்மா! நீ யார் வீட்டுப் பெண் என்கிறதை மட்டும் சொல்லி விடு."

"ஓஹோ!" என்று சிரித்தாள் காவேரி.

"ஏன், பரிசம் போட வரப்போறியா?" என்று கேட்டாள்.

அவள் சிரிக்கும்போது அந்தக் கன்னங்களில் விழும் குழியைப் பார்க்க அவனுக்கு ஆனந்தமாக இருந்தது.

"சொல்லம்மா!" என்று கேட்டான் துரைக்கண்ணு.

"என்னைக் கேட்காதே ஐயா, இன்னிக்கி ஒரு பழம் கூட வித்தாகலே" என்று சொல்லிக் கொண்டே காவேரி நடந்தாள்.



துரைக்கண்ணுவும் மௌனமாக அவள் பின்னால் நடந்தான்.

முதல் நாள்தான் அவ தாயாரும், தமக்கையும் அவனுக்காக ஒரு பெண்ணைப் பார்த்து பேசிவிட்டு வந்திருந்தார்கள்.

"தம்பி! பெண் கருப் தான் இருக்கா. இருந்தாலு கண்ணாலேயே உன்னை ம கிடுவா" என்று கேலி செய் கொண்டே கூறினாள் தமக்

துரைக்கண்ணுவின் மன யோசனையில் ஆழ்ந்தது.

"இவளுடைய கண்க விடவா அவள் கண்கள் அ கானவை?" என்று எண் மிட்டான் அவன். இதற்கு

காவேரி பூக்கடைக் கருகில் உட்கார்ந்து பழ வியாபாரம் செய்ய ஆரம்பித்தாள்.

துரைக்கண்ணுவும் அவளுக்கு அருகில் நின்று வாழைப்பழம் விற்க ஆரம்பித்தான். வியாபாரத்தில் போட்டி வலுத்தது.

"டஜன் பன்னிரண்டணுவுக்குத்தரேன் வாங்கிட்டுப் போங்க" என்று வாங்கின விலைக்கு நான்கணு குறைத்துக் கூறினள் காவேரி.

துரைக்கண்ணு அவளை முறைத்துப் பார்த்து விட்டு, "நல்ல மலைப்பழங்க. நாலணுதானுங்க. வாங்கிட்டுப் போங்க" என்று போட்டியாகக் கத்தினன்.

காவேரி பொறுத்துப் பார்த்தாள். கடைசியாக அவளுக்குக் கோபம் வந்தது.

"என்ன ஐயா இது? என் கழுத்தை அறுக்கவா வந்தே நீ?" என்று கூறிக் கொண்டே விற்காமல் மீதியிருந்த மாம்பழங்களை எண்ணி வைத்துக் கொண்டிருந்தாள்.

அவள் தன்னுடன் பேச வேண்டும் என்று காத்துக் கொண்டிருந்த துரைக்கண்ணுவுக்கு உச்சி குளிர்ந்தது.

"இல்லையம்மா! காலையிலேருந்து நாம்ப ரெண்டு பேரும் விளக்கு வக்கிற நேரம் மட்டும் சண்டை போட்டாச்சு. இனிமேலாவது கோவத்தை விட்டுவிடு. நீ யார் வீட்டுப் பெண்ணம்மா?" என்று கேட்டான்.

காவேரி தன் அழகிய புருவங்களை நெறித்தாள். "சொல்லித் தான் ஆவனுமா? நான் பழக்காரப் பொன்னம்பலத்தின் மகள்" என்றுள்.

"அப்படிச் சொல்லு!" என்று அவளை விழுங்கி விடுவது போல் பார்த்தான் துரைக்கண்ணு.

"என்ன ஐயா அப்படிப் பார்க்கிறே?" என்று கேட்டாள் அவள்.

"நான் யார் தெரியுமா?" என்று கேட்டான் துரைக்கண்ணு.

"நான் சோசியம் படிக்கலே ஐயா!"

"நான்தான் ஓட்டு வீட்டு பாக்கியத்தம்மா மகன். எனக்குக் கலியாணம்கூட ஆகப் போவுது" என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கூறினன் துரைக்கண்ணு.

"ஆ!" என்று பேச முடியாமல் வாயடைத்து நின்றுள் காவேரி.

"பரவாயில்லே. கலியாணம் கட்டறதுக்கு முன்னுடி உன்னைப் பத்தித் தெரிஞ்சுப் போச்சு. நீ ரொம்பக் கோவக்காரி. உங்கிட்டே ஜாக்கிரதையா நடந்துக்கணும்" என்று சொல்லிக் கொண்டே அவளை ஆவல் நிறைந்த கண்களால் நோக்கினன்.

"எனக்கும் தெரிஞ்சுப் போச்சு, நீங்க வலுச்சண்டைக்கு வர ஆம்பிளைன்னு" என்று கூறிக் கொண்டே அவனைக்கடைக் கண்ணுல் பார்த்தாள் காவேரி.

அன்று மாலை ரயிலில் கூட்டம் அசாத்தியமாக இருந்தது. காவேரியை மெதுவாக முதலில் ரயில் ஏற்றி விட்டு அவளும், அவள் கூடையும் கீழே விழுந்து விடாமல் காவல் காத்து நின்றுன் துரைக்கண்ணு.

• • •

இரண்டு சூரியன்கள்

கிரேக்க சக்கரவர்த்தியாகிய மஹா அலெக்ஸாண்டர் தன்னுடைய திக்விஜயத்தில், புகழ் பெற்ற பாரசீக மன்னனுன டாரியஸ் என்பவனைப் போரில் முறியடித்தான். யுத்தத்தில் தோற்ற டாரியஸ், அலெக்ஸாண்டருடன் உடன்படிக்கை செய்துகொள்ள விரும்பினன். ஆகவே, அவன் அலெக்ஸாண்டரிடம் "மகாராஜா! தாங்கள் பாரசீகத்துக்கு மேற்கே புள்ள நாடுகளுக்கெல்லாம் சக்கரவர்த்தியாக இருங்கள். நான் பாரசீகத்துக்குக் கிழக்கே புள்ள நாடுகளுக்குச் சக்கரவர்த்தியாக இருக்கிறேன். இதற்குக் காணிக்கையாகத் தாங்கள் எவ்வளவு பொன்னும் மணியும் கேட்கிறீர்களோ அவ்வளவையும் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன்" என்றுன்.

அதற்கு அலெக்ஸாண்டர் "இரண்டு சூரியன்கள் இருந்தால் உலகம் தாங்காது: அதைப்போலவே இரண்டு சக்கரவர்த்திகள் இருந்தால் ஆசியா தாங்காது" என்று சொல்லி விட்டான்.

பொன்னிலும் மணியிலும் ஆசைகொண்ட அலெக்ஸாண்டரின் நண்பனுன பார்மீனியோ என்பவன் "அலெக்ஸாண்டர், நீங்கள் தவறு செய்து விட்டீர்கள். நான் அலெக்ஸாண்டராக இருந்திருந்தால் டாரியஸ் கேட்டுக்கொண்ட ஒப்பந்தத்துக்குச் சம்மதித்து இருப்பேன்" என்றுன்.

உடனே அலெக்ஸாண்டர் "நான்கூடச் சம்மதித்து இருப்பேன், நான் பார்மீனியோவாக இருந்திருந்தால்!" என்றுன்.

மீனு எங்கே?

நவீனன்

மீனு கண் கொட்ட வில்லை. வாரம் ஒன்ருகி விட்டது. அவளுக்குத் தூக்கமே வரவில்லை.

புரண்டு படுத்துப் பார்த்தாள். கண்களை இறுக மூடிக் கொண்டு பார்த்தாள். தலையைத் தூக்கி வெளி உலகை ஆயாசத்துடன் எட்டிப் பார்த்தாள். தூக்கத்திற்குப் பதிலாகத் துக்கம் தான் வந்தது.

மீனு கண் கலங்கினுள். இப்படி எத்தனை நாட்களுக்குத் தான் ஏகாங்கியாக இருப்பது என்று எண்ணிப் பார்த்த போது அவளுக்குப் பெரு மூச்சு உண்டாயிற்று.

அவளது காதலன் நீலன் இல்லாத வாழ்வும் ஒரு வாழ்வா என்று நினைத்துப் பார்த்தாள் மீனு.

நீலனுக்கு மீனுவை இப்படித் தவிக்க விட்டு விட்டு என்னதான் காரியம் இருக்கும்?

மீனுவின் வாழ்வில், இருந்தாற்போல இருந்து திடீரென்று ஒரு நாள் தலைப்பட்டு அதைச் சோபிக்கச் செய்தான் நீலன். அவனது வருகையினுல் அவளுக்குத் தனி இன்பமும், உல்லாச வாழ்வும் ஏற்பட்டு விட்டது என்னவோ உண்மைதான். எங்கு அவன் 'விர்'ரென்று புறப்பட்டுப் போனுலும் அஸ்தமித்ததும் மீனுவை நினைத்துக் கொண்டு 'பறந்து' ஓடி வந்து விடுவான்.

காதலன் நீலன் திரும்பி வருவதற்காகவும், ஊரில் நடக்கும் சுவாரஸ்யமான சேதிகளைப் பற்றிக் கதை கதையாக அவன் தன்னிடம் சொல்லுவதற்காகவுமே மாலை மங்குகிறது என்று மீனு குதூகலப் பட்டிருந்தது போக, சென்ற ஒரு வார காலம் 'என்னத்திற்கு இந்தச் சாயங்காலம் வருகிறது?' என்றிருந்தது அவளுக்கு.

• • •

மீனு ஒரு பெண் புறு. கண்களைப் 'படக்' 'படக்' கென்று கொட்டிக் கொண்டு மலர விழித்துப் பார்ப்பவரை மயக்கிக் கொண்டு, அந்தச் சுவரோடு சுவராகக் கட்டிக் கொடுக்கப்பட்டிருந்த மாடத்திலே, எவ்வளவோ காலமாகத் தனிக் குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தது.

ரேஷன் அரிசி வாங்க வேண்டுமே என்ற கவலை கிடையாது; வீட்டுக்காரர் திடீர் கோர்ட்டில் 'சாதரா' செய்து வீட்டைக் காலி செய்யச் சொல்லி விடுவாரோ என்ற ஏக்கத்திற்கு இடம் இல்லை.

தான் உண்டு, தன் ஆசை மணுளன் நீலன் உண்டு, அவனுடன் ஊர் வம்பு பேசும் உல்லாச நேரம் உண்டு—மீனுவின் உலகமே இப்படியாக மாறிவிட்டது.

மீனு பஞ்சு பரப்பிய சின்னஞ் சிறு படுக்கையில் படுத்துக் கொண்டு சிந்தித்துப் பார்த்தது:

"நான்பாட்டுக்குத் 'தேமே'ன்னுதானே இருந்து வந்தேன்? என் ஏகாந்த வாழ்வில் இந்தப் பொல்லாத நீலனை யார் தலையிடச் சொன்னது?......"

அன்று ஒரு நாள் எங்கிருந்தோ வந்து சேர்ந்தது நீலன்,—அந்தக் கம்பீரமான ஆண் புறு. படபட வென்று இறக்கைகளைப் பயத்தினுல் அடித்துக் கொண்டு மீனு சட்டென்று பறந்துபோய் விடலாமா என்று நினைத்தது.

ஆனுல் என்னமோ தெரியவில்லை. நீலன், மீனுவுக்கு முன்னுல் இரண்டு மூன்று அழகு நடை நடந்து காட்டி, அதைச் சொக்குப் பொடி போட்டு மயக்கிவிட்டது. இல்லாவிடில் இருந்த இடத்தை விட்டுச் சற்றும் அசைந்து கொடுக்காமல் வெட்கம் வந்து கவ்வ, மீனு மெய்மறந்து கிடக்குமா, என்ன!

கொட்டு மேளம் கொட்டவில்லை; சம்பந்திகள் படை யெடுத்து வந்து சண்டை போடவில்லை. எப்படியோ அன்றே இருவரும் தம்பதிகளாகி விட்டார்கள். பகலெல்லாம் ஊரை வளைத்துப் பறந்து விட்டு, முடிந்தால் சந்திரமண்டலம் வரை எட்டிப் பார்த்துவிட்டு, வாய்நிறையச் சேதியும் சாப்பாடும் கொண்டுவந்து தன்னைப் போஷிக்க, அழகு அகமுடையான் ஒருவன் கிடைத்து விட்ட பெருமை—மீனுவுக்கு அப்பப்ப...... தலை கொள்ளவில்லை.

அன்று ஏனே தெரியவில்லை; இரவு மணி ஏழாகியும் நீலன் வீட்டுக்கு வந்து சேரவில்லை. காரணம் தெரியாமல் மீனு தவித்தது. தவிப்பு ஒரு வார காலத்திற்கு விசுவ

ருப மெடுத்துக் கொண்டு போயிற்று. யாரைக் கேட்கலாம்? எங்கே போய்த் தேடலாம்? மீனுவுக்குப் புரியவில்லை; தெரியவில்லை. "எப்போ வருவாரோ?" என்று இரவு பகலாக ஏங்கியது.

நீலன் பேரில் பிசகு இல்லை. வழக்கம் போல அது 'விர்'ரென்று பறந்து சென்றது. போன இடத்தில் இராணுவ முகாம் ஒன்று கூடாரம் அடித்துக் கொண்டு இருப்பதைக் கண்டது. ஒரே கூத்தும் கும்மாளமுமாக இருந்தது. சற்று இறங்கிப் பார்ப்போமே என்று கூடாரம் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தது.

போதாத வேளையை என்னென்பது! சட்டென்று யாரோ ஒருவன் நீலனைப் பார்த்து விட்டு அதைத் தாவிப் பிடித்து, இரு கைகளுக்கு நடுவே சிறை செய்து விட்டான். அந்த இரும்புப் பிடியில் அகப்பட்ட நீலன் தப்பித்துச் செல்லப் படாத பாடு எல்லாம் பட்டது; சாகசமெல்லாம் செய்து பார்த்தது; பரிதாபக் குரல் கொடுத்துப் பார்த்தது. ஒன்றும் பிரயோஜனப் படவில்லை. எவ்வளவோ பேரை யுத்தத்தின்போரால் வெட்டி வீழ்த்த ஆயிர மைல்களுக்கு அப்பாலிருந்து வந்திருக்கும் அந்த மேஜர் அலெக்ஸாண்டர், கேவலம், ஒரு புறாவைப் பைத்தியக்காரத்தனமாகப் பிடித்த பிடியினின்றும் விட்டு அசட்டுப்பட்டம் கட்டிக்கொள்வானா என்ன!

"ரொம்ப அழகான புறா. இது நமக்கு வேண்டியதுதான்" என்று சொல்லிக் கொண்டே தனது கூடாரத்துக்கு எடுத்துக் கொண்டு போய்விட்டான் மேஜர். இராணுவ மனப்பான்மை இரத்தத்துடன் ஊறிப்போயிருக்கும் அவனுக்கு இரு உள்ளங்களின் துடி துடிப்புப் புரியுமா?

நாள் ஒன்று, இரண்டு என்று போய்க் கொண்டே இருந்தது. நீலனுக்கு மயும், பாலும் ரொட்டியும் ராஜோபசாரத்துடன் வேளை தவறாமல் வந்து குவிந்ததே தவிர, அது எதிர்பார்த்த விடுதலை கிடைக்கவில்லை. இப்படிச் சிறையில் கிடக்க நாம் என்ன தவறு செய்துவிட்டோம் என்று நீலனுக்குப் புரியவில்லை. "இந்த மேஜருக்கு இன்னும் மணமாகவில்லை போலிருக்கிறது. அதனால் தான் என் உள்ளம் அவனுக்குப் புரியவில்லை. துப்பாக்கி பிடித்துப் பிடித்துச் சுத்த மரக்கட்டையாகப் போய் விட்டான். இதயத்தில் இரக்கம் வற்றி விட்டது"—என்றெல்லாம் நினைத்து, அது மிகவும் வெம்பிப் போயிற்று.



அன்று ஒரு நாள் மேஜருடன், ஆகாய விமானத்தில் எங்கேயோ சுற்றிவிட்டுத் திரும்பி வந்த போது நீலனுக்கு ரொம்பவும் அவமானமாகப் போய்விட்டது. "கடவுள் கொடுத்த வரப்பிரசாதமான இரு இறக்கைகளையும் வைத்துக் கொண்டு, மனிதன் கண்டுபிடித்த போட்டிப் பறவையாகிய ஆகாய விமானத்தில் பறந்து போனேனே! என்ன அசட்டுத்தனம்!" என்று நினைத்தது நீலன். அவமானத்தால் அதன் உடல் குன்றியது.

அன்று இரவு ஒரு மணிக்கு மேலிருக்கும். இராணுவ முகாமில் சத்தம் அடங்கி விட்டது. குறுக்கும் நெடுக்குமாக ஓடும் 'ஜீப்' கார்களின் தடதட சத்தமும் அடங்கி விட்டது. மேஜர் தன்னை மறந்து, தன் மகத்தான பொறுப்புக்களையும் மறந்து, சற்று நேரம் குறட்டை ஆலாபனையுடன் ஆழ்ந்த நித்திரையில் ஈடு பட்டிருந்தான்.

நீலனுக்கு மட்டும் தூக்கமே வரவில்லை. மணிக் கயிற்றினால் அதன் மெல்லிய பாதங்கள் வளைக்கப்பட்டு, கட்டில் காலோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தது. கழுத்திலே கிடந்த இரும்பு வளையம் அதற்குப் பெரிய அவமானச் சின்னமாகத் தோன்றியது. "இப்படியும் தன் வாழ்வு திடீரென்று அஸ்தமனமாகுமா?" என்று நினைத்த போது அதற்கு எங்கிருந்தோ தனி வைராக்கியமும் அசாதிய பலமும் வந்துவிட்டது. மூக்கை வளைத்து நன்றாகத் தட்டிக் கூராக்கிக் கொண்டு, மணிக் கயிற்றுக்கு நடுவே கொடுத்து முழு பலத்துடன் அதை எப்படியாவது வெட்டிவிட முயன்றது.

விடிய இரண்டு நாழிகை இருக்கும். நீலனின் இடைவிடாத போராட்டத்துக்குப் பலன் கிடைத்தது.

நீலனுக்குப் பரிபூரண விடுதலை கிடைத்தது. 'விர்'ரென்று பறந்து வெளிக் கிளம்பியது. இனி, அந்த மேஜர், ஆகாய விமானத்தில் கிளப்பித் தன்னைத் தூக்கிக் கொண்டு வந்தாலும் பிடித்துவிட முடியாது. பறந்தது, பறந்தது, அப்படிப் பறந்தது! அந்த மனோ வேகத்துக்கு முன்னால் எது தான் எதிர்த்து நிற்க முடியும்?

*

"மீனு! மீனு!!"

நீலன் ஆவலையெல்லாம் சிரமப்பட்டுச் சமாளித்துக்கொண்டு, மாடத்தருகே வந்து இருமுறை கூப்பிட்டது. பதில் இல்லை.

மீனுவுக்குத் தன்மேல் கோபம் போலிருக்கிறது. மூக்கைத் திருப்பியபடி குப்புறப் படுத்துக்கொண்டு விம்முகிறாள் போலிருக்கிறது. சரி, போய் சமாதானப் படுத்தி, தான் பட்ட பாட்டைச் சொல்லிச் சரிப் படுத்த வேண்டும் என்று நினைத்துப் பரபரப்புடன் உள்ளே சென்றது.

என்ன ஏமாற்றம்! மாடம் வெறிச் சென்றிருந்தது. மீனுவைக் காணவில்லை. எங்கே மீனு?

நீலன் அசந்து போயிற்று. படிதாண்டாத பத்தினியாகிய மீனு தன்னையே நினைத்து உருகியபடி கண்ணும் கண்ணீருமாகக் கிடக்கும் என்று நினைத்தது எவ்வளவு பெரிய தவறு என்று தோன்றிற்று, நீலனுக்கு.

"ஒருகால் வாரம் ஒன்றாகி விட்டதே; என்னை எதிர் பார்த்து, ஏங்கித் தவித்து, ஏமாற்றமடைந்து, பிராணத்தியாகம் செய்து கொண்டு விட்டதோ?" என்று கூட நீலன் யோசித்தான். கண்ணீர் உருண்டு வந்து தெறித்து விழுந்தது.

சற்று நேரத்துக்கு எல்லாம் நீலனுக்கு ஆச்சரியம் காத்துக் கிடந்தது. அந்த வீட்டுச் சொந்தக்காரருடைய பையன் எங்கேயோ வெளியே போய்விட்டுத் திரும்பி வந்தான். அவனுடைய கைப்பிடியில் மீனு சிறை வைக்கப்பட்டிருந்தாள்.

நீலன் மாடத்திலிருந்து எழும்பிக் கண்களை விழித்து அது மீனு தானா என்று பார்த்தது. சந்தேகமில்லை, மீனுதான்! இல்லாவிடில் செவ்வரிபடர்ந்த அந்த அலகு வேறு யாருக்குண்டு?

மீனு கஷ்டப்பட்டுக் கண்களைத் திருப்பி, குரல் வந்த திக்கை நோக்கிற்று. குரலுக்குச் சொந்தக்காரன் தன் காதலன் நீலன் என்று தெரிந்து கொண்டவுடன் அதற்கு இருப்பே கொள்ளவில்லை. பதிலுக்குக் குரல் கொடுத்துத் தன் நிலைமையைத் தெரிவித்துக் கொண்டது மீனு. வேறு என்ன செய்ய முடியும்!

தெரியாத்தனமாகத் தான் போன இடத்தில் சிறைப்பட்டு, சிரமப்பட்டு விடுதலை அடைந்து ஓடோடி வந்து பார்த்தால், இங்கே மீனு இப்படிக் கைதி ஆகிக் கிடக்கிறாளே! — நீலனுக்கு ஆச்சரியத்துடன், அழுகையும் வந்தது.

• • •

அரை மணிக்குப் பிறகு நீலன் தம்பதிகள் அரசமரத்தடி உச்சாணிக் கிளையில் தங்கள் புதுக் குடித்தனத்தை மறுபடியும் ஆரம்பித்தன.

நீலன் யோசித்து யோசித்துப் பார்த்தது. அதற்கு ஒரு வழியும் புலப்படவில்லை. கடைசியில், தன் காதலியாகிய மீனு இருக்கும் இடத்துக்கே தானும் போய்ச் சேருவது என்று முடிவு செய்தது.

மறு நிமிஷம் அது இறக்கைகளைச் சடசடவென்று பலத்த சத்தத்துடன் அடித்துக்கொண்டு, அந்தப் பையனுக்கு எதிரே போய் நின்றது. பையன் திடுக்கிட்டு மிரண்டு சற்றுப் பின் வாங்கினான். அப்போது மீனு அவனுடைய பிடியிலிருந்து விடுபட்டாள்.

அவ்வளவுதான்! இரு புறாக்களும் அவ்விடத்தை விட்டு வெகு வேகமாகக் ககனமார்க்கத்தில் கிளம்பின.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

சுடச் சுட பதில்

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆப்ரகாம் லிங்கன் ஒரு நாள் தம்முடைய பூட்சைத் துடைத்துக் கொண்டிருந்தார். அப்போது, அவருக்குப் பிடிக்காத ஒரு நண்பர் அங்கு வந்து, லிங்கனைப் பார்த்து, "லிங்கன், உங்களுடைய பூட்சை நீங்களேதான் துடைத்துக் கொள்வது வழக்கமா?" என்று பரிகாசமாகக் கேட்டார்.

"ஆம், என்னுடைய பூட்சை நானே துடைத்துக் கொள்வது வழக்கம். நீங்கள் யாருடைய பூட்சைத் துடைப்பது வழக்கம்?" என்றார் லிங்கன். நண்பர் பதில் பேசவில்லை.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

வாரத்துக்கு ஒரு நாள்

என்.வி. ராமசாமி

அன்று சனிக்கிழமை. மாலை ஐந்து மணி இருக்கும். அடுத்த தெரு குப்புசாமி வந்தான்.

"ஏண்டா, நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை யாச்சே, இன்னிக்கி 'ஒரு கை' போடலாமா?" என்று கேட்டான்.

"என்னால் கண் முழிக்க முடியாது" என்றேன் நான்.

"என்னப்பா, வாரத்திலே ஒரு நாள் விளையாடப் போகிறோம். அதுவும் நாளை ஞாயிற்றுக்கிழமையாப் போச்சு. நாளை முழுக்கத் தூங்கினால் போகிறது" என்றான் குப்பு.

"சரி" என்று நான் உட்கார்ந்தேன்.

நேரம் தெரியாமலேயே போய்விட்டது. நாங்கள் சீட்டுக் கடையை மூடும்பொழுது இரவு மணி நான்கு. கண் எரிச்சலுடன் படுத்துக் கொண்ட நான், வழக்கம்போல் 'பெட்' காப்பியை சாப்பிட்டு விட்டுப் படுத்தவன்தான்; மறுபடி எழுந்திருந்த பொழுது கடியாரம் இரண்டு மணி அடித்தது.

அந்தப் பக்கம் தற்செயலாய் வந்த என் மனைவி "நன்றாயிருக்கு, வாரத்திலே ஒரு நாள் லீவு கிடைக்கிறது. அதையும் இப்படி வீணாக்கி விட்டு பொழுது விடிந்ததும் மறுபடி ஆபீஸுக்குப் போய் விடுகிறீர்கள். நானும் ஒரு மாசமாகத்தான் சொல்லிக் கொண்டு இருக்கேன், சினிமாவுக்குப் போகணும்னு. நீங்களும் ஞாயிற்றுக்கிழமை வரட்டும், 'மாடினி'க்கு அழைத்துக் கொண்டு போறேன்'னு சொல்லி ஒரு மாசமாச்சு. சீக்கிரமாக எழுந்து, குளிச்சிட்டு சாப்பிட வாங்கோ" என்றாள்.

"சரி, போதும், நிறுத்து. உனக்கு வேண்டியது சினிமாத்தானே! சீக்கிரம் 'டிரஸ்' பண்ணிக் கொண்டு கிளம்பு. இப்பவே பிடிச்சு நீ 'டிரஸ்' பண்ணிக்க ஆரம்பிச்சால்தான் ஆறு மணி ஆட்டத்துக்குப் பேகலாம்" என்று சொல்லி விட்டு நான் குளிக்கப் போனேன்.

மணி ஐந்தாகியும் அவள் கிளம்பினதாகத் தெரியவில்லை. என்னதான் செய்கிறாள் பார்ப்போம் என்று நினைத்து, உள்ளே எட்டிப் பார்த்தபொழுது, பீரோவிலிருந்த புடவை, ரவிக்கை, நகை நட்டுகள் எல்லாவற்றையும் கீழே பரப்பி விட்டு, நடுவில் அவள் உட்கார்ந்திருந்தாள். என்னைக் கண்டதும் எழுந்து "எந்தப் புடவையைக் கட்டிக் கொள்வதென்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள்தான் சொல்லுங்களேன்" என்றாள் மிகவும் அனுதாபத்துடன்.

"நீ என்ன, சினிமா பார்க்கப்போறயா, அல்லது சினிமாவிலே 'ஆக்ட்' பண்ணப் போறயா? ஏதோ ஒரு புடவையைக் கட்டிக் கொண்டோம், கிளம்பினோம் என்று இல்லாமல், இருக்கிறதை எல்லாம் வாரிப்போட்டுக்கொண்டு கடை பரப்பியிருக்கிறாயே! இருக்கிற இருப்பைப் பார்த்தால், நாளை முதல் ஆட்டத்துக்குத்தான் தயாரா யிருப்பாய்போலிருக்கே!"

"ஆமாம், உங்களுக்கு எப்போதுமே இப்படித்தான். நான் நல்ல புடவை, ரவிக்கை உடுத்திக் கொண்டு வந்தால் உங்களுக்குக் கண்ணை உறுத்தும். இது வழக்கந்தான்! அது போகிறது — எந்தப் புடவையைக் கட்டிக்க? அதைச் சொல்லுங்கள்."

"ஒரு புடவை, இரண்டு புடவை என்றால் 'டக்' என்று சொல்லலாம். நீ பீரோ நிறையப் புடவை வைத்திருக்கிறாயே!"


"சரி, உங்களைக் கேட்டால் இப்படித்தான்" என்று சொல்லிக் கொண்டே, வாண வேடிக்கை மாதிரி பூவுங் காயும் போட்ட ஒரு புடவையை எடுத்து வைத்துக் கொண்டாள். எனக்கோ அது கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை.

நாங்கள் புறப்படும்போது மணி ஆறே கால் ஆகிவிட்டது. அவள் கிளம்பி, வண்டியில் ஏறுவதற்குள் விளக்குகளைத் துடைத்து, ஒன்றை ஏற்றி வைத்தேன். திரும்பி வரும்போது இருட்டா யிருக்கும் அல்லவா?

வண்டி கொஞ்ச தூரம் போயிருக்கும். "ஆமாம், 'பர்ஸ்' எடுத்து வைத்துக் கொண்டாயா?" என்று அவளைக் கேட்டேன்.

"பர்ஸா, மறந்து விட்டேனே! இப்படி அவசரப்படுத்தினால் என்ன ஞாபகம் இருக்கும்? இப்போ என்ன பண்றது?" என்று திகைத்தாள்.

"சரி, நீ போய் தியேட்டர் வாசலிலே நில். நான் ஓடிப் போய்ப் 'பர்ஸை' எடுத்துக் கொண்டு வேகமாய் வந்து விடு



மனைவி (கணவனிடம்): நம்ம பையன் காலேஜில் சேருவதற்காக இத்தனை அப்ளிகேஷன்களையும் ரிக்ஷாவில் வைத்துக் கொண்டு போகிறேன். ஏதாவது ஒரு காலேஜிலாவது இடம் கிடைக்காமலா போகிறது, பார்ப்போம்!

கிறேன்" என்று சொல்லி விட்டு, வண்டியை விட்டிறங்கி வீட்டை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினேன்.

'பர்ஸை' எடுத்துக் கொண்டு தியேட்டருக்குள் நுழையும் போது, மணி ஏழாகி விட்டது. "படம் அரை மணிக்கு மேல் ஓடியிருக்கும், நாளைக்கு வந்து பார்ப்போமா?" என்றேன்.

"வந்தது வந்தாச்சு; இனி நாளைக்கு ஒரு தடவை என்ன? எல்லாம் இன்றைக்கே பார்த்து விட்டுப் போய் விடலாம். ஆட்டம் ஆரம்பித்து அரை மணியில் என்ன நடந்திருக்கப் போகிறது! ஏதாவது 'ஸ்லைட்' காண்பித் திருப்பார்கள். பரவாயில்லை, போவோம்" என்று என்னைச் சமாதானப்படுத்தினள் அந்தப் பிடிவாதக்காரி!

தப்பித்துக் கொள்ள வேறு வழியில்லாததை யறிந்து, டிக்கட்டை வாங்கிக் கொண்டு உள்ளேபோய் உட்கார்ந்தோம். அங்கே விசாரித்ததில், படம் ஆரம்பித்து நிஜமாகவே அரை மணிக்கு மேலாகி விட்டதென்று தெரிய வந்தது.

சினிமா முடிந்து, நாங்கள் தியேட்டரை விட்டு வெளியே வரும்போது மணி ஒன்பது. பாதி தூரம் வரையில் அவள் என்னோடு பேசவே யில்லை. ஆரம்பத்தி லிருந்து படம் பார்க்கவில்லையே யென்று அவளுக்குக் கோபம். அதற்கு யார் பொறுப்பு? சீக்கிரம் கிளம்பாதது யார் தவறு?

"என்னிக்காவது சினிமாவுக்குப் போகணும்னு, இப்படித்தான் அமர்க்களப்படும். ராத்திரி முழுவதும் சீட்டாடரதுன்னு ரெடி! சாப்பாடு கூட வேண்டாம். இப்படி (காசைக் கொடுத்து) அரையுங் குறையுமாகப் பார்த்தால் யாருக்குப் புரியறது?"

அவளுடைய முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை; தூக்கி வைத்துக்கொண் டிருந்தாள்.

வீடு வந்து சேர்ந்த நான் திடுக்கிட்டுப் போனேன். காரணம், வீட்டுக் கதவு திறந்து உள்ளே வெளிச்சம் தெரிந்தது. 'பர்ஸ்' எடுத்துக் கொண்டு வர நான் வந்து சென்ற பொழுது கதவைப் பூட்ட மறந்திருக்க வேண்டும். நிச்சயம் உள்ளே திருடன் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்துடன் உள்ளே நுழைந்தேன். என்ன ஆச்சரியம்! உள்ளே என் மைத்துனன் மணியும் அவன் மனைவி பார்வதியும் உட்கார்ந்திருந்தனர்!

"இருவரும் எங்கே போயிருந்தீர்கள்? ரொம்ப நேரமாகக் காத்துக்கொண்டிருக்கோம். வீடு திறந்து விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கதவு திறந்திருந்ததால், நீங்கள் எங்காவது பக்கத்து வீட்டுக்குத்தான் போயிருக்க வேண்டுமென்று உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். ஏது, 'டிரஸ்' பலமாயிருக்கே?" என்று கேட்டான் மணி.

என்ன சொல்வதென்று தெரியாமல் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருக்கும் போது, என் மனைவி சட்டென்று, "இப்பதான் கோடி வீட்டுக்குப்போயிருந்தேன். உடனே வந்து விடலாம் என்று நினைத்துத் தான் கதவை வெறுமனே சாத்தி வைத்து விட்டுப் போனேன்" என்று பதிலளித்தாள். அவ்வளவு சாதுரியமாக, சமயத்துக் கேற்றாற்போல் பதில் சொல்லி யிராவிட்டால், கதவைச் சாத்தாமல் போன எங்கள் அசட்டுத்தனம் அம்பலத்துக் கல்லவா வந்திருக்கும்!

"ராமு, நேரமாகிறது. பார்வதி சினிமாவுக்குப் போக வேணுமென்கிறாள். நீங்கள் இரண்டு பேரும் சீக்கிரமாகச் சாப்பிட்டு விட்டுக் கிளம்புங்கோ, போகலாம்" என்றான்.

"சரி, கோமதி! நீ சாப்பிட்டு விட்டு உங்க அண்ணாவோடு கிளம்பு. ராத்திரி முழுவதும் சீட்டாடினது என் கண்ணை எரியறது. ஆபீசுக்கு வேறே நாளைக்குப் போகணும். நான் வரலை!" என்று சொல்லிவிட்டு அவளைக் கடைக் கண்ணால் பார்த்தேன். அவளுடைய முகத்தில் ஒரே குதூகலமும் ஆனந்தமும் ததும்பியது.



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI ஜூன் 13, 1948 4 அண

REGD. NO. M. 4392



கல்கத்தாவிற்கு விநியோகஸ்தர்: ஸ்ரீ S. N. ராவ், 81 - நேதாஜி ரோடு
பம்பாய் ஆபீஸ்: 142,